பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

tamilnenjam.com

மே 2026



கலாபூஷணம்

## நஜ்முல் ஹுசைன்

நேர்காணல்

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

உதயம் 1972 – மே 2026

653


நன்மக்கள் உள்ளமெலாம்
நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும்
ஒருங்கிணைந்து திரும்பட்டும்!


ஆசிரியர் / வெளியிடுபவர் :

அமின் மொஹமெட்

இணையாசிரியர் :

முனைவர் பெண்ணியம் செல்வக்குமாரி

நிர்வாக ஆசிரியர் :

சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :

ஹிப்ஸூர் ரஹ்மான்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

கவிஞர் நெல்லை உலகம்மாள்

பாவலர்மணி இராம வேல்முருகன்

பாவலர்மணி தென்றல் கவி

வெண்பா வேந்தர் ஏடி வரதராசன்

கவிஞர் பொன்மணிதாசன்

கவிஞர் ஈழபாரதி

வடிவமைப்பு :

அமின் மொஹமெட்

ஆலோசகர்கள் :

பாட்டரசர் கி. பாரதிதாசன்

கவிதாயினி சக்தி ஜோதி


எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் நூல்கள் விமர்சனம், மதிப்புரை, அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப மற்றும் அஞ்சல் தொடர்புகளுக்கு...


**இராம வேல்முருகன்**
எண் 12 புங்கஞ்சேரி முதன்மைச் சாலை
வலங்கைமான் 612804
திருவாரூர் மாவட்டம்
தமிழ்நாடு , இந்தியா
தொடர்பு எண் +91 9952529619 ( கட்செவி )
web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com


புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன். படைப்பின்கீழ் படைப்பாளர்கள் தமிழில் பெயரையும், மின்னஞ்சல் மற்றும் தொடர்புக்கான தகவல்களையும் ஆக்கம் தங்களால் எழுதப்பட்டது எனும் உறுதியையும் தருதல் அவசியம்.

நூல் விமர்சனம் செய்திட நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும். படைப்புகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல. படைப்பாளிகளே பொறுப்பாவார்கள். ஆக்கங்களை செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

# நெஞ்சோடு நெஞ்சம்

அன்பார்ந்த வாசக நெஞ்சங்களுக்கு வணக்கம்!

திங்களொன்று கழிந்திருக்க, உங்கள் நெஞ்சோடு நெஞ்சம் உரையாட வந்துள்ளேன். அனைவரும் நலமா?

உழைப்பாளரைப் போற்றிக் கொண்டாடும் இந்நாளில்,
உழைப்பின் மகிமை தெரிந்து உழைக்கும் வர்க்கம்,
உன்னதமாய் ஏற்றங் காண வாழ்த்தி மகிழ்வோம்.
உழைப்பொன்றே உணவு தரும்.உயர்வையும் தரும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆகவே கடுமையாய் உழைப்பதில் பெருமை கொண்டு, முன்னேற்றத்திற்கான பாதையில் அடியெடுத்து வைப்போம்.

தியாகத்தின் திருநாளாய் மாத இறுதியில் மலரும் ஹஜ்ஜுப் பெருநாளானது ,கொண்டாடும் அனைவரது மனங்களிலும், வாழ்விலும் சுடராகி ஒளி வீசட்டும்!

வழமை போன்றே உங்கள் படைப்புக்களைப் பகிர்ந்து, இதழை அலங்கரித்திருக்கிறோம்.

வாசித்து உங்கள் பெறுமதிசேர் கருத்துக்களை எமக்குத் தெரிவியுங்கள்!

அனைவருக்கும் உழைப்பாளர் தின வாழ்த்துகளோடு புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துகள்!

என்றென்றும் அன்புடன்
தமிழ்நெஞ்சம் அமின்
(ஆசிரியர்)

பட விநயம் : கூகுள்

# வெண்பா உரைவீச்சு





## அவரவர் சூழல் அவரவர்க்கு

அமின் : -.

நண்பா வணக்கம்
நலம்தானா இத்தனைநாள்
உன்னைய காணலையே
ஊருல - என்னவிட்டு
எங்கேய்யா போனே
எதுக்காக நீபோனே
இங்கயெப்போ வந்தே
இயம்பு?

.

ஏடி : -

.

அங்கயிங்க கொஞ்சம்
அலஞ்சி திரிஞ்சதால
இங்கவர நேரம்
எனக்கில்லே - உங்களோட
எப்பவும் பேசிட்(டு)
இருப்பேன் இருந்தாலும்
இப்பநேரம் இல்ல
எனக்கு.

.

அமின் : -

.

சரிப்பா பரவால்ல
சாப்டியா? உன்ன
தெரியாதா நண்பா ?
தெரியும்! - தெரிஞ்சாலும்
சும்மா விசாரிச்சேன்
சொல்லு; குடும்பத்தில்
அம்மா;அப் பாநல
மா.

.

ஏடி : -

.

எல்லாம் நலமா
இருக்காங்க; அம்மாதான்
பல்லு வலின்னு
படுத்திருச்சி - பல்லுக்கு
வைத்தியம் பாத்தே
வருமானம் போகுது
பைத்தியமா ஆயிட்டேன்
பா.

.

அமின் : -

.

எல்லாம் வயசானா
இப்படி ஆகும்தான்
தொல்லையா எண்ணியிதத்
துக்கமா - சொல்லாதே
பொண்ணுபாக்க அங்கயிங்க
போனியே போனயிடம்
என்னதான் ஆச்சுன்(னு)
இயம்பு?

.

ஏடி : -

.

அதையேன்யா கேக்குற
ஆளா பறந்தும்
எதையும் பொருத்தமில்லே
இங்கே - இதைவிட
சன்னியாசி ஆயிடலாம்
சத்தியமா சொல்றேன்பா
என்னோட எண்ணம்
இது.

.

அமின் : -
.
அப்படில்லாம் சொல்லாதே
ஆமாம்; பொருத்தமா
எப்பவாச்சும் நல்ல
இணைஅமையும் - இப்பவரை
எத்தன ஊர்ப்பாத்தே
எங்கெங்கே சொல்லிவச்சே
அத்தனையும் நீங்கிடுச்
சா.
.
ஏடி : -
.
அம்பதுவூர் பொண்ண
அடுக்கடுக்கா பாத்துவந்தேன்
எம்பதாயி ரம்ஆச்சே
என்செலவு - அம்புட்டும்
என்படிப்பு என்வேல
என்காசு; கல்யாணம்
இன்னும் நடக்கலையே
ஏன்?
.
அமின் : -
.
எல்லாம் நடக்கும்யா
என்ன அவசரமாம்
நல்ல இணையமைய
நாளாகும் - இல்லைன்னா
எங்கெயாச்சும் ஊர்ல
எதாச்சும் அமைஞ்சிதுன்னா
உங்களுக்கு தொல்லை
உணர்.
.
ஏடி : -
.
பொண்ணெல்லாந் தேடி
பொழுதும் அலையிறது
இன்னும் கவலைய
ஏத்திடுது - என்னோட
மொத்த வயசும்
முழுசாவே பெண்தேடி
செத்துடதான் வைக்குதுச்
சே.
.
அமின் : -
.
அதுக்காக உன்வாழ்க்க
அப்படியே ஆனா
எதுக்காக நீபொறந்தே
இங்கே - ஒதுக்கிவச்சிக்
கல்யாணம் வேணான்னு
காலங் கழிச்சாக்கத்
தொல்லதான் ஆகும்
துணை.
.
ஏடி : -
.
எந்தவொரு தொல்லையும்
இல்லாம நாவொருத்தன்
வெந்ததத் தின்னு
விழிக்கிறேன் - அந்தவொரு
கல்யாணம் நாஞ்செஞ்சிக்
கால்கட்டு போட்டாக்கா
எல்லாம் சொமக்கணுமேய்
யா.
.
அமின் : -
.
ஊரில்நீ வாழ
உனக்குன்னு கௌரவமா
வாரிசு வேணும்யா
வாழ்க்கைக்கு - யாரிடமும்
உன்னோட காலம்
உதவின்னு கேக்காம
இன்பமா போகும்
இனி.
.
ஏடி : -
.
இவ்வளவே சம்பளம்
இவ்வளவே என்வசதி
இவ்வளவு தான்என்
இருப்புகள் - இவ்வளவு
மட்டுமே வேண்டி
மனம்வந்துத் தாலிகட்ட
எட்டவில்லை எப்பெண்ணும்
இங்கு.

அமின் : -

.

இந்தப் பிரச்சனைக்கு
ஏன்யா திருமணத்த
வந்து புறக்கணிச்சி
வாழுற - சொந்தம்
ஒருத்தருமே பெண்பார்க்க
ஒப்பலையா இங்கே
இருக்காத இப்படி
இங்கு.

.

ஏடி : -

.

எத்தனையோ காரணம்
இங்கே இருக்குதே
அத்தனையும் சொன்னா
அழுதுடுவேன் - சத்தியமா
என்னோட சூழல்
எனக்குமட்டும் தான்தெரியும்
சொன்னா புரியலையா
சொல்.

.

அமின் : -

.

ஒத்தையில வாழ்ந்தா
உனக்கொருஆள் இல்லாம
செத்தாலுங் கூட
சிரிப்பாங்க - மொத்தமா
உன்னோட சந்ததி
உன்னோட நீமுடிச்சா
என்னடா ஆகும்
இயம்பு...?

.

ஏடி : -

.

எல்லாம் தெரிஞ்சிதான்
இந்த முடிவெடுத்தேன்
இல்லறத்தில் என்றுமே
இஷ்டமில்லை - தொல்லைகள்
எல்லா திசையிலும்
என்னைப் பிடுங்குதே
சொல்றத கேளுங்க
சார்.

.

அமின் : -

.


சொல்றத எல்லாம்நான்
சொல்லிட்டேன் ஆனாலும்
எல்லாம்உன் கையில்
இனிமேலே - இல்லறத்தை
வேண்டான்னு சொல்லி
வெறுக்காதே அப்படின்னு
நான்சொல்றேன் நண்பன்
நலம்.

.

ஏடி : -

.


அவரவர் சூழல்
அவரவர்க்கு ஐயா
எவருமிங்கே வேண்டாம்
எனக்கே - தவறாக
எண்ணவேண்டாம் ஐயா
எனது மனநிலை
என்னோடு போகட்டும்
இங்கு.





# போரும் புழுதி நிலமும்





**எஸ். ஏ. கப்பார்**
**(இலங்கை)**

பாலைவனத் தரைப் பகுதி வெறிச் சோடிக் கிடந்தது. ஆள் நடமாட்டம் மிக அரிதாய்க் கிடைக்கின்ற புழுதி நிலம். ஆங்காங்கே வரண்ட புற்தாவரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் காட்சி யளித்தன. எப்போதாவது ஒரு ஆட்டி டையனைக் காணலாம்.

சுமார் நானூறு அடி உயரத்தில் ஹெலிகொப்டர் ரக இராணுவ விமான மொன்று தான் சுமந்து வந்த சிறப்புப் பயிற்சி பெற்ற ஐந்து இராணுவக் கொமாண்டோக்களைத் தரையிறக்கு வதற்கான சந்தர்ப்பம் பார்த்து மேலே வட்டமிட்டுக் கொண்டிருந்தது.





அந்த விமானத்தைச் செலுத்தி வந்த விமானி ஏற்கனவே உலக நாடுகளுக் கிடையே நடந்த பல போர்களில் இவ்வாறு தரைப் படையினரை தரையிறக்குவதில் மிகவும் அனுபவம் வாய்ந்த ஒருவர். ஏற்கனவே நடைபெற்ற போர்களில் அவர் புரிந்த சாதனைகளைப் பாராட்டி அந்த நாட்டு ஜனாதிபதியினால் தங்கப் பதக்கம் மற்றும் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்ட ஒரு உயர் இராணுவ அதிகாரி.

விமானம் நிலத்திலிருந்து சுமார் இருநூறு அடி வரை மெதுவாக மெதுவாக் கீழே இறங்கிக் கொண்டிருந்தது. ஐந்து இராணுவக் கொமாண்டோக்களும் தங்களது பயணப் பொதிகளையும் இயந்திரத் துப்பாக்கிகளையும் முதுகில் சுமந்து கொண்டு பரசூட்டில் கீழே இறங்கு வதற்காக ஆயத்தமானார்கள்.

நிலைமைகளை மிக உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு இராணுவ கொமாண் டோக்களை தரையில் இறக்குவதற்கான சரியான இடத்தையும் அந்த இடம் எந்தவொரு பாதுகாப்புமற்ற இடம் இல்லை என்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டு விமானத்தைச் சிறிது வேகமாகக் கீழ் நோக்கிச் செலுத்திய வேளை,

எங்கிருந்தோ வேகமாகச் சீறிப் பாய்ந்து கொண்டு விமானத்தை நோக்கி வந்த ஏவுகணையொன்று விமானத்தின் இடதுபக்க இறக்கையுடன் இணைந்த கதவின் ஒரு பகுதியை உடைத்துக் கொண்டு பாரிய சத்தத்துடன் நிலத்தில் விழுந்து சுக்கு நூறாகியது.

விமானம் நிலை தடுமாறி சிறகுடைந்த தும்பிபோல் வட்டமிட்டது. வலது பக்க கதவின் ஓரத்தில் அமர்ந்திருந்த இரு கொமாண்டோக்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் தங்களது பரசூட்கள் மூலம் வெளியே பாய்ந்தனர். ஏனைய மூன்று கொமாண்டோக்களையும் விமானியையும் சுமந்து கொண்டு திசைமாறிய பறவையாய் அடர்ந்த மலைகளுக்கிடையே அந்த விமானம் மறைந்து மாயமானது. அந்த விமானத்திற்கும் அதிலிருந்த ஏனைய நால்வருக்கும் என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை.

ஓரளவு பலத்த காற்றும் புழுதியும் பரசூட்டில் பாய்ந்த இரு கொமாண்டோக் களையும் மிகவும் சிரமத்தின் மத்தியில் கீழே கொண்டு வந்து சேர்த்தது. எந்தவித ஆபத்துகளும் இல்லாது நிலத்தில் கால்பதித்த இருவரும் சுற்றுமுற்றும் நோட்டமிட்டனர். கண்ணுக்கெட்டிய தூரத்தில் மனித நடமாட்டமோ குடி யிருப்புகள் இருப்பதற்கான அறிகுறிகளோ எதுவுமே தென்படவில்லை. கடந்த சில நாட்களாக இந்த நாட்டின் எல்லைப் புறத்தில் தரையிறக்கப்பட்ட தங்களது நாட்டைச் சேர்ந்த ஏனைய படையி னருடன் எவ்வாறு சேர்ந்து கொள்வதெனத் தெரியாது தடுமாறினர். சிறிது நேரம் இருவரும் உரையாடிவிட்டு தரையில் அமர்ந்தனர்.

கொமாண்டோ வில்லியம் ஜூனியர் தன் பயணப்பொதியில் கைவிட்டு அதி நவீன தொலைத்தொடர்பு சாதனம் ஒன்றை எடுத்து தன் உயர் அதிகாரிகளுடன் தொடர்பை ஏற்படுத்த முயற்சித்தான். பலமுறை முயற்சித்தும் முடியவில்லை. என்ன செய்வதெனப் புரியாது தடுமாறிய வேளை,

மற்றைய கொமாண்டோ நிக்கலஸ் றைட், 'நாம இங்க நிற்பது அவ்வளவு பாதுகாப்பு இல்லை. இந்த நாட்டுல கூலிப் படைகள் ஏராளம். அரச படைகளிடம் மாட்டினாலும் பரவாயில்லை. ஆனா இந்த




கூலிப் படைகளுக்கிட்ட மாட்டிக்கிட்டா ரொம்ம சிக்கல். நம்மள சாகடிச்சிடுவாங்க. இப்பவே இருட்டாயிடுச்சு. எதற்கும் இந்த திசைகாட்டியைப் பாரு. அதில நாம இருக்கிற லொக்கேஷனும் நல்லாத் தெரியும். அத்தோட நம்மட ஆட்கள் இருக்கிற லொக்கேஷனும்; தெரியும்' எனக் கூறினான்.

நிக்கலஸ் றைட் இடமிருந்து நவீன திசைகாட்டியைப் பெற்றுக் கொண்ட வில்லியம் தாங்கள் நிற்கும் திசைக்கு எதிரே சுமார் பத்து கிலோ மீட்டர்களுக்கு அப்பால் தங்களது நாட்டுப் படையினர் முகாமிட்டுள்ள இடம் காட்டப்படுவதை அறிந்து மகிழ்ச்சியடைந்தான்.

'நிக்கலஸ். நாம இருக்கிற இடத்தி லிருந்து சுமார் பத்து கிலோ மீட்டர் தூரத்திலே நம்மட ஆட்கள் இருக்கிறாங்க. எப்படியோ அவர்களைத் தொடர்பு கொண்டால் அவர்களுடன் சேர்ந்து கொள்ளலாம்.' என வில்லியம் கூறினான்.

'தட்ஸ் றைட். இரவோடு இரவா அந்த இடத்தை அடைந்து விட்டால் தப்பிக்கலாம். எதற்கும் அந்த திசையை நோக்கி நடப்போம்' எனக் கூறியவாறு தனது தோற்பையிலிருந்து சிறிய பிஸ்கட் பக்கட் ஒன்றை எடுத்து உடைத்து வில்லியம் இடம் நீட்டினான், நிக்கலஸ்.

பிஸ்கட் பக்கட்டிலிருந்து இரண்டு பிஸ்கட்களை எடுத்துக் கொண்ட வில்லியம் 'தங்ஸ்' எனக் கூறிவிட்டு தனது பையிலிருந்த தண்ணீர் போத்தல் ஒன்றை எடுத்து 'றை இட்' எனக் கூறியவாறு நிக்கலஸை நோக்கி நீட்டினான்.

எவ்வாறான சூழ்நிலையிலும்

தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும் இடத்திற்குத் தகுந்தவாறு உணவுகளை உட்கொள்ளவும் பழக்கப்பட்டுப் போன இவர்கள் தங்களது மனைவி மக்கள் குடும்பத்தினர் அனைவரையும் பிரிந்து வந்து தங்களது நாட்டுக்காக நாடு விட்டு நாடு சென்று பணி புரிவதென்பது ஒருவகை தியாகம்தான்.

மாற்றான் படையினரிடம் மாட்டிக் கொள்வதற்குள் எப்படியோ தங்களது நாட்டுப் படையினருடன் இணைந்து விட வேண்டுமென்ற எண்ணத்துடன் இருவரும் சிறிது இடைவெளி விட்டு நடக்க ஆரம்பித்தனர். இ,து போன்ற எத்தனையோ பாலவனங்களில் நடந்து பயிற்றப்பட்ட இவர்களுக்கு இது ஒன்றும் புதிதல்ல.

பின்னால் நடந்து வந்து கொண்டிருந்த நிக்கலஸ் திடீரென கேட்ட பலத்த வெடிச் சத்தத்தினால் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு தனது இயந்திரத் துப்பாக்கியை இயக்க முற்பட்டான்.

அதே வேளை முன்னால் சென்று கொண்டிருந்த வில்லியம் கால்கள் இரண்டும் சிதற முன்நோக்கி வீசப்பட்டு சுமார் ஐம்பது மீற்றருக்கு அப்பால் இரத்த வெள்ளத்தில் கிடந்தான்.

அப்போதுதான் நிக்கலஸுக்குத் தெரிந்தது நடந்து செல்லும் பாதையில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்பது.

வில்லியம் சிதறிக் கிடக்கும் இடத்தை நெருங்க வேகமாகத் தன் கால்களை நகர்த்திய நிக்கலஸ் தனது இடது காலைத் தூக்காது அப்படியே நின்றான். தனது காலைத் தூக்கினால் தானும் சிதறிவிடுவேன் என எண்ணி முதன் முதலாக மரண பயத்தை உணர்ந்தான்.

பல மணி நேரம் அப்படியே அசையாது நின்று கொண்டிருந்த நிக்கலஸின் கண் முன்னே வீட்டிலிருந்து வரும்போது தன் அன்பு மனைவி இரு பிள்ளைகளிடம் விடைபெற்றுக்கொண்டு வந்த காட்சி தோன்றி அவனைக் கொல்லாமல் கொன்றது. என்னதான் மனவுறுதி கொண்ட வீரனாக இருந்தாலும் தன் மனைவி மக்களின் எண்ணம் வரும் போது நிலைகுலைந்து விடுவது இயற்கைதான்.

ஜூலி அவனது காதல் மனைவி. முப்பது வயதான ஜூலியை தான் பல்கலைக் கழகத்தில் படிக்கும் போதே காதலித்துத் திருமணம் செய்து கொண்டான். ஐந்து வயதில் ஒரு ஆணும் மூன்று வயதில் ஒரு பெண்ணும் அவர்களது அன்புச் செல்வங்கள். ஜூலி ஒரு தனியார் நிறுவனத்தில் நல்ல சம்பளத்துடன் பணி புரிகிறாள். எல்லா வசதிகளும் கொண்ட வாடகை வீடு. மகனை இந்த வருடம் தான் பாடசாலையில் சேர்த்துள்ளார்கள்.

நிக்கலஸின் பெற்றோர் பிரான்ஸைச் சேர்ந்தவர்கள். ஜூலியின் பெற்றோர் நெதர்லாந்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தொழில் நிமிர்த்தம் லொஸ் ஏஞ்சலில் குடியேறியவர்கள். நிக்கலஸ் மற்றும் ஜூலி இருவருக்கும் சகோதரர்கள் இல்லை.

நிக்கலஸ் இராணுவத்தில் சேர்வது அவனது பெற்றோருக்கு விருப்பமாக இருக்கவில்லை. நிக்கலஸின் பிடிவாதம் தான் இராணுவத்தில் சேர்த்துவிட்டது. பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற முப்பத்து மூன்றே வயதான நிக்கலஸ் இராணுவத்தில் சேர்ந்து மிகக் குறுகிய காலத்திற்குள் வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரியும் படையுடன் சேர்ந்து கொண்டான்.

இறந்துபோன தன் நண்பனை நெருங்க முடியாமல் தன்னந்தனியே கால்கள் கடுக்க நிலத்தில் வைத்த காலை எடுக்க முடியாமல் இரவு முழுக்க நித்திரை இன்றி வருந்திய நிக்கலஸ் அப்போதுதான் காலைப் பொழுது புலர்வதை உணர்ந்தான்.

வியர்வை ஆறாக ஓடியது. முகம் வரண்டு பிசுபிசுப்பாக இருந்தது. தன்னைக் காப்பாற்ற சிறப்புப்படையினர் யாராவது வரமாட்டார்களா என எண்ணியவாறு தன் பார்வையைத் திருப்பிய நிக்கலஸ் தூரத்தில் ஒரு கிராமவாசி மொட்டைத் தலையுடன் வருவதைக் கண்டு ஆச்சரியப்பட்டான். தன் இரு கைகளையும் உயர்த்தி உதவுமாறு சைகை காட்டினான். இவனது சைகையைப் புரிந்து கொண்டு சிறிது தூரம் நெருங்கி வந்த அந்தக் கிராமவாசி நிக்கலஸின் தோளில் துப்பாக்கி தொங்குவதைக் கண்டதும் பதறி அடித்துக் கொண்டு திரும்பி ஓடிவிட்டான்.

சில மணி நேரங்களின் பின் அவ் வழியே ஒரு ஆட்டிடையன் மூன்று நான்கு ஆடுகளைக் கயிற்றில் கட்டிக் கொண்டு கயிற்றைத் தன் இடது கையால் பிடித்தவாறு நடந்து வந்தான். முதலில் நிக்கலஸைக் கண்டது ஆட்டிடையன் தான்.

விபரமறியாது நிக்கலஸை நெருங்கிய ஆட்டிடையன் சல்மான், நிக்கலஸின் தோளில் துப்பாக்கி இருப்பதைக் கண்டு முதலில் பயந்தான்.

சந்தர்ப்பத்தை சாதகமாகப் பயன் படுத்த எண்ணிய நிக்கலஸ் சைகைகள் மூலம் நடந்தவற்றைக் கூறி அவனைக் காப்பாற்றுமாறு வேண்டினான்.

நிலைமையைப் புரிந்து கொண்ட சல்மான் வெளிநாட்டுப் படையினரான இவர்கள் இங்கு எப்படி வந்தார்கள் என அறிய முயற்சித்து பல கேள்விகள் கேட்டான். நிக்கலஸ் கதைப்பது சல்மானுக்குப் புரியவில்லை. சல்மான் கதைப்பது நிக்கஸுக்குப் புரியவில்லை. இருந்தும் இதற்கு முன்பும் வெளிநாட்டுப் படையினர் கண்ணிவெடிகளில் சிக்கி இப் பகுதியில் மரணமானது சல்மானுக்குத் தெரியும். இவர்களுக்கு உதவப் போய் தான் மாட்டிக் கொண்டால் என்ன செய்வதென நினைத்த சல்மான் 'எல்லாம் அல்லாஹ்வின் நாட்டம்' என நம்பிக்கை கொண்டு தான் ஓட்டிவந்த ஆடுகளைக் கட்டி வந்த இரு நீளமான கயிறுகளை எடுத்து நிக்கலஸின் இடுப்பை வளைத்து இறுகக் கட்டினான்.

தூர நின்று கயிற்றை வேகமாக இழுப்பதன் மூலம் தன்னை விடுவிக்கப் போகிறான் என்பதைப் புரிந்து கொண்ட நிக்கலஸ் அதற்கு ஈடுகொடுத்து கயிற்றை இழுக்கும் போது தன் பலம் கொண்டு எகிறிவிட வேண்டுமென நினைத்து தன் உடம்பின் மேற்பகுதியில் சிலுவைச் சின்னத்தை தன் விரல்களால் இட்டுக் கொண்டான்.

சல்மான் வாட்டசாட்டமான துணிகர இளைஞன். ஆடு மேய்ப்பதுதான் அவனது தொழில். அவன் தன் பெற்றோருடன் வசிப்பது சிறிது தூரத்தில் தெரியும் மலை யடிவாரத்தில்தான்.

இடுப்பில் கட்டிய கயிற்றை மீண்டு மொரு முறை சரிபார்த்த சல்மான் நிக்கலஸின் தோளில் தொங்கிய துப்பாக் கியைக் கீழே போட்டுவிடுமாறு கூறிவிட்டு வாய்க்குள் ஏதோ முணு முணுத்தவாறு சடுதியாக கயிற்றை இழுத்தான். அதற் கேற்றால் போல் அதி வேகமாகச் செயற் பட்ட நிக்கலஸ் எகிறி வெளியே குதித்தான்.

நிக்கலஸ் எதிர்பார்த்தது போல் எதுவும் நடக்கவில்லை. நிக்கலஸ் ஓடி வந்து சல்மானைக் கட்டியணைத்து முத்த மிட்டான். எந்தவித முரண்பாடுகளுமற்ற இரு மனித ஜீவன்களின் உணர்வுகள் மட்டுமே அங்கு தென்பட்டன.

சல்மான் நிக்கலஸ் கால் வைத்திருந்த இடத்தை நெருங்கி நன்றாக உற்றுப் பார்த்தான். அது கண்ணிவெடியல்ல. ஒரு சிறிய இறப்பர் பொம்மை. அதைக் கையில் எடுத்து நிக்கலஸிடம் கொடுத்தான். அது நிக்கலஸின் பிள்ளைகள் விளை யாடும் பொம்மையை ஒத்ததாக இருந்தது. அதை தனது தோற்பையில் பத்திரப்படுத்திக் கொண்ட நிக்கலஸ் மீண்டும் சல்மானைக் கட்டியணைத்து தனது கழுத்தில் போட்டிருந்த இயேசு நாதரின் உருவத்துடன் கூடிய தங்கச் சங்கிலியை சல்மானின் கழுத்தில் மாட்டிவிட்டான். இன, மத, நிற, தேச வெறி என்பவற்றுக்கெல்லாம் அப்பால் மனித நேயம் மகத்தானது.

சிறிது நேரத்தில் நிக்கலஸின் பையிலி ருந்த தொலைத் தொடர்பு சாதனம் அலறியது. வேக வேகமாக கையிலெடுத்து உரையாடிக் கொண்டிருக்கும் போது மேலே விமானமொன்று தாழப் பறந்து நீளமான ஏணியொன்றை கீழே இறக்கியது. துரிதமாகச் செயற்பட்ட நிக்கலஸ், சல்மானின் கைகளைப் பற்றிக் கொண்டு தன் நன்றியைப் பகிர்ந்த வண்ணம் ஏணியில் தாவியது தான் தாமதம் விமானம் உயரப் பறந்து வெகுதூரம் சென்று மறைந்துவிட்டது.

ஆச்சரியத்துடன் விமானம் சென்ற திசையையே பார்த்துக் கொண்டிருந்த சல்மான் தன் ஆடுகளை நோக்கி இரண்டடி கூட வைத்திருக்கமாட்டான், எங்கிருந்தோ வந்த மூன்று நான்கு துப்பாக்கி ரவைகள் அவனது இதயத்தைக் கடந்து புழுதி நிலத்தில் சிதறிக் கிடந்தன.

சல்மான் சரிந்து கீழே விழுந்தான்.

அன்றிரவு முழுவதும் மேற்குலகத் தொலைக்காட்சிகள் 'முற்றுகையின் போது பயங்கரவாதக் கூலிப்படையினரால் கைது செய்யப்பட்டு பணயக் கைதியாக வைக்கப்பட்டிருந்த கொமாண்டோ நிக்கலஸ் றைட் என்னும் சிறப்புப் படை வீரர் அரச படையின் அதிரடி செயற்பாட்டால் மீட்கப்பட்டு நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டார்' என்ற செய்தி ஒளிபரப்பப்பட்டது.

அதேவேளை, அன்றிரவு முழுவதும் உள்நாட்டுத் தொலைக் காட்சிகள் 'மேற்குலக நாடு களின் உளவாளியாகச் செயற் பட்ட சல்மான் என்ற தேசத் துரோகி கையும் மெய்யு மாகப் பிடிபட்ட போது தப்பிக்க முயன்றதால் சுட்டுக் கொல்லப்பட்டான்' என்ற செய்தி ஒளிபரப்பப்பட்டது.



# கடவுள் என்னும் விவசாயி



இயற்கையோடு இணைந்து வாழ்பவன் விவசாயி!
இயற்கையின்றி வாழவே தெரியாதவன் விவசாயி!
மண்ணையே கடவுளாக்கி வணங்குபவன் விவசாயி!
மண்ணையே தாயாக்கி வாழ்கிறவன் விவசாயி!

அவனிக்கே உயிர் வளர்க்கவே பிறந்தவன்!
அவதிக்கே வாழ்க்கைப்பட்டு நாளும் உழல்பவன்!
சூழலைப் பார்த்து மாரியை அறிவான்!
காலத்தைப் பார்த்து பயிரைச் செய்வான்!

வறுமையின் வாசம் வருத்தம் தானே!
வரவுக்கு மேலாகும் செலவும் வீணே!
வருங்காலம் வளமாக வயலும் வேண்டும்!
வரப்புயர விசும்பிற்கு வழியாக்க வேண்டும்!

சூழலைக் கெடுத்தால் சோறா கிடைக்கும்?
சூத்திரம் என்னவோ சிந்தித்தால் கிடைக்கும்?
ஐம்பூதங்களை அழிப்பதால் யாருக்கு லாபம்?
ஐயகோ அலட்சியத்தால் அழியலாமோ நாமும்?

சாயம் இல்லாத பாசம் விவசாயிக்கு!
சந்தனமாக மணக்கும் சேறும் விவசாயிக்கு!
சாய்ந்த உலகம் சாற்றட்டும் பாமாலை!
சாய்த்திடா உரம் காக்கட்டும் தோள்களை!

கடவுள் என்னும் விவசாயி!
கடந்து போவானோ அரிதாகி?

ஏர்கலப்பையை ஏந்(த்)(தி)யவன் திருத்தெளிச் சேரியில்!
ஏறுடையானாய் படியளக்கிறான் விவசாயி மேதினியில்!
உழவனுக்குப் பின்னாலே உலகமே வரும்!
உழவனோடு பின்னிப் பிணைந்ததான வரம்!

கவிஞர் மாலதி இராமலிங்கம், புதுச்சேரி.

கலாபூஷணம்

# நஜ்முல் ஹுசைன்

## நேர்காணல்



சென்னை, பனையூரில் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் இல்லத்தில்

நேர்கண்டவர்– வஃபிரா வஃபி

**வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவரும், கவிஞரும், நூலாசிரியருமாகப் பன்முக திறமைகளுடன் மிளிரும் கவிஞர் நஜ்முல் ஹுசைன் நேர்காணலில் இணைகிறார்.**

***1. உங்களைப் பற்றிய ஓர் அறிமுகத்தை தாருங்கள்!***

நான் இலங்கையில் கொழும்பு தலை நகரை பிறப்பிடமாக கொண்டவன். ஹமீத் அல் ஹுசைனி எனும் பிரபல பாடசாலையில் கல்வி கற்றேன். தனியார் நிறுவனத்தில் முகாமையாளராக பணி புரிந்து ஓய்வு பெற்றேன்.

எனது மனைவி பிரபல ஊடகவிய லாளர், எழுத்தாளர். அரசாங்க தகவல் திணைக்கள தகவல் அதிகாரியாக பணியாற்றிய கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன். எங்களது ஒரே மகள் சட்டத்தரணி நூருஸ் ஷப்னா சிராஜுதீன்.

பாடசாலை நாட்களிலிருந்தே எழுத்துத் துறையின் பக்கம் எனது கவனத்தைத் திருப்பினேன். இலங்கை வானொலி நிகழ்ச்சிகளில் குரல் கொடுத்தேன். முஸ்லிம் சேவையில் 'இஸ்லாமிய சமய பாடசாலை' நிகழ்ச்சியில் தொடர்ச்சியாக பங்குபற்றினேன். 1986 ல் 'இளைஞர் இதயம்' எனும் நிகழ்ச்சியை நடத்தினேன். தேசிய பத்திரிகைகளில், சஞ்சிகைகளில் கவிதை, கட்டுரை, சிறுகதை போன்றவை எழுதியிருக்கிறேன். முதல் ஆக்கம் தமிழகத்தின் 'குமுதம்' சஞ்சிகையில் வெளிவந்தது. 'ராணி' இதழிலும் கவிதை வெளிவந்துள்ளது.

***2. உங்கள் இலக்கியப் பணிகள், முன்னெடுப்புக்கள் பற்றி....***

ஆம் இலக்கியத்தோடுதான் வாழ்ந்து வருகிறேன். ஆரம்பத்தில் மரபுக் கவிதைகளில் ஏற்பட்ட ஈர்ப்பு இலக்கியத் துறைக்கு இழுத்து வந்தது. பிறகு புதுக்கவிதையிலும் ஆர்வம் ஏற்பட்டது. அதன் காரணமாக 1992 ல் 'பனித்தீ' எனும் புதுக்கவிதை நூலை வெளியிட்டேன்.

*1981ல் உருவான இலங்கை தமிழ்க் கவிஞர்களின் தேசிய அமைப்பான 'வலம்புரி கவிதா வட்ட' மேடைகளில் அக்காலத்திலேயே இணைந்து கவிதை பாடியமை இக்கவிதை நூலை வெளியிடும் ஆர்வத்தைத் தந்தது. இப்போது 'வலம்புரி கவிதா வட்ட' தலைவராக கடந்த 2023 ல் இருந்து வழிநடத்தி வருகிறேன்.*

***3. வகவம் என்றொரு அமைப்புக்குத் தலைவராக, பௌர்ணமிகள் நூறைத் தாண்டி வெகுதூரம், வெற்றிகரமாக இலக்கிய சங்கமத்தை கொண்டு செல்கிறீர் கள். இதன் ஆரம்ப வளர்ச்சி, எதிர்கால முயற்சிகள் பற்றி சொல்லுங்களேன்!***

*வகவம் என்ற சுருக்கப் பெயரால் அழைக்கப்படும் வலம்புரி கவிதா வட்டம் 1981 ல் ஆரம்பிக்கப்பட்டது. டொக்டர் தாஸிம் அகமத், மறைந்த சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர்கனி, மறைந்த கவின்கமல், கலைக்கமல், டொக்டர் நூர்தீன் ஆகியோரால் உருவாக்கப்பட்ட அமைப்பு. நானும் அதன் ஆரம்ப கால உறுப்பினர். ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் மேடையில் கவிதை பாடும் கவிஞர்களுக்கு களமமைத்துக் கொடுப்பதே அதன் முதலாவது இலக்கு. எமது நாட்டில் ஏற்பட்ட சில அசாதாரண சூழல்கவியரங்கைதொடர்ந்துநடத்துவதில் சிரமத்தை ஏற்படுத்தியிருந்தது. மீண்டும் 2013ல் அது மீள் ஆரம்பம் செய்யப் பட்டபோது நான் தலைவராக நியமிக்கப் பட்டேன். இறைவன் அருளால் எனது தலைமையின் கீழ் இதுவரை 120 கவியரங்கங்கள் செய்திருக்கிறோம். இது தமிழ் பேசும் கவிஞர்களின் அமைப்பு. இதில் தமிழர், முஸ்லிம் என்ற பேதமின்றி மிகவும் ஒற்றுமையுடன் பயணம் செய்கி றோம். இந்த அமைப்பின் செயலாளராக இளநெஞ்சன் முர்ஷிதீனும், பொருளாளராக ஈழகணேஷும், தேசிய அமைப்பாளராக எஸ். தனபாலனும் விளங்குகின்றனர்.*

*கொரோனா காலத்தில் நாடே முடங்கியிருந்த நேரத்தில்கூட நாம் எமது பௌர்ணமி கவியரங்கை முடக்கவில்லை. எமது 67 ஆவது கவியரங்கை 07/05/2020 அன்று* Zoom *ல் நடத்தினோம். தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையில் நடந்த இக் கவியரங்கே முதலாவது* Zoom *ல் நடந்த கவியரங்காக இருக்க வேண்டும். அதுபோன்றே 68 ஆவது கவியரங்கு கவிச்சுடர் சுபாஷினி பிரணவனின்*

**தமிழ்நெஞ்சம் ஆசிரியர் திரு. அமின் அவர்களுக்கு நூல்கள் வழங்கியத் தருணம்.**



தலைமையில் 05/06/2020 ல் Zoom ல் நடந்தது.

கொழும்புக்கு அப்பாலும் பலகத்துறை இலக்கிய வட்டத்தோடு இணைந்து பலகத்துறையில் எங்கள் கவியரங்கை நடத்தியுள்ளோம்.

இரண்டு ஆண்டு விழாக்கள் நடத்தியிருக்கிறோம். எமது நூறாவது கவியரங்கை விழாவாக நடத்தினோம். அதில் சிறப்பம்சமாக எமது வகவ மேடையில் கவிதை பாடிய பெரும்பான்மையான கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து 'வகவக் கவிதைகள்' என்ற நூலை வெளியிட்டோம். இதை கவிஞர் ஈழகணேஷும், நானும் தொகுத்து வழங்கினோம். எமது ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ. நாகூர்கனி அவர்களின் மறைவையொட்டி பிரத்தியோகமாக நினைவரங்கு ஒன்றை நடாத்தினோம். எமது 125 ஆவது கவியரங்கைக்கூட விழாவாக நடாத்த நாங்கள் திட்டமிட்டுள்ளோம்.

பல புதிய திட்டங்களோடு இளைஞர், யுவதிகளின் பலத்தோடு இன்னும் முனைப்போடு பயணம் செய்யவும் இளைய தலைமுறையினரிடம் இதனை ஒப்படைக்கவும் காத்திருக்கிறோம்.

**4. பலவித இலக்கிய நிகழ்வுகளுக்காக கடல் கடந்த பயணங்களையும் மேற் கொண்டிருக்கிறீர்கள். அவற்றுள், உங்கள் மனது மறக்காத ஒரு நிகழ்வாக எதைக் குறிப்பிட விரும்புகிறீர்கள்?**

ஆம், 2016 ல் தமிழகத்திலே திராவிடர் கழகத் தலைவர் கி. வீரமணி, சுப வீரபாண்டியன், கவிஞர் இளமதி போன்றோர் முன்னிலையில் திருமண வாழ்த்துக் கவிதை பாடியது, 2022 ல்

வேறாக வேர்கள் நூல் வெளியீட்டு விழாவின் போது



ஸ்கை தமிழ் பணிப்பாளர் ஜே.எம். பாஸித் ஏற்பாட்டில் 'வண்ணத் தமிழெடுப்போம் வானமெங்கும் சிறகடிப்போம்' எனும் மகுடத்தில் கத்தார் நாட்டில் இலங்கை இந்திய கவிஞர்களுக்கு தலைமை தாங்கி கவியரங்கம் நடத்தியமை போன்றவை இன்றும் நினைவில் நிற்கின்றன.

2011 ஆம் ஆண்டு மலேசிய கோலாலம்பூரில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களின் தலைமையில் சர்வதேச கவிஞர்களுடன் கவிதை பாடிய அந்த நிகழ்வு கொஞ்சம் ஆழமாகவே எனது மனதில் இடம்பிடித்துள்ளது.

**5. உங்கள் படைப்புக்கள், நூல்கள் பற்றி....**

1992 ம் ஆண்டு 'பனித்தீ' எனும் புதுக்கவிதை நூலை வெளியிட்டேன். 2018 ஆம் ஆண்டு 'இனிவரும் நாட்களெல்லாம்' என்ற கவிதை நூலை வெளியிட்டேன். இதனை நான் வெளியிட தயாரான நேரம் எனது மனைவி நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், 25 வருடங்களுக்குப் பிறகு ஒரு நூல் வெளியிடுவதா என்று சொல்லி, நான் மேடைகளில் பாடிய கவிதைகளைத் தொகுத்து அதனை 'நஜ்முல் ஹுசைனின் நட்சத்திரக் கவிதைகள்' என்ற பெயரில் அதே வேளை வெளியிட்டார். இதனை அவர் எனக்குத் தெரியாமலேயே இரகசியமாகவே செய்தார். அதன் இறுதிக் கட்டத்திலேயே அது எனக்கு தெரியவந்தது.



ஆதவன் தொலைக்காட்சி நிகழ்வில் கவிராஜ் அவர்களுடன்.

நான் பத்திரிகைகளுக்கு சஞ்சிகைகளுக்கு எழுதிய சிறுகதைகளைத் தொகுத்து 2023 ல் 'வேறாகா வேர்கள்' எனும் நூலை வெளியிட்டேன்.

வலம்புரி கவிதா வட்டத்தின் நூறாவது கவியரங்கமும், 'வகவக் கவிதைகள்' நூல் வெளியீடும். மேடையில் இலங்கை தேசிய பத்திரிகைகளான தினகரன் பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் ஸ்ரீ கஜன், செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், பொருளாளர் ஈழகணேஷ், தேசிய அமைப்பாளர் எஸ். தனபாலன்



இது தவிர மேமன்கவியோடு இணைந்து 'வகவச் சுவடுகள்', ஈழகணேஷோடு இணைந்து 'வகவக் கவிதைகள்' ஆகிய நூல்களுக்கு தொகுப்பாசிரியராக இருந்திருக்கிறேன்.

***6. ஓர் எழுத்தாளன் எப்போது மனநிறைவு பெறுகிறான்?***

தனது எழுத்து அங்கீகரிக்கப்படும் போது ஓர் எழுத்தாளன் மனநிறைவு பெறுகிறான். எல்லா எழுத்தாளர்களும் தங்கள் எழுத்து பாராட்டப்பட வேண்டும் என்று நினைப்பது இயல்பு. ஆனால் எமது எழுத்து பற்றிய மற்றவர்களின் கருத்துகளையும் நாம் ஜனநாயக ரீதியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

***7. இன்றைய தலைமுறையினருக்கு இலக்கியம் மற்றும் வாசிப்பு மீதான பிடிப்பு குறைந்திருப்பதற்கு காரணம், புதிய தொழிநுட்ப முறைகளால் ஏற்பட்டுள்ள கவனச்சிதறலா அல்லது இளம் பருவத்தினரின் அலட்சியப் போக்கா?***

அதனை புதிய தொழில்நுட்ப முறைகளால் ஏற்பட்டிருக்கும் கவனச் சிதறல் என்று சொன்னால் அது பிழையல்ல.

ஆனால் இந்த தொழிநுட்பம் பழைய இலக்கியங்களை அவர்கள் இலகுவில் தேடிப்பிடித்து கற்க வைக்கின்றது

கலாபூஷணம் அரச விருது பெற்றபோது





தமிழகத்தில் திராவிடர் இயக்கப் பேரவையால் நடத்தப்பட்ட நூல் வெளியீட்டு விழாவில் கவிதை வாசித்தல்

என்ற உண்மையையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

நூலாக கையில் எடுத்து வாசிப்பது குறைந்திருந்தாலும் வலைத்தளங்களில் வரும் ஆக்கங்கள், செய்திகள் இன்றைய இளைய தலைமுறையினராலும் பரவலாக வாசிக்கப்படுகின்றன.

வாசிப்பு குறைந்து விட்டது என்று சொல்லுவதைவிட வாசிப்பு முறை மாறிவிட்டது என்று சொல்லலாம்.

***8. AI எனும் செயற்கை நுண்ணறிவைப் பற்றிய உங்களது கண்ணோட்டம் எப்படியிருக்கிறது?***

இன்று நாங்கள் அதிசயக்கத்தக்க வகையிலே AI யின் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இவற்றில் நாம் தெரிந்து கொண்டிருப்பவைகளையும் தாண்டி அது விஸ்வரூபம் எடுத்துள்ளது.

ஒரு கவிதை எழுத, கதை எழுத ஓர் எழுத்தாளனே தேவையில்லை என்ற நிலையினை பார்க்கும் போது மிகவும் கவலையாகவும் அதிர்ச்சியாகவும் இருக்கிறது.

ஒரு பாடலை எழுதி இசையமைப்பாளரின்றி AI உதவியுடன் ஒலிப்பதிவு

செய்தபோது மகிழ்ந்த எங்களுக்கு கவிதை, கதையை AI ல் செய்யும்போது கோபம் வருகிறது.

எனினும் AI ன் பயணம் இன்னும் பூதாகரமாகத்தான் அமையும் என்பதை எதிர்வு கூறலாம்.

**9. தமிழ் பேசும் கலைஞர்களுக்கான/ எழுத்தாளர்களுக்கான அரச அங்கீகாரங்களும், அனுசரணைகளும் கிழக்கு மாகாணத்தைப் போன்று, மேல் மாகாண வாழ் கலைஞர்களுக்கு/ எழுத்தாளர்களுக்கு கிடைப்பதில்லை என்று பரவலாகப் பேசப்படும் கருத்தில் எந்தளவு உண்மை இருக்கிறது?**

ஆம். இது ஓர் உண்மையான

கம்பளைதாசன் அவர்களின் முத்தமிழ் மன்ற ஏற்பாட்டில் நடந்த பட்டிமன்றத்தில் கொழும்பு கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி ஜெயராஜ் அவர்கள் பொன்னாடை பார்த்துக்கிறேன்





வலம்புரி கவிதா வட்டம் சார்பில் கவிமாமணி அல் அஸூமத் அவர்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்கள் 'வகவ விருது' வழங்கியபோது

விடயம். வடக்கு கிழக்கு போன்று தமிழ் கலைஞர்களை, எழுத்தாளர்களை அடையாளம் காணமுடியாத பெரும்பான்மை இன மக்கள் இதற்கான நடுவர்களாக நியமிக்கப்படுவதே இதன் முதல் காரணமாகும்.

மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருந்த கலாபூஷணம் அரச விருது போன்றவை கொழும்பு, கம்பஹா போன்ற மாவட்டங்களில் தமிழ், முஸ்லிம் கலைஞர்களை அடையாளம் காணாது (புறக்கணித்து என்ற சொல்லை உபயோகிக்கவில்லை) சில ஆண்டுகளாக விருது வழங்கி எமது வயிற்றெரிச்சலை கொட்டிக் கொள்கிறார்கள். தமிழ் முஸ்லிம் கலைஞர்கள் விண்ணப்பித்தாலும் கூட அவற்றை வாசித்துப் பார்க்க பொறுப்பான ஒருவருமே இல்லை என்பது வேதனையானது.

இவ்வாறுதான் இன்னும் பல விடயங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. AI பற்றி பேசும் இந்த யுகத்திலும் இவ்வாறான தவறுகள் நடைபெறுவதை எந்த வகையில் ஏற்றுக் கொள்ள முடியும்?

கிழக்கு மாகாணத்தில் வீடு தேடிச்



தமிழக யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மொஹிதீன் அவர்களோடு.

சென்று கலைஞர்கள் கௌரவிக்கப்படுவது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. இங்கே விண்ணப்பித்தவர்கள் கூட கண்களில்படாமல் இருப்பது வேதனை தருகிறது.

**10. இலங்கையைப் பொறுத்தவரை இலக்கியக் குழுமங்களின் வளர்ச்சியும், அவற்றின் பங்களிப்பும் எப்படி அமைந் துள்ளன?**

அன்று முதல் இன்றுவரை எம் நாட்டில் இலக்கியக் குழுமங்கள் இயங்கிக் கொண்டுதானிருக்கின்றன. அதன் மூலமாகத்தான் நாம் எம்மிடையே பல இலக்கியவாதிகளை அடையாளம் கண்டிருக்கிறோம். இன்றும் அவ்வாறான பல அமைப்புகள் இயங்கி தங்களாலான பங்களிப்புகளை செய்து வருகின்றன. இடைநடுவில் செயலிழந்த சில அமைப்பு களும் இருக்கின்றன. காலத்தின் ஓட்டத்தில் அவையெல்லாம் தவிர்க்க முடியாதவை.

**11. சமூக சீர்கேடுகளைத் தடுப்பதில் ஓர் எழுத்தாளனின் பணியும், பங்களிப்பும் எவ்வாறு அமைய வேண்டும்?**

ஓர் எழுத்தாளனின் கடமையாக அது இருக்கிறது. வெறும் சுவைக்காக மட்டும் எழுதிவிட்டுப் போகக் கூடாது. தமது எழுத்தின் மூலம் சமுதாயத்தில் காணப்படும் குறைகளை திருத்த முடியுமாறு ஓர் எழுத்தாளன் எழுதுகிறான் என்றால் அவனை வெற்றிப் பெற்ற எழுத்தாளன் எனலாம். வாசிக்கும் வாசகர்களை தடம்மாற வைக்கும் எழுத்துகளை எழுதுபவர்கள் சிலவேளை புகழ்பெற்ற எழுத்தாளர்கள் ஆகலாம். எனினும் அவர்கள் பாவத்தின் பங்காளர்களாகத்தான் இருக்க முடியும்.

**12. பண்டைய கால இலக்கியம் என்பதை சற்றும் திரிபடைந்து விடாமல், எதிர்காலத் தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்க என்ன செய்யலாம்?**

நூற்றுக்கு நூறு அவ்வாறு செய்தல் சாத்தியப்படும் என்று கூற முடியாது. தலைமுறைக்கு தலைமுறை சிந்தனை மாறுபடுகிறது. புதிய தலைமுறைக்கு பழைய தலைமுறையினரின் செயல் நகைப்புக்கிடமாகக்கூட இருக்கலாம்.

அதனால் இலக்கியத்தை அவ்வாறே



குடும்பத்தினருடன் - மனைவி நூருல் அயின், மகள் நூருஸ் ஷப்னா, மருமகன் சிராஜுதீன், பேரர்கள் முஹம்மத் சிமான், முஹம்மத் சிமாஸ்

கடத்துதல் நடைமுறை சாத்தியமற்றது. எனினும் பழம் பெரும் இலக்கியங்களின் பெருமைகள் கட்டாயம் இளம் தலைமுறையினருக்கு எத்தி வைக்கப்படல் வேண்டும். அதனையும் தெரிந்து கொண்டு படைக்கப்படும் நவீன இலக்கியம் பலம் மிக்கதாய் அமையும்.

***13. இன்றைய சமூகத்தினரிடையே மொழிப்பற்று, இலக்கிய ஈடுபாடு என்பன மேம்பட என்னென்ன வழிமுறைகளைக் கையாளலாம்?***

தமிழுக்கு அமுதென்று பேர் என்று வெறுமனே சொல்லிக் கொண்டிருக்காமல் நாம் எமது மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்பட வேண்டும். தமிழை பிழையற எழுதும் சமூகத்தை உருவாக்க வேண்டும்.

இன்று தமிழ் பேசும் மக்கள் உலகளாவிய ரீதியில் கால் வைத்திருக்கிறார்கள். அவ்வாறு செல்பவர்கள் தங்கள் தாய் மொழி தமிழ் என்பதை மறக்கக் கூடாது. இன்னொரு நாட்டுக்கு புலம்பெயரும்போது அந்நாட்டு மொழியினைக் கற்பதுவும், தங்கள் பிள்ளைகளுக்கு கற்றுக் கொடுப்பதுவும் தவறில்லை. என்றாலும் தாய் மொழியாம் தமிழை எந்த வேளையிலும் கைவிடக் கூடாது.

வெளிநாடுகளில் வாழும் தமிழ் பேசும் மக்களில் சிலர் தமிழ்ப் பற்றோடு வாழ்ந்தாலும் பலர் தமிழை மறந்தே வாழ்கின்றனர். அவர்களது பிள்ளைகள்



கத்தார் கவியரங்கு

தமிழை பேசுவதை விட்டும் மறந்து வாழ்கின்றனர். பிறநாடுகளில் பரந்து வாழ்வதன் மூலம் தமிழை இன்னும் இன்னும் வளர்க்க உறுதுணை புரிகின்ற வாய்ப்பை நாம் தவறவிட்டுக் கொண்டிருக்கிறோம்.

பண்டைய எகிப்து பிரமிட்டில் எமது தமிழ் எழுத்துகள் இருப்பதை நாம் அண்மையில் அறிந்தோம். அதனைப் பார்த்தபோது எனக்கு தோன்றியது




இதுதான், அன்று எகிப்தில் முத்திரை பதித்த தமிழ் மகனும் தமிழில் பேசுவதைத் தவிர்த்திருப்பான். அவன் ஒழுங்காக தமிழ் பேசியிருந்தால் இன்று எகிப்திலும் தமிழ் பேசு மொழியாகி இருக்குமே, என்று

***14. இதுவரை நீங்கள் பெற்ற விருதுகள், பரிசுகள், கௌரவங்கள் பற்றி சொல்லுங்கள்!***

- *2002ம் ஆண்டு அரச விருதான கலாபூஷணம் விருது*
- *இலங்கை அரசின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டின் போது "படைப்பாளர் விருது"*
- *அகில இன நல்லுறவு ஒன்றியம் வழங்கிய "கவிமணி" பட்டம்.*
- *இசைக்கோ என்.எம்.நூர்தீனின் தலைமையில் இயங்கிய முஸ்லிம் கலைஞர் ஒன்றியம் வழங்கிய "கவிமாமணி"*
- *ஜே.எம். பாஸித்தின் ஸ்கை தமிழ் வழங்கிய 'துணிந்தெழு' விருது*

- மேலும் பல கலை இலக்கிய அமைப்புக்கள் பாராட்டி கௌரவித்துள்ளன.

தினகரன் வாரமஞ்சரி செந்தூரம், தமிழனின் தமிழ் முரசு,

டொக்டர் ஞானசேகரனின் 'ஞானம்', அஷ்ரப் சிஹாப்தீன் வெளியிட்ட 'யாத்ரா',

வஃபீரா வஃபீயின் முத்தமிழ் கலசம் ஆகியன என்னை அட்டைப்பட அதிதியாக கௌரவித்துள்ளன.

*15. ஒரு மூத்த எழுத்தாளராக வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?*

எல்லா மூத்த எழுத்தாளர்களும் சொல்வதைத்தான் நானும் சொல்ல விழைகிறேன். நிறைய வாசியுங்கள்; தரமானவற்றை இனங்கண்டு வாசியுங்கள். அவை உங்களை வளப்படுத்தும். ஒருசில வரிகளை எழுதும்போதே 'மகாகவி' பட்டம் வழங்கும் முகநூல் குழுமங்களை நம்பாதீர்கள். அவை உங்களுக்கு. வழிகாட்டுவதற்கு பதிலாக உங்களை தவறான பாதையில் அழைத்துச் செல்கின்றன. வெறுமனே பட்டங்களால் உங்களை அலங்கரிக்க எண்ணாதீர்கள். அவை மாயை என்று தெரிந்து கொள்ளுங்கள். நிறைய வாசித்து விட்டு நீங்கள் எழுதும் உங்கள் எழுத்துகளில் வலிமை சேர்வதை நீங்களே உணர்ந்து கொள்வீர்கள். மூத்த எழுத்தாளர்களை மதித்து நடவுங்கள். சிலர் உங்களை அலட்சியம் செய்யலாம். உங்கள் எழுத்துகள் மூலம் நீங்கள் யாரென்று நிரூபியுங்கள்.


*16. தமிழ்நெஞ்சம் பற்றிய உங்கள் கருத்துக்களை நம் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளலாமே!*

பிறநாடுகளில் வாழும் தமிழ் பேசும் மக்கள் தமிழைப் புறக்கணிக்கிறார்களே என்ற என் போன்றோரின் மனக்குறையை தீர்க்கும் ஊடகமாக, பிரான்ஸிலிருந்து வெளிவரும் 'தமிழ்நெஞ்சம்' திகழ்கிறது. உறுதியுடன் தமிழ்ப் பணியாற்றும் 'தமிழ்நெஞ்சம்' போற்றுதற்குரியது. உலகெங்கும் வாழும் தமிழில் ஆர்வமுள்ள எழுத்தாளர்களை ஒரே குடையின் கீழ் கொண்டு வரும் அருமையான பணியை அது செய்து வருகிறது. எமது இலங்கை எழுத்தாளர்களுக்கும் உரிய களமமைத்து அது செய்து வரும் சேவை மகத்தானது.

'தமிழ்நெஞ்சம்' ஆசிரியர் திரு. அமின் பற்றி கட்டாயம் குறிப்பிட வேண்டும். மிகச் சுவையான மரபுக் கவிதைகள் படைக்கும் ஆற்றல் உள்ளவர். அவரது வெண்பாக்களுக்கு நான் ரசிகன்.

திரு. அமின் அவர்களின் **'தமிழ்நெஞ்சம்'** இன்னும் இன்னும் வீறுநடை போட மனதார வாழ்த்துகிறேன். என்னை நேர்கண்ட திருமதி வஃபீரா வஃபீக்கும் பிரத்தியேக நன்றி.

ஆழமான கருத்துப் பகிர்வில் அழகிய சிந்தனை முத்துக்களை உதிர்த்த உங்களுக்கு தமிழ்நெஞ்சம் சார்பில் நன்றிகளும் நல்வாழ்த்துகளும்!



# மௌனத்தில் மலரும் ஒரு வாழ்க்கை

மாலை நேரம்
சூரியன் சோர்ந்து போன கண்களை
மூடிக் கொள்ளும் வேளையில்,
என் மனசு மட்டும்
உன்னை நினைத்துக் கொண்டு
விழித்துக் கிடக்கிறது...

காற்று வந்து
என் தலைமுடியை வருடும் போது,
அது உன் விரல்கள் தானோ என்று
ஒரு சிறிய பொய் நம்பிக்கையில்
நான் சிரிக்கிறேன்...

மரத்தின் கீழ் அமர்ந்தேன் இன்று,
அதன் நிழல் மட்டும் இல்லாமல்
அதன் அமைதியும் எனக்கு
தோழனாகிவிட்டது...

'நீயும் யாருக்காகவும் காத்திருக்கிறாயா?'
என்று கேட்டேன் அந்த மரத்திடம்...
அது ஒரு இலையை விழச்செய்தது
பதில் சொல்லாமல்...

பறவைகள் கூட
தங்கள் வீடு தேடி பறக்கின்றன,
ஆனால் என் எண்ணங்கள் மட்டும்
உன் பெயரைச் சுற்றி வட்டமிடுகின்றன...

நிலவு மெதுவாக மேலே ஏறும்போது,
அதன் வெளிச்சம்
என் இதயத்தில் இருக்கும் இருளைத்
தொட்டுப் பார்க்கிறது...

ஆனால் அது கூட கேட்கவில்லை,
'எதற்காக இவ்வளவு அமைதி?' என்று...
சில நேரங்களில்,
உன்னை நான்
மறந்துவிட்டேனா என்று நினைக்கிறேன்...
ஆனால் ஒரு சிறிய நினைவு கூட
என் முழு உள்ளத்தையும்
உன்னால் நிரப்பிவிடுகிறது...

நீ அருகில் இல்லாததாலோ என்னவோ,
நான் என்னுள்ளேயே
பேசிக்கொண்டு இருக்கிறேன்...
நான் சிரிப்பதையும்
நான் அழுவதையும்
நான் மட்டும் தான் அறிவேன்...

ஒரு தேநீர் கிண்ணம்
என் கைகளில் குளிர்ந்து போகிறது,
உன்னோடு பேசாத இந்த நேரங்களில்
எல்லாமே சுவையிழந்துவிடுகிறது...



‘ஒரு நாள் நீ திரும்பி வருவாயா?‘ என்று
கேட்காமல் இருக்க முயற்சிக்கிறேன்…

ஏனெனில் பதில் இல்லாத கேள்விகள்
இதயத்தை இன்னும் அதிகமாக
காயப்படுத்தும்…

இரவு ஆழமாகிறது…
நட்சத்திரங்கள் எல்லாம்
என் கதைகளை கேட்க
வரிசையில் நிற்கின்றன…
ஆனால் நான் சொல்லவில்லை.
ஏனெனில்
சொன்னால் கூட அவை
புரிந்துகொள்ளாது…
மௌனம் மட்டும் தான்
என் உண்மையை அறிந்திருக்கிறது…

ஒரு நாள்,
இந்த காத்திருப்பும்
இந்த நினைவுகளும்
ஒரு இனிய கதையாக மாறிவிடும் என்று
நம்புகிறேன்…

அந்த நாள்வரை,
நான் இங்கேதான்…
ஒரு மரத்தின் நிழலில்,
ஒரு தேநீரின் வாசனையில்,
ஒரு நினைவின் ஆழத்தில்…
உன்னை நினைத்துக் கொண்டே,
அமைதியாக வாழ்ந்து விடுவேன்…

அஸ்மியா நிஸாம்
அக்குறணை

## ஆற்றினுள் துளியாக

என்னைக் கட்டுப்படுத்தும்
உரிமையை
அனுமதியின்றி எடுக்கிறாய்
உன் அதிகாரத்தின் கீழ்
அடிமையாக நடத்த
முற்படுகிறாய்
உனக்காக என்
தனித்துவத்தை
இழக்க முடியாத தவிப்பில்
சிலகாலமாய்

என் நகர்வுகள்
சுதந்திரமாக இருப்பதை
உறுதி செய்ய வேண்டிய
தருணத்தில்
உன்னை விட்டு
அந்நியப்படுத்தல் மட்டுமே
என்னால் முடிந்தது

ஆற்றில் ஓடும் நீரில்
துளியாக இருந்து
சுதந்திரமான எனது இருப்பை
உறுதி செய்யத் துடிக்கிறேன்
பாத்திரத்தில் அடைத்து
பக்குவமாகப் பாதுகாப்பதாக
எண்ணுகிறாய்

வீணான பொழுதுகளைக்
கடந்து
விண் நோக்கிப் பாயும்
அம்பாக
என்னை நான் மாற்றிக்
கொள்கின்றேன்
இனி என் நகர்வுகள்
வெறும் அடைத்த
பாத்திரத்தினுள் அல்ல
ஆற்றினுள் துளியாக

அ . ஜெகன்.
சுவிஸ்

# அமெரிக்கர்களின் பண்பு!

கடந்த பிப்ரவரி மாதம் நண்பர்களுடன் அமெரிக்காவின் துசான் (Tucson) நகரத்திற்குச் சென்றிருந்தேன். சுமார் இரு வார காலம் அங்கே தங்கி இருந்தோம். நண்பர் வாடகைக் காரை எடுத்திருந்தார். நாமே ஓட்டுநர்.

ஒருநாள் இரவு நேரம். காரின் ஒரு சக்கரத்தில் காற்று குறைவாக இருந்ததால், காற்று பிடிக்க பெட்ரோல் பங்க் சென்று இருந்தோம்.

காற்று பிடிக்கும் கருவியில் மூன்று டாலர் பணத்தைப் போட்டால் காற்று பிடித்துக்கொள்ளலாம்! அதில் எப்படி பணம் போடுவது, எப்படி அதை இயக்குவது என்று நாங்கள் சற்று தயங்கிக் கொண்டிருந்தோம்!

அப்போது அருகில் நின்றிருந்த காரில் ஏற வந்த, அந்த நகர நிர்வாக அமைப்பின் இரு ஊழியர்களில் ஒருவர் காரில் ஏறிவிட, மற்றொருவர் எங்களைப் பார்த்து சூழ்நிலையை புரிந்து கொண்டு ’ஹலோ ஃபிரண்ட்ஸ்’ என்று கூறிக் கொண்டே எங்கள் அருகில் வந்தார். தன்னிடமிருந்து கிரெடிட் கார்டை எடுத்து, கருவியில் வைத்து அதை தேய்த்து விட்டு மூன்று டாலர் கிரெடிட் ஆனதும் கார்டை எடுத்துக் கொண்டு விட்டார். ’இப்போது காற்றைப் பிடித்துக் கொள்ளுங்கள்’ என்று (ஆங்கிலத்தில்தான்) சொல்லிவிட்டு காரில் ஏறிக்கொண்டார். நாங்கள் எங்களிடமிருந்து பணத்தை எடுத்து அவரிடம் கொடுக்க இரண்டு, மூன்று தடவைகள் முயன்றபோது அவர் வாங்க மறுத்து விட்டார். ‘இட்ஸ் ஓகே‘ என்று அவர் சொல்ல அவர்களின் கார் புறப்பட ஆயத்தமானது! நாங்களும் உடனே ‘தேங்க் யூ!‘ எனக் கூறியதும் இருவரும் புறப்பட்டு சென்று விட்டார்கள்.

’வந்தார்கள். தேய்த்தார்கள். கிரெடிட் ஆனதும் சென்று விட்டார்கள்’ என்று நாங்கள் ஆச்சரியத்தில் நின்றோம்.

எங்கள் காரை ஓட்டிய நண்பர் சொன்னார் : ‘இங்கு உள்ளவர்களின் பண்பு இது. உதவி செய்வார்கள்! நாம் அதை ஏற்றுக் கொண்டு ’தேங்க்ஸ்’ சொன்னதும் மகிழ்ச்சியுடன் புறப்பட்டு சென்று விடுவார்கள். அவர்களை மீண்டும், மீண்டும் பணத்தைப் பெற்றுக் கொள்ளச் சொல்லி வற்புறுத்தக் கூடாது. இங்கு உள்ளவர்கள் மற்றவர்களுக்கு உதவி செய்ய ஆசைப்படுவார்கள்‘ என்று சொன்னார்.

அமெரிக்கர்களின் உதவும் மனப்பான்மையை நினைத்து நாங்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டோம்.

**அ.முஹம்மது நிஜாமுத்தீன்,**





# காவியாவின் காதல்

**சிவசு - மணியன்**

‘நீர் அடித்து நீர் விலகி விடுவதில்லை. நடந்ததைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்காமல் உன் மகளை சேர்த்துக் கொள்ளவது தான் சரியாக இருக்கும்‘

‘இல்லை குமார்! அந்தப் பையன் நல்ல பையன்தான். நன்றாக வேலை பார்க்கிறான். அவளை நன்றாக வைத்துக் கொள்வான் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது‘

‘ஒரு தந்தைக்கு வேறு என்ன வேண்டும்‘

‘மற்ற விஷயங்களையும் பார்க்க வேண்டும் அல்லவா?‘

‘வேறு... ஜாதி என்பது உன் பிரச்சினையா? அல்லது வேறு ஏதாவது காரணமா?

‘சமூகத்தில் ஒரு பொறுப்பான பதவியில் இருந்து கொண்டு சாதி சமயம் எல்லாம் பார்ப்பது தவறு என்று எனக்கும் தெரியும். எனக்கும் அப்படியான எண்ணமும் இல்லை‘

பின் எதற்காக இந்த வரட்டுப் பிடிவாதம்?‘

‘அதுவரையில் எல்லாம் சரிதான். ஆனால் என்னுடைய நண்பனின் மகன். ஒரு சகோதரனாகத்தான் உங்கள் மகளைப் பார்க்கிறேன் என்று சொன்னவன். இப்படி நம்பிக்கைத் துரோகம் செய்வான் என்று நான் நினைக்கவில்லை‘

‘இருவருக்கும் பிடித்திருக்கிறது அப்புறம் என்ன? வேறு எந்த விதமான பிரச்சினையும் இல்லை என்று வேறு சொல்கிறாய்?‘

‘ஆரம்பக் கட்டத்திலேயே சொல்லி இருந்தால் கூட ஏற்றுக் கொள்ளலாம். காவியாவிற்கு நிச்சயதார்த்தமான பிறகு இப்படிச் செய்தால் என்னுடைய குடும்பத்தார் மத்தியில் எனக்கு எப்படி இருக்கும்‘

‘மற்றவர்களைப் பற்றி ஏன் கவலைப் படுகிறாய்?‘

‘மற்றவர்களும் நமது சமூகத்தின் அங்கம் தானே. அவர்கள் மத்தியில் தானே நம்மால் இயங்க முடிகிறது‘

‘நீ சொல்வதெல்லாம் சரிதான். காலம் மாறிவிட்டது காதல் திருமணம் எல்லாம் சகஜம் ஆகிவிட்டது. இப்பொழுது போய் இப்படிப் பேசுகிறாயே?‘

‘காதல் திருமணம் தவறு என்று நான் சொல்லவில்லை‘

‘பிறகு என்னதான் சொல்ல வருகிறாய்?‘

‘நிச்சயதார்த்தம் வரையில் சகோதரன் என்று சொல்லிக்கொண்டு எல்லா வேலையும் இழுத்து போட்டுக் கொண்டு

செய்தான். திடீரென்று மாறியதுதான் என்னால் ஜீரணித்துக் கொள்ள முடிய வில்லை?

'இதற்கு மேல் நான் சொல்வதற்கு ஒன்றுமில்லை. எல்லா உலக விஷயங்களும் உனக்குத் தெரியும். நீயும் பிடிவாதமாக இருக்கிறாய். இதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும். ஒகே..! குமார் நான் வெளியூருக்குச் செல்வதால் அடுத்த வாரம் திங்கள் அன்று தான் நடை பயிற்சிக்கு வர முடியும் . குட் பய்'

குமாரிடம் விடைபெற்றுக் கொண்டு பூங்காவை விட்டு வெளியேறி தன் வீட்டிற்கு விரைந்தார் கைலாசம்.

-----

ஹலோ! என்பது காவியா... சௌக்கி யமா இருக்கியா? ஹவ் இஸ் யுவர் மேரிட் லைப்?'

'நன்றாகப் போய்க் கொண்டிருக்கிறது அங்கிள். அப்பா மட்டும்தான் சேர்த்துக் கொள்ள மறுக்கிறார்கள். இங்க ஒரு பிரண்டு கல்யாணத்துக்கு போயிட்டு திரும்பிக் கொண்டிருக்கிறேன்?

'உன்னுடைய கணவர் வரவில்லையா?'

'அவருக்கு அவருடைய 'யுஎஸ் கிளை யன்ட் கூட'... முக்கியமான மீட்டிங்'

'உன்னிடம் சில விஷயங்கள் பேசலாமா?'

'என்ன அங்கிள் நீங்க எங்க அப்பா வுக்குச் சமானமானவர். அது தவிர என்னுடைய நலம் விரும்பி. நிச்சயமாகக் கேளுங்கள்?'

'நிச்சயதார்த்தம் உன் விருப்பத்தின் பேரில் முடிந்து எல்லாம் சுமூகமாகப் போய்க்கொண்டிருக்கும் பொழுது எப்படி பரத்தைத் திருமணம் செய்து கொள்வதாய் முடிவு செய்தாய்? அதுவும் சகோதரன் மற்றும் நண்பன் ஸ்தானத்தில் தானே வைத்திருந்தாய்? '

'உங்களுக்குச் சில விஷயங்கள் தெரிந் திருக்க வாய்ப்பில்லை. நான் அப்படித்தான் உண்மையாகவே இருந்தேன்.

நிச்சயதார்த்தம் முடிந்த பிறகு சுரேஷு டன் ஒரு நாள் வெளியே செல்ல வேண்டி இருந்தது. அப்பொழுது அவருடைய செயல் 'பிரண்ட்ஸ் படத்தில் வரும் இலியானாவின் அக்காவிற்குப் பார்த்த மாப்பிள்ளையின் செயலை விட மோசமாக இருந்தது'. சரி.. ஒரு முறை என்று விட்டு விட்டேன் பலமுறை இப்படித்தான் இருந்தார். எனக்குப் பிடிக்கவில்லை. வீட்டில் உள்ளவர்களுக்குச் சொன்னேன். அவர்களும் இதெல்லாம் ஒரு பெரிய விஷயமா. ஆம்பளைகள் கொஞ்சம் அப்படித்தான் இருப்பார்கள். என்று சொல்லிவிட்டு கல்யாண ஏற்பாடுகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எனக்கு சப்போர்ட்டாக வந்த பரத்தையும் அவர் கள் பொருட்படுத்தவில்லை. '

'அது சரி! சுரேஷ் பிடிக்கவில்லை என்று சொன்னால் வேறு மாப்பிள்ளை பார்க்கச் செல்ல வேண்டியது தானே?'

'நிச்சயதார்த்தம் முடிந்து விட்டது இனிமேல் மாற்ற முடியாது என்று கண்டிப் பாகச் சொல்லிவிட்டார்கள். எனக்கு நண்பனாகவும் சகோதரன் போலவும் இருந்த பரத்திடம் தான் ஆலோசனை கேட்க முடிந்தது'

'அவனும் வேறு மாப்பிள்ளை பார்க்கும் படி என்னுடைய பெற்றோரிடம் எடுத்துச் சொன்னான். அவர்கள் மிகவும் பிடிவாதமாக இருந்தார்கள். என்னுடைய செல்போனை பிடுங்கி வைத்துக் கொண்டு

ஒரு மாதம் வீட்டிலேயே அடைத்து வைத்தார்கள். எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அந்தத் திருமணம் நடைபெற்றால் நிச்சயமாக என் வாழ்க்கை சரியாக இருக்காது என்பதும் புரிந்தது. 'பரத்'தான் தவறாக வழி நடத்துகிறான் என்று அவனையும் வீட்டிற்குள் விடுவ தில்லை '

'சரி! அப்புறம் எப்படி உங்கள் திருமணம் நடைபெற்றது!

'சுரேஷுடன் கல்யாணத்துக்கு ஒத்துக் கொள்கிறேன். வேலைக்குப் போவதற்கு அனுமதி கொடுங்கள் என்று பொய் சொல்லிவிட்டுத் தான் வெளியில் வந்தேன். பலமுறை நான் சொல்லியும் பரத் கடைசி வரை ஒத்துக் கொள்ளவில்லை. இல்லாவிட்டால் வேறு ஏதாவது செய்து கொள்வேன் என்று சொன்ன பிறகுதான் மனம் மாறினான்.

"உங்கள் வீட்டிற்குச் சென்று பெண் கேட்கிறேன். பெற்றோர்கள் சம்மதத் துடன் நடந்தால் தான் நல்லது" என்று பெண் கேட்பதற்காக பரத் அவன் பெற்றோருடன் எங்கள் வீட்டிற்கு சென்றான். அவனை அவமானப்படுத்தி அனுப்பி விட்டார்கள். பின்னர் தான் பரத்துடைய பெற்றோர்கள் சம்மதத்துடன் என் திருமணம் நன்றாகவே நடந்தது. நான் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறேன்.'

--------- விரிவாகச் சொல்லி முடித்தாள் காவியா.

'சரிம்மா காவியா.. நடந்தது எல்லாம் நல்லது என்று எடுத்துக் கொள்வோம். கூடிய விரைவில் உன்னுடைய அப்பாவின் மனம் மாறும் என்று நம்புகிறேன்'. என்று சொல்லிவிட்டு விடை பெற்றார் கைலாசம். ■



# தந்தை தனயன்

தந்தை விரலைத் தனயன் பிடித்து
தாவி எழுந்த காட்சிகள் எல்லாம்
தனயன் கையைத் தந்தை பிடித்துச்
சாலை கடக்கும் நேரம் தோன்றும்!

ஏன்தான்? இப்படி இருக்கார்? என்று
தந்தை நோக்கித் தனயன் சொன்ன
காலம் எல்லாம் கடந்து போகும்!
ஆகா !அப்பா! எப்படிச் செய்தார்!
என்றே வியந்திடும் நேரம் வந்திடும்!

கால மாற்றம் தொடுக்கும் கணைகள்!
ஏற்றிட மறுக்கும் முதியோர் உண்டு!
மழலைப் பருவப் பாடம் போல
மகனே சொல்வது என்றும் சரியே!

சுணக்கம் இன்றி ஏற்க வேண்டும்!
அவனும் இன்று தந்தை நிலையைக்
காலச் சக்கர ஓட்டம் மூலம்
பெற்றே இருப்பது இயல்பாய் இருக்கும்!

புரிதல் இப்படி வாய்த்து விட்டால்
தனயன் தந்தை சச்சரவு இல்லை!
முதியோர் வாழ்க்கை சிறக்கும் போது
சிறியோர் வாழ்க்கைத் தானே இனிக்கும்!!!

- சிவசுமணியன்

# கவனம் தேவை

கமல. அருள் குமார், சென்னை

தங்கத்திலான கூண்டு என்பது
கிளிக்குப் பெருமையில்லை..
தகரத்திலான ஓடு என்பது
கூரைக்கு சிறுமையில்லை..

பளபளக்கும் அம்பு என்பது
அது செய்யும் கொலைக்கு
பெருமையில்லை..
சலசலக்கும் அருவி என்பது
அது தரும் நீருக்கு
சிறுமையில்லை..

அலையில்லா கடல் என்பது
அதில் போகும் தோணிக்கு
பெருமையில்லை...
விலையில்லா மூங்கில் என்பது
வெளிவரும் இசைக்கு
சிறுமையில்லை...

இரும்பிருக்கும் இடத்தில்
கரும்புக்கு அவசியமில்லை..

விருப்பம் இருக்கும் இடத்தில்
திணிப்பிற்குத் தேவையில்லை..

பிடித்ததை வைத்துக் கொள்வதில்
சிறுமையில்லை - எதையும்
பிடித்து வைத்துக் கொள்வதில்
பெருமை இல்லை...

வண்டார்க்கும் மதுகொண்ட
பங்கய குளத்தில்
வந்தேகும் நீர் தடுக்கும்
மதகுடைப் பெடுக்க...

வெள்ளம் பெருக்கெடுக்க
தண்டுயர வழியின்றித்
தண்ணீர்
முண்டகத்தை மூழ்கடிக்க..
அண்டி மது அருந்திடும்
தும்பி முதலும்
பிற வண்டு இனமும் ..

உண்டி உண்டிட
அண்டைக் குளம் தாவும் ...

பங்கையக் குளம் சீராகி
முண்டகம் மேல் எழும்ப..

ஆங்கு வண்டுகள் முன்போல்
ஆர்ப்பரிக்கும் அன்ன
விரும்பா வினையால்
விலகிய உறவுகள்...

இரும்பாய் இருந்தாலும்
இன்றில்லை நாளை
கரும்பாய் இனிக்கும்
காலம் வந்தேகும்...

வேர்களில் ஈரம்
இருக்கும்வரை இலைகள்
காய்வதில்லை..

போர்களின் ஓலம்
கேட்கும்வரை வயிறுகள்
நிறைவதில்லை..

விழுதுகள் பாரம்
தாங்கும் வரை
மரங்கள் சாய்வதில்லை..

விளைச்சல்கள் பூமியில்
நீங்கும் வரை
அறங்கள் தேய்வதில்லை..

கடல்களில் தண்ணீர்
உள்ளவரை அலைகள்
ஓய்வதில்லை..

கரங்களில் கருணை
உள்ளவரை மனிதம்
மாய்வதில்லை..



இறங்கும் போதும்
இரங்கும் போதும்
கவனம் தேவை..

இணையும் போதும்
இணைக்கும் போதும்
கவனம் தேவை

வழுகும் போதும்
வழங்கும் போதும்
கவனம் தேவை...

பழகும் போதும்
பழக்கும் போதும்
கவனம் தேவை..

பருகும் போதும்
பருக்கும் போதும்
கவனம் தேவை..

உருகும் போதும்
உருக்கும் போதும்
கவனம் தேவை...

விலகும் போதும்
விலக்கும் போதும்
கவனம் தேவை..

# அவள் உலகம் வேறு

ஸஞ்ஸீதா முஜீப் ரஹ்மான்
புல்மோட்டை

சூரியன் தன் உறைவிடம் நோக்கிச் செல்லும் நேரம் கூடவே புள்ளினமும் மேகத்திரை மறையுமளவு திரண்டு சென்றன. வார நாள் என்பதால் குர்ஆன் மத்ரஸாவிற்கான மஹ்ரிபுடைய பொழுதும் கைகூடியிருந்தது. அந்தியில் அடிவயிற்றைத் தணிக்கும் தேநீரை உள்ளே இறக்கி உச்சி குளிர்ந்த பின் அவசர அவசரமாக தொழுகையைத் திருப்தியுடன் நிறைவேற்றிட வேண்டும் என்பதால் வுழு எடுப்பதற்க்குச் சென்றேன்.

'ஆலிமா... ஆலிமா...'

காற்றின் கானத்தோடு சேர்ந்து வந்த அவ்வொலி என் காதுகளில் புகுந்து மத்ரஸாவிற்கு வந்திருக்கும் மாணவி யொருவரின் குரல் தான் எனும் தெளிவை யூட்டியது. 'ஓம்மா... நில்லுங்க வாரேன்...' பதிலுக்கு கூறிவிட்டு அவசரமாக வுழுச் செய்துவிட்டு நுழை வாயிலின் தாழ்ப்பாளைத் திறக்கத் தவிக்கும் மாணவிக்கு ஓடோடிப் போய் திறந்து உள்ளழைத்து இருக்கையில் அமருமாறு ஏவியபின் மஹ்ரிப் தொழுகையை நிறைவேற்ற என் அறையில் நுழைந்தேன்.

திருப்தியான முறையில் தொழுது திரு மறை வசனங்களை மனதால் உள்ளிழுத்து உச்சி முதல் உள்ளங்கால் வரை ஊடுருவ விட்டு குர்ஆன் மத்ரஸா நடாத்துவதற்கென ஒதுக்கப்பட்ட இடத்திற்குச் செல்லும் போது வந்திருந்த மூவருக்கும் சலாம் கூறி ஆனந்தப் புன்னகையால் மாணவர் மூவரினதும் பெயர்களை ஒவ்வொன்றாக அழைத்து என் அன்பை அவர்கள் மீது தூவியவாறு உட்கார்ந்தேன்.

தம் விருப்பிற்குரியோர் தங்களைப் பெயர் கூறி அழைத்து தலை தடவிக் கொடுப்பதும் அருகமர்ந்து அன்பாய் நாலு வார்த்தை செல்லம் கொஞ்சுவதும் ஆசிரியர் மீதான மாணவர்களின் அளவில்லா எதிர்பார்ப்புத் தானில்லையா?..

'ஆலிமா... இன்னைக்கி நாங்க மூனு பேருந்தான் வந்திருக்கம்... மத்தப் பிள்ளேளுக்கு ஸ்கொலர்ஷிப் க்ளாஸாம் ஆறு அரைக்கி... நீங்க எங்களுக்கு ஓதித் தந்திட்டு நேரத்தோட அனுப்புங்க ஆலிமா...' என்றவாறு சிணுங்கிக் கொண்டாள் அஷ்பா .

இடி முழங்கி மழை தூறல் போடும் அறிகுறி தென்படுவதால் நிலைமைகளைக் கருத்திற்க் கொண்டு என் மனமும் அவர்களது விருப்பை ஏற்றுக் கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டது.

‘சரிமா... அப்போ எல்லாருக்கும் ஓகே என்டா நானும் ஓகே தான் மா...‘ என்றேன். கள்ளங்கபடமற்ற அந்தப் பிஞ்சு உள்ளங்களில் பட்டாம்பூச்சிகள் வட்டமிட்டுப் பறக்க ஆரம்பித்தன. ஆனால் அஸ்கா என்ற மாணவி மட்டும் குனிந்த தலை நிமிரா வண்ணம் ஆழ்ந்த யோசனையில் சிறைப்பட்டிருந்தாள். அவள் யோசனைக்கு மருந்திட இயலா விடினும் என்னதான் அப்படியோசனை இந்தப் பிஞ்சு நெஞ்சுக்குள் இருக்கிறது என்று ஒரு கணம் அலசி ஆராய்வது ஆசிரியராக எமது கடமையுமல்லவா.

‘செல்லக்குட்டி என்ன சைலண்டா இருக்கீங்க?.. ஓங்களத் தான் அச்சு குட்டி...‘ என்று அவளண்டையாகி தலையைத் தடவி என் தலையைச் சற்றுச் சரித்த வாறே குனிந்து கேட்டேன். முதலில் பதிலேதுமில்லை. அவளுதடுகள் அசைவதற்குப் பதிலாக அவள் விழிகளில் ஆயிரமாயிரம் ஏக்கக் கோடுகள் ஒன்றன் பின் ஒன்றாய் ஓடித்திரிந்தன.

என் தலையைச் சற்று உயர்த்தி அருகிருக்கும் அவள் பெரியம்மாவின் மகள் அனுவைப் பார்த்தேன். என் விழிப் பார்வையின் கேள்வியை உணர்ந்த அனு, ‘காலத்திலயிருந்து அச்சு அழுதிட்டே தான் இருக்காள். யாரு என்ன கேட்டாலும் சொல்றாளே இல்ல ஆலிமா...‘ என்றாள் ஏதுமறியாத குழப்பத்தில்.

குர்ஆன் மத்ரஸா நேரம் கடந்து கொண்டே செல்வதால் ‘பிள்ளேள் மத்தாக்கள் ஓதுங்க... நான் பாடம் கேக்கன் யாரும் இங்க வாய் பாக்காம ஓதுங்கமா...‘ அன்பு கலந்த அக்கறை அதட்டலோடு மற்ற இருவரையும் பார்த்துக் கூறிவிட்டு என் கவனமெல்லாம் மீண்டும் இரண்டாந் தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் அஸ்காவின் மீதே குவிந்தது.

‘ஆலிமாட தங்கப்புள்ளதானே ஆலிமாக்கு சொல்ல மாட்டீங்களா?.. அச்சு...‘ என்றேன் ‘ஒன்னு... மில்ல... ஆலிமா...‘ என்றாள் சற்று குழைந்தவளாய்.

‘ஒன்னுமில்லாமலா அழுதீங்க... பொய் சொல்லக்கூடாதுமா‘ என்று அவள் கைகளை என் உள்ளங்கைக்குள் பற்றிக் கொண்டு அவள் விழிகளை ஆராய்ந்தேன்.

என்னை நோக்கிய அவள் விழிகள் மீண்டும் தரை நோக்கின.

‘சரி அஸ்காவுக்கு என்னடா நடந்த?.. சொன்னாத் தானே எங்களுக்கும் என்னனு புரியும்‘ என்றேன்.

‘இப்பலாம் எனக்கு என் சப்புமா நெனைப்பாத்தான் இருக்கு... அவ இல்லாம எனக்கு உயிர் வாழக் கஷ்டமா யிருக்கு...‘ என்றாள். ஒரு கணம் அப்படியே சிலையாகி விட்டேன். தொண்டைக் குழியடைத்து வந்த அவளின் இனி இல்லை என்ற அந்த ஏக்கத்தொனி என்னை அப்படியே அடியற்ற மரம் போலாக்கியது.



அவள் கருவிழி வழியே வழிந்தோடிய நீர்த் துளிகள் தான் என் உயிர்ப்பை எனக்கு மீண்டும் உணர்த்தின.

தாய் தந்தையின் நிலையான விவாக ரத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமற் போன அந்தப் பிஞ்சுக் குழந்தையின் மனதிற்குள் தாயின் வெளிநாட்டு வாழ்க் கையும் தாயின்றிய பரிதவிப்பும் அவளை அப்படியே சுக்கு நூறாக்கிக் கொண்டி ருக்கின்றது என்பது மட்டும் என்னுள் ஆணித்தரமான புரிதலாகியது.

தன் தாயிருக்கும் போதே பக்கத்து வீட்டுப் பெண்ணுடன் கள்ளத்தொடர்பு வைத்து பின் சின்ன வீடாக மாற்றி நாள்பட சொந்த வீடாகவேயாக்கிக் கொண்ட அஸ்காவின் தந்தை அன்சாரி டம் இருந்து தானும் தன் மகளும் நிரந்தரமாகப் பிரிந்து விட வேண்டும் என்ற வைராக்கியத்தால் கோர்ட் கேஸ் என்று அலைந்து திரிந்து ஒருவாறு தானே தன் பிள்ளையை பராமரிக்க வேண்டும் யார் உதவியும் தேவையில்லை என்ற வீரியத்தோடு தன்மகளின் நிகழ்கால எதிர்கால நல்வாழ்க்கைக்காக தன் இளமைப் பருவத்தையே தியாகித்து வாழ்ந்து கொண்டிருக்கிறாள் அஸ்காவின் தாய் சப்றா.

தனது தாயின் தாயுடனும் தந்தையுட னும் தன் வாழ்வை நகர்த்திச் செல்லும் அஸ்காவிற்கு தாயின் அரவணைப்பும் தன் தந்தையின் அன்பும் நிச்சயம் தேவையாயிருந்தது. அற்ப ஆசைகளை அசைபோட்டுக்கொள்ளும் சில மனிதர் களின் வாழ்வில் அகப்பட்டு வலுவிழந்து தவிப்பது சின்னஞ் சிறுசுகள்தான்.

இதற்கிடையில் அஸ்காவின் தாய் சப்றாவும் தந்தை அன்ஸாரும் காதலித்துத் திருமணம் செய்தவர்கள் தான்.

‘ஏன் மா அப்டிச்சொல்றீங்க... உம்மா தான புள்ளக்கி கிஃப்ட் எல்லாம் அனுப்பி வச்சா... அப்றம் பெரிய பொம்ம... புது பைசிக்கல்...‘ என்றவாறு அவளை சமாதானப்படுத்திட அவளின் தாய் இவளுக்காககடந்தவாரம்அனுப்பிவைத்த பொருட்களையெல்லாம் நினைவூட்டி அடுக்கிக்கொண்டே போனேன். என் பேச்சை நிறுத்துமளவு ஒரு வார்த்தை மட்டும் அக்கணம் அவள் வாயிலிருந்து உதிர்ந்தது. ‘ஆலிமா அது எல்லாத்தயும் வெச்சு நான் சும்மா பயன்படுத்த தானே ஏலும்... எனக்கு அதெல்லாம் என்ட உம்மா என்னோட இருக்கிற மாதிரி வருமா?‘ என்றாள் அவளின் விரிந்த விழிப்பார்வையோடு. இரண்டாம் தரம் படிக்கும் இந்தப் பிஞ்சு உள்ளத்திலிருந்து இத்தனை ஆதங்கங்களா? என்றாகியது.

பதிலேதுமின்றி அடிவயிற்றிலிருந்து மூச்சை உள்ளிழுத்து வெளிவிட்டேன். நேரம் சரியாக ஏழு முப்பது மணியிருக்கும். அவசர அவசரமாக பாடங்களைக் கேட்டு பிள்ளைகளை நேர காலத்தோடு வீட்டுக் அனுப்பிவிட வேண்டும் என்ற படியால் ஒவ்வொருத்தராக பாடம் கேட்டு பிழை திருத்தங்களும் சொல்லிக் கொடுத்து துஆவுடன் நிறைவு செய்யும்போது நேரம் சரியாக எட்டு ஐந்தாகியது.

தினமும் பாடம் கேட்டு துஆக்களை யும் சொல்லிக் கொடுத்து எழுத்து உச்சரிப்புக்களையும் பழக்கிப் பழக்கியே குர்ஆன் மத்ரஸாவை நிறைவு செய்யும் எனக்கு, ஒரு பிஞ்சுக் குழந்தையின் மனக்கிடக்கையை அறிந்து அவளின் மனத் தழும்புகளுக்கு மருந்திட்டது பேரின் பத்தைத் தந்தாலும் அவளின் அம்மனநிலை அவளை இனி எவ்வாறெல்லாம் சிந்தித்து அவளை சீர்குலைய வைக்குமோ என்ற அச்சம் என்னுள் தொடர்ந்தது...

# விருந்தும் மருந்தும் நீதானடி

புன்னகைப் பூவே
புது வெண்ணிலவே

புத்துணர்ச்சியால்
புதுவுலகம் படைப்பவளே

என்னுள் நிறைந்தவளே
எண்ணமதில் கலந்தவளே

கனிவானப் பார்வையால்
காந்தமாய் ஈர்த்தவளே

சஞ்சலம் ஏதுமில்லை
சகியே உன்னாலே

வசந்தத்தின் வருகையும்
வஞ்சியுன்னால் மகிழ்வானதே

நங்கையின் நடைதனில்
நாணமும் நளினமானதே

மலரும் மலர்களில்
மங்கையுன் மணமே

உள்ளமும் உவகையாகிட
உணர்வுகள் உறவாடுதே

நினைவுகள் யாவும்
நின்னைச் சுற்றியே

வண்ணமயில் தோகையால்
வாலிபத்தை வதைக்கிறாயே

பூங்குயில் இராகமாய்
பூபாளம் இசைக்கிறாயே

இளந்தென்றல் தழுவிட
இளமையும் சிலிர்ப்பானதே

என்னன்பே விருந்தும்
மருந்தும் நீதானடி

காதலின் பாடத்தில்
காரிகையுன் கீதமே

ஐக்கியமானேன் உன்னுள்ளே
ஐயமேதும் எனக்கில்லையே

வாழ்வில் இணைந்திடு
காலந்தோறும் களிப்புறவே

பெ.வெங்கட லட்சுமி காந்தன்
விருதுநகர்



## தமிழ் மொழி

தமிழ் மொழி படித்தால்தானே
தலை நிமிர்ந்து நடப்போம் நாமே
தாய்ப்பால் போல் தமிழ் பால்
தன்னை வளப்படுத்தி நிலை நிறுத்துமடா
அவரவர் மொழியை இங்கே
அவரவர் கற்றிட வேண்டுமடா
தாய் மொழியே சிந்தனையை
செழித்திடவும் செம்மை செய்யுமடா
காட்டாற்று வெள்ளம் போல்
கரைபுரண்டு ஓடுதடா என்பாட்டன்
வாணிதாசன் பாட்டெல்லாம்
புரட்சி மணம் வீசுதடா
முரசுகொட்டும் இடி முழக்கம்
இவர் பாடல் எதிரொலிக்குதடா
மூலை முடுக்கெல்லாம்
இன்ப தமிழ்மணம் மணக்குதடா

**பொன் முருகன்**
புதுச்சேரி

## விடை அறியாத விடுகதைகள்...

சூழ்கின்ற நிலையிலே சுடுகின்ற மெய்க்கும்
வீழுமுயிர் இடைக்கும் விளங்காதுத் தவிக்கும்
மூழ்கிடும் போரெனவே மனத்துள்ளே உழலும்
வாழ்கின்ற யாருக்கும் வடுவாக நிலைக்கும்

கடைக்கோடி மனிதரிடம் கருவறைத் தொடங்கி
தடையின்றி செல்வத்தோடு தாராள வகையில்
நடைபோடும் செல்வந்தர் கல்லறை வரையில்
விடை அறியாத விடுகதைகள் எத்தனையோ?

கவிஞர் மாலதி இராமலிங்கம்,
புதுச்சேரி.

## மங்கையர் திருவிழா

இறைவனும் வணங்கிடும்
உயிரொன்றைப் படைத்தான்
இறைவனும் அன்னையென்ற
உறவைப் பெற்றான்
மறைக்கு மறையான
புனிதம் கொடுத்தான்
முறைமையோடு அவற்றை
பெண்மையென உரைத்தான்

பெண்மைக்குள் பெருமைமிகு
பிள்ளைப்பேறு வரமளித்தான்
தாய்மை என்னும்
தகைமைசால் உயர்வளித்தான்
வாய்மை இதுவென்றே
வகைமைப் படுத்தினான்
பொய்மை இல்லா
பாசத்தைக் கொடுத்தான்

மங்கையர் திருவிழாவை
மாண்போடு அமைத்தான்
மங்கா பேரொளியாய்
மகாசக்தியென போற்றினான்
தங்க மங்கையவர்களை
தரணியிலே சிகரமாக்கிய
எங்கும் நிறைந்த
இறைவனைப் போற்றுவோம்

செ. இலட்சுமணக்குமார்
ஈரோடு

# முடிவு என் கையில்

துருவங்களாய் எதிரெதிரே
சந்தித்த நிகழ்வு
உருவங்களை கண்டு
உள்ளுர ரசிப்பு
பருவங்களின் கோளாறு
பார்வையின் பரிமாற்றம்
அருவமான காதலால்
அவரவருக்குள் தடுமாற்றம்

விழியில் நுழைந்து
வழியை மறந்து
மொழியை இழந்து
ஊணைத் துறந்து
உறக்கம் களைந்து
காதலின் அவத்தை
இருவரும் கண்டனர்
அன்பில் திளைத்தனர்

களவாடிய இதயங்கள்
இருவருக்குள் கைமாறின
உளமோடு பேசி பேசி
உணர்வு பரிமாறினர்
எல்லாம் சிலகாலம்
எல்லாம் மாறியது
பொல்லா விதியும்
புறமுதுகில் குத்தியது

அவளை அவன்
ஒதுக்கப் பார்த்தான்
இன்னொரு காதலை
புதுப்பிக்கப் பார்த்தான்
அவளோ என்னை
ஒதுக்குவதோ விலகுவதோ
உன்கையில் இல்லை
முடிவு என் கையில்

பதுங்கிப் போகவோ
ஒதுங்கிப் போகவோ
கணணகிக் கால பெண்ணல்ல
கண்ணகியின் கனலை
கண்களில் வைத்து
எரித்திடும் கலியுக
நவீன கால பெண்
என்பதை மறந்துவிடாதே

என்னை மாற்றுவதோ
என்னை ஏமாற்றுவதோ
உன்னால் முடியாது
உன்னிடம் ஏமாறுவதும் கூட
நான் செய்யும் முடிவே
ஏனெனில்
முடிவு என் கையில்

அவன் அவளின்
சினம் கண்டு சிலையானான்
அவளின் அன்புக்கு விலையானான்
நிரந்தரமாய் அவளின்
சிறையில் கைதியானான்


**செ. இலட்சுமணக்குமார்**
ஈரோடு




# உழைப்பே உயர்வு!

உழைப்பே என்றும் உயர்வைத் தருமே!
உடலின் நலனும் உழைப்பால் சிறக்கும்!
பிழைப்புக்காக கையேந்தும் நிலையை மாற்றிப்
பெருமையுடன் தலைநிமிரச் செய்யும் உழைப்பு !
வயலில் உழைக்கும் விவசாயி நாட்டை
வளமாய் ஆக்கும் உழைப்பாளி மண்ணில்
இயற்கை வளத்தை உரமாக்கி மக்கள்
வயிற்றுக்குச் சோறிடும் தாயாய்த் திகழ்வாரே!

சிறுதொழில் குறுதொழில் பெருந்தொழில் என்று
சீருடன் உழைக்கும் பாட்டாளி மக்கள்
உறுபொருள் பெற்று உவப்புடன் வாழ
உதவிடும் அரசே நல்லர(சு) என்போம்!
வல்லரசாக வேண்டு மென்றால் உழைப்பின்
வலிமை நாட்டில் பெருகிட வேண்டும்!
இல்லாமை போக்கி நல்லறம் தேக்கும்
இரும்புக் கைகளை இணைந்தே நாம்காப்போம்!

உழைப்பிற்கேற ஊதியம் வேண்டும்
உரிமைகளைக் கேட்காமல் பெற்றிட வேண்டும்
உழைப்பாளர் வறுமை போக்கிட வேண்டும்
உணர்வை மதித்துப் போற்றிட வேண்டும்
உலகெங்கும் கொண்டாடும் உழைப்பாளர் நாளில்
உணர்வுடன் பேதமின்றி ஒன்றிணைவோம் வாரீர்
தழைக்கட்டும் வளமெங்கும் தவிப்பின்றி வாழட்டும்
உழைப்பாளர் வாழ்வென்றும் ஓங்கட்டும் செழிப்போடு

ஓசூர் மணிமேகலை



# அறிவாற்றல் நூல்தானடி!

பாவகை : வழிநடைச் சிந்து

பெரிதென்றே மலரினைப் பாரடி - அதில்
பேரின்பம் மணம்தானடி
பெரிதென்றே நீபடிடி;
பெரியநீர்த் துறைநீ பாரடி - ஆழம்
பெரிதுணர்ந்து நீசெல்லடி
பேருயிர் காப்பாயடி!

அறிஞர்கள் வலிமை பாரடி - அவர்கள்
அறிவாற்றல் நூல்தானடி
அறிவிலாரில் வினாயேனடி?;
அறிவினிலே சிறியவர்ப் பாரடி - அவரை
அழித்திடும் சினமேனடி
அன்பினிலே நீஓங்கடி!

வாழ்வியல் கவி **சா.நாகூர் பிச்சை** , துபாய்

# யாசகம்



திருவோடு ஏந்தி
தெருவோடு திரியும்
பரிதாபத் தோற்றத்துடன்
குடும்பத் தோடிணைந்து
வருமானமீட்டும்
இலகு வழியிது

சந்தம் பிசகாது சிந்துகள் பாடி
வாகனங்களில்
வாகாய் ஓர் ஊர்வலம்
காணும் போது  துயரம் தரும்

பெருநாள் திடலிலும்
பண்டிகை தினத்திலும்
பெருங் கூட்டம் திரளும்
பேரவல வடிவத்துடன்

கந்தலாடை கட்டி
கையிலே குழந்தை ஏந்தி
அம்மா... தாயே... என்று
அவலக்குரல் ஒலிக்கும்

தேசிய தினமென
பிரகடனம் செய்யாமலே
ஒவ்வொரு ஊருக்கும்
ஒவ்வொரு தினம்
ஒதுக்கீடாய் இருக்கும்
இவர்களுக்கு மட்டும்.

இத்தனைக்கும்
கைகால்கள் இயங்கும்
வாலிபமும் விளங்கும்
இயலுமை யுள்ளோர்கள்
அவர்களுக்கோ
கையேந்தும் கவலையில்லை
உழைக்கும் வழியாய்
ஆனதுவோ யாசகம்...??

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.

# பிணம் பொய் சொல்லாது...



மாலதி சந்திரசேகரன்

அரசு மருத்துவமனையின் அந்தச் சிறிய அறை எப்போதும் ஒருவிதமான வினோத வாசனையைத் தன்னுள் ஒளித்து வைத்திருக்கும். அது ஃபார்மலின் வாசனை மட்டுமல்ல; வாழ்ந்து முடித்த உடல்களின் மௌனமும், மிஞ்சியிருக்கும் ரத்தத்தின் உறைந்த வாசனையும் கலந்த ஒரு கலவை. கதிர்வேலன் அந்த அறையில் கடந்த இருபது ஆண்டுகளாகப் பணியாற்றி வருகிறான். அவன் ஒரு பிணக்கூறு உதவியாளர்.

அவனுக்கு பிணங்கள் பயத்தைக் கொடுப்பதில்லை. மாறாக, அவை அவனிடம் பேசும் என்று அவன் நம்பினான். உயிரோடு இருப்பவர்கள்தான் பொய் சொல்வார்கள், ஆனால் ஒரு சடலம் அதன் மரணத்திற்கான காரணத்தை ஒரு போதும் மறைப்பதில்லை.

அன்று அதிகாலை 4 மணி இருக்கும். மழை பெய்து ஓய்ந்திருந்த அந்தச் சிறு நகரத்தின் சலசலப்பில், ஒரு ஆம்புலன்ஸ் சைரன் சத்தம் மருத்துவமனை வளாகத்தை அதிரச் செய்தது. கதிர்வேலன் தனது கைகளைச் சுத்தம் செய்து கொண்டு, நீலநிறக் கையுறைகளை மாட்டிக் கொண்டான்.

டாக்டர் சிவகுமார் உள்ளே வந்தார். அவர் அனுபவம் வாய்ந்தவர், ஆனால் இன்று அவர் முகம் சற்று வாட்டமாக இருந்தது. ‘கதிர், இன்னைக்கு வந்திருக்கிறது ஒரு சின்னப் பொண்ணு. பதினெட்டு வயசுதான் இருக்கும். தூக்குப் போட்டுக்கிட்டதா போலீஸ் ரிப்போர்ட் சொல்லுது,‘ என்றார் டாக்டர்.

மெட்டல் டேபிளின் மீது அந்த உடல் கிடத்தப்பட்டது. வெள்ளை வஸ்திரத்தை விலக்கியபோது, கதிர்வேலன் ஒரு நிமிடம் திகைத்து நின்றான். அவள் பெயர் மீனாட்சி. முகம் மிகவும் அமைதியாக இருந்தது, ஏதோ ஒரு ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பது போல. ஆனால், அவளது கழுத்தைச் சுற்றி அந்த கயிறு ஏற்படுத்தியிருந்த தழும்பு, உலகத்தின் குரூரத்தை உரக்கச் சொன்னது.

‘சரி கதிர், ஆரம்பிக்கலாமா?‘ டாக்டர் கேட்டார்.

கதிர்வேலன் அந்த உடலை உற்று நோக்கினான். பொதுவாக தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டால், கழுத்தில் கயிறு ஏறிய தழும்பு ’ா’ வடிவில் மேல் நோக்கிச் செல்லும். மீனாட்சியின் கழுத்தில் இருந்த தழும்பு கிடைமட்டமாக, அதாவது வட்டமாக இருந்தது.

‘சார், ஒரு நிமிஷம்,‘ கதிர்வேலன் தடுத்தான். ‘கழுத்துல இருக்கிற தழும்பு நேரா இருக்கு சார். தூக்குப் போட்டா இப்படி வராதே?‘

டாக்டர் சிவகுமார் உற்றுப் பார்த்தார். அவரது புருவங்கள் சுருங்கின. ‘நீ சொல்றது சரிதான் கதிர். இது மூச்சுத் திணறடிச்சுக் கொலை செஞ்ச மாதிரித் தெரியுது.‘

அடுத்த ஒரு மணி நேரம் அந்த அறையில் கத்திகளின் ஓசை மட்டுமே கேட்டது.

கதிர்வேலன் லாவகமாக உடலைத் திறந்தான். ஒவ்வொரு உறுப்பையும் பரிசோதிக்கும்போது, மீனாட்சியின் வாழ்க்கை வரலாறு அவர்கள் கண்முன்னே விரிந்தது. அவளது வயிற்றில் செரிக்காத உணவு இருந்தது - அவள் கடைசியாகச் சாப்பிட்டது இட்லியும் சாம்பாரும்.

அவளது கைகளின் நகக்கண்களைக் கதிர்வேலன் பார்த்தான். அங்கே சில தோல் துகள்கள் சிக்கியிருந்தன. யாரோ ஒருவருடன் அவள் போராடியிருக்கிறாள் என்பது உறுதியானது.

உடலின் உள் உறுப்புகளைப் பரிசோதிக்கும்போதுதான் அந்த அதிர்ச்சியான விஷயம் தெரிந்தது. அவளது நுரையீரலில் லேசான வீக்கம் இருந்தது, ஆனால் இதயத்தின் ஒரு பகுதியில் சிறிய ரத்தக் கசிவு இருந்தது.

'சார், இது தற்கொலை இல்ல. யாரோ அவ கழுத்தை நெரிச்சிருக்காங்க, அப்புறம் தூக்குல மாட்டிவிட்டு தற்கொலைன்னு நாடகமாடியிருக்காங்க,' கதிர்வேலன் சொன்னான்.

அப்போது அந்த அறைக்கு வெளியே மீனாட்சியின் தந்தை அழுதுக் கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. அவர் ஒரு ஏழை விவசாயி. 'என் பொண்ணு அப்படிப் பட்டவ இல்லீங்க... அவளுக்கு வாழ ஆசை இருந்துச்சு,' என்று போலீஸ்காரரிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

வெளியே இருந்த சப்-இன்ஸ்பெக்டர் உள்ளே வந்தார். 'டாக்டர், சீக்கிரம் ரிப்போர்ட் கொடுங்க. பொண்ணு லவ் ஃபெயிலியர்ல செத்துப்போயிட்டான்னு கேஸை க்ளோஸ் பண்ணிடலாம்.'

டாக்டர் சிவகுமார் கதிர்வேலனைப் பார்த்தார். கதிர்வேலன் மீனாட்சியின் கையில் இருந்த அந்தத் தோல் துகள்களை ஒரு சிறிய பாட்டிலில் சேகரித்து வைத்திருந்தான். 'இன்ஸ்பெக்டர், இது தற்கொலை இல்லை. கொலை. இந்தத் தோல் துகள்களோட DNA - வை செக்



பண்ணா யாருன்னு தெரிஞ்சிடும்,‘ என்றார் டாக்டர் உறுதியாக.

அடுத்த சில நாட்களில் உண்மை வெளிவந்தது. மீனாட்சியைக் கொலை செய்தது அவள் காதலித்த அந்த ஊர் பெரிய மனிதரின் மகன்தான். திருமணம் செய்துகொள்ளச் சொல்லி வற்புறுத்தியதால், ஆத்திரத்தில் அவளை நெரித்துக் கொன்றுவிட்டு, தற்கொலை போலச் சித்தரித்திருக்கிறான்.

கதிர்வேலன் அன்று மாலை வேலை முடிந்து கிளம்பும்போது, மீனாட்சியின் தந்தை அவன் கைகளைப் பிடித்துக் கண்ணீர் மல்க நன்றி சொன்னார். ‘நீங்க மட்டும் உண்மையைச் சொல்லலைன்னா, என் பொண்ணு தற்கொலை செஞ்சுக் கிட்டான்னு ஒரு கெட்டப் பெயரோடவே போயிருப்பா,‘ என்றார்.

கதிர்வேலன் எதுவும் பேசவில்லை. அவ னுக்குத் தெரியும், அந்தப் பிணவறை என்பது வெறும் அழுகிய உடல்களின் கூடம் அல்ல; அது அநீதி இழைக்கப் பட்டவர்களின் கடைசி நீதிமன்றம்.

அன்று இரவு கதிர்வேலன் வீட்டிற்குச் சென்றபோது, மீனாட்சியின் அந்த அமைதியான முகம் நினைவுக்கு வந்தது. இப்போது அவளது முகம் தழும்பு இல்லா மல், ஒரு நிம்மதியான தேவதை போலத் தெரிந்தது.

பிணங்கள் பேசுவதில்லை என்பார்கள். ஆனால், கதிர்வேலன் போன்றவர்களுக்குத் தெரியும், அந்த மெலிதான நீல நிற நரம்புகளும், உறைந்த ரத்தத் துளிகளும் உலகிலேயே மிகப்பெரிய உண்மைகளைப் பேசும் என்று. பிணவறை என்பது முடிவல்ல, சில நேரங்களில் அதுவே நீதிக்கான ஆரம்பம்.

# துளிப்பாக்கள்

1. கீரை விற்பவள்
காசுகளைப் பத்திரமாகச்
சேர்க்கிறாள் சுருக்குப்பையில்

2. மர வெட்டியான்
கோடரியால் வெட்டுகிறான்
கனிகளெல்லாம் தரையில்

5.உதட்டுச் சாயம்
அழகாகத் தெரியவில்லை
அந்தத் திருநங்கைக்கு

6.குடிசை வீட்டில்
அழையா விருந்தாளி
மரவட்டைகள்.

7.கிராமத்தில் மழை
மண் பாதைகளில்
சேறும் சகதியும்...



8.அகல் விளக்கு
அடியில் படர்ந்திருக்கும்
இருட்டு

9.கல்யாண மேளம்
உறவினர்களின் பேச்சுக்கள்
கேட்கவில்லை

கவிஞர் இரா. சீ. பாலகுமார். M. A.



# மனநிம்மதியும் மன மகிழ்வும்

**பரணி சுப சேகர்**
மதுரை 17



மகிழ்வா நிம்மதியா என்றால் இரண்டா வதே முதலில் நினைவுள் வரும். தேவைகள் தேடல்கள் என்றும் தேயப்போவதே இல்லை. வேண்டும் என்ற மனப்போக்கில் வரும் வேதனை கள் மறையப்போவதில்லை. ஒருவன் அனைவருக்கும் நல்லவனாக இருக்க முடியாதே. ஒவ்வொரு பார்வையிலும் ஒவ்வொரு அர்த்தங்கள். வாய்க்கு வந்ததை யெல்லாம் வளரச் சொல்லிவிட்டு சொல்லியதை உண்மையென உணர்த்து வதற்காக கதையெழுதுபவர்கள் களம் நிறையவே. தன்னை அடையாளப் படுத்திக் கொள்ளவும் தனக்கான முகத்தை நிலை நிறுத்திக் கொள்ளவும் அடுத்தவனைக் கைகாட்டும் பலர். அவர்களாவது நிம்மதி யோடு இருக்கிறார்களா என்றால் இல்லை என்பதே உண்மை.

காலத்தின் விளைச்சலில் காட்டிக் கொடுப்பவர்களே அதிகம். நம்பிக்கை கொடுத்து அதன்மூலம் மனத்துவம் புரிந்து பின் அதைப் பெருக்கி அதனால் ஆனந்தமடைவோருக்கும் நிம்மதியில்லை.

சொன்னதை விட சொன்னதை உறுதி செய்ய சொல்லில் விடம் வைப்பவர்கள் தான் நம்மைச்சுற்றி நமக்குள் கலந்தவர் களாக நிறைந்துள்ளார்கள். அவர்கள் உறவாகவும் நட்பாகவும் நமக்குத் தெரிய லாம். நடிப்பு என்பதைத் தொழிலாகக் கொண்டவர்களை விட சாதாரண மானவர்கள் சரியாகவே செய்கிறார்கள். இவர்கள் இதழ் பிரிக்கும் வார்த்தைக்கும் இவர்களின் இதயத்தின் வார்த்தைக்கும் சம்பந்தமே இருக்காது.

நம்மை நம்ப வைக்க இவர்கள் எதையும் சொல்லவும் செய்யவும் முயலும்போது நாம் கண்ணை மூடிக்கொள்கின்றோம். உளறிக் கொட்டி விடுகிறோம். அது அவர்களுக்கு அல்வா மாதிரி. எதை எப்படி எங்கு பற்ற வைக்கனுமோ அப்படிக் கச்சிதமாக செய்து முடிப்பார்கள். அவர்கள் மனமகிழ்வதற்கு இங்கே கதையாக்கம். ஆனால் மகிழ்வு வரும் ஆனால் வராது கதை தான். ஆனால் இங்கே மன நிம்மதி கெடும். பற்ற வைப்பதில் பால் வேறுபாடெல்லாம் இருப்பதில்லை. சரியாகச் செய்பவர்கள் சத்தியம் ஒருநாள் வெளிப் படும் என்பதை மறந்து விடுவது தான் இங்கு சூட்சுமம். வாழ்க்கை எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை.

மனதை பக்குவப்படுத்த முறையான பயிற்சி வேண்டும். இல்லையேல் மகிழ் வுக்கு களமாடினால் நிம்மதியைக் கெடுத்துக் கொள்ளத் தான் வேண்டும். அடுத்தவனை மட்டம் தட்ட தன்னை உயர்த்திக் கொண்டால் தன்மீது நம்பிக்கை வரும் என்ற நம்பிக்கைக் கொண்டவர்கள்

நிம்மதியாகவும் இருப்பதில்லை. கழுத்துக்கு மேல் ஒரு கத்தி எப்போதும் எங்கும். சொன்ன வார்த்தைகள் துணை சேர்த்துக்கொண்டு ஒருநாள் மொத்த மாகக் களமாடும். இட்டுக்கட்டி முட்டுக் கொடுத்து அடுத்தவன் குடியைக் கெடுத்த வர்கள் தான் வந்த பாதையை மறந்து விடுவதில் சத்தியம் உயிர் பெறுகிறது. ஆனால் விதியின் விளையாட்டு பூட்டை உடைத்தபின் சாவி கிடைப்பது தான்.

செய்கூலி கால்பணம் சுமைகூலி முக்கால் பணம் என்பதுபோல் செய்த பிழை ஒரு மடங்காகவும் அதனை பெரிதுபடுத்த பலமடங்காகவும் உளறிக் கொட்டியவர்கள் உறுமியவர்கள் முகத்தை மூடிக்கொண்டு வலம் வந்தாலும் ஒருநாள் முகவரியற்றவர்களாக நிம்மதியின்றி தவிப்பது தான் காலம் தரும் பரிசு. கடவுள் நின்று கொல்லும் என்பார்கள். அதில் சிறிதும் உண்மையில்லை. காலமே கர்மாவாக கடவுளாக கணக்காக. தன் வாழ்நாளிலேயே செய்தே முடிக்கும். மகிழ்வின் வெளிப்பாடு அடையாள மில்லையென்றாலும் அடுத்தவனை குழிபறித்த விளையாட்டு தான் இங்கே வினையமாகியிருக்கிறது. விளையாட்டாய் செய்த செயலுக்கு விதி வட்டியும் முதலு மாய்க் கொடுத்துவிடும்.

தன் மகிழ்ச்சிக்காக அடுத்தவன் மகிழ்ச்சியைப் பறிக்கும்போது விதி விதையாகி விடும். அது விளையும் போது விளையாட்டு மறந்து போயிருக்கும். ஆனால் விதி அப்போது தான் தன் ஆட்டத்தை ஆரம்பிக்கும். காலம் தான் கடவுள். கர்மா தான் விளையாட்டு. எவ்வினைக்கும் எதிர்வினை உண்டு. எல்லாவற்றுக்கும் வட்டியும் உண்டு. உணர்ந்தவன் மனிதன்.

‘வேண்டும்‘ என்ற உந்துதல் மனதை ஆட்கொள்ளும்போது ‘விளையாட்டு‘ என்பதை மனம் செய்கிறது. ஆனால் வேண்டியது கிடைத்தாலும் மனம் அடுத்ததைத் தேட மறுபடி விளையாடுகிறது. விரும்பியதை அடைவதற்காக, அல்லது அது யாருக்கும் கிடைத்து விடுமோ என்ற ஐயத்தில் விளையாட்டு வருகிறது. அப்போது மனமும் சிந்தையும் தன்னிலை மறக்கிறது.

அடுத்தவனைக்கைகாட்டினால்தன்மீது நம்பிக்கை வரும் என்ற பொய்யானத்திரை விழுவதால் அடுத்தவன் வாழ்க்கையோடு விளையாட ஆரம்பிக்கின்றான். தன் தவறுகளை மறைக்க மறுக்க அடுத்தவனை கைகாட்டும் சந்தர்ப்பவாதமே குழியில் தள்ளுகிறது. தேடல்கள் நிலைபெறும்வரை விளையாடிக்கொண்டே இருப்பது தான் பொழுது போக்காக மனம் மாற்றி விடுகிறது. ஆனால் காலம் கவனிப்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. இளமையும் வாழ்க்கையும் ஆசையும் நிரந்தரமில்லாதது. நாளை எதுவும் நடக்கும். நடந்ததை மறப்பது தான் நல்லது என்பார்கள். அது நிம்மதிக்கு வழி என்பார்கள். ஆனால் விளையாட்டை மறக்காதவர்களை விதி என்றும் மறந்து விடுவதில்லை. வெளிச்சமோ இருளோ விதியின் பார்வை மங்குவதே இல்லை. காலம் கணக்காக தனக்கானப் பணியைச் செய்து வரும்போது பாவம் என்று பார்க்கக் கூடாது.

வினை விதைத்தவன் அறுவடையை அனுபவித்தே ஆக வேண்டும். சுயம் என்ற தன் முகவரிக்குள் எவ்வளவு தான் அழகாகக் கதையெழுதினாலும் ஒருநாள் படம் வெளிவரும்போது வந்தபாதையின் வழியும் இருக்கும். நிம்மதியே முதலென்று நினைவில் வைத்தால் மகிழ்வில் மனம் போகாது. அடுத்தவனை நோக்கி தன் ஒரு விரலை நீட்டும்போது அதில் மூன்று விரல்கள் தன்னை நோக்கியே இருப்பதை உணர்பவன் தவறு செய்ய

மாட்டான். நிம்மதிக்காக அலைய வேண்டாம். நிம்மதி தானாகத் தேடியே வரும். திருவிளையாடல்களில் கவனம் கொள்ளாதிருப்பது கட்டுப்பாடு தான். அடுத்தவன் மகிழ்வை நினைப்பவனுக்குத் தான் அளப்பரிய பலனுண்டு. இதை உணர்ந்தவன் மதனன். நிம்மதி என்பது கடைச்சரக்கல்ல. உனக்கான தொடர் வினை அது. நல்லதே என்றும் நினைப்ப வனுக்கு என்றும் நல்லதே நடக்கும். மாறாக அடுத்தவனைக் காரணம் சொல்பவனுக்கு துன்பமே தொடர்ந்து வரும். நிம்மதி நம் செயலுக்கு உண்டான மதிப்பீடு தான். மனம் புனிதமானால் நிம்மதி வரும்.நிறைமனதாய் மற்றவனுக்கு உதவும் போது நிம்மதி வந்து சேரும். மனிதனாய் இருந்தால் நடந்து கொண்டால் மற்றது தானாய் நடக்கும். நிம்மதிக்கு வரம்பில்லை. மனம் ஒரு அமைதியான சோலை. கழிவுகளைக் கொண்டு நிறைத்தால் அங்கு குப்பை மேடே உருவாகும். நிறைகுடம் தளும்பாது. உணர்பவனை நிம்மதி தத்தெடுக்கும். நிலையானது இதுதானே.

காலப்போக்கில் சரிசெய்யலாம் என கறைகளை உருவாக்கக்கூடாது. காலம் குறித்து நிலைத்துவம் இல்லை. யாருக்கும் எப்போது வேண்டுமானால் எதுவும் வரலாம். நிம்மதியின் சாவி ஆய்ந்தறியும் மனதில் தான். வீண் விமர்சனங்களை வெற்றுக்கூச்சல்களை நம்பி முடிவுக்கு வந்தால் அவன் நிம்மதி மட்டுமில்லை உன் நிம்மதியும் சேர்ந்தே கெடும். காலம் கட்டளையிட்டால் எதுவும் மாறும். நீ எப்படி? உன்னை ஆய்ந்து பார். பின் செவி கொடு. தவறெனத் தெரிந்தால் திருந்து.. திருத்து. பெரிதாக்கி குளிர்காயாதே. உனக்குப்பின் உன்னோடு வருவது எது? எத்தனை நாள் உன் ஆட்டம்? மனதை நிலைப்படுத்தினால் நிம்மதி உனக்கே. புரிகிறதா?

■



# சித்திரைப் பொன் மகளே வருக !

இன்று எட்டுத் திக்கிலும்
சித்திரைப் பொன் மகளே உந்தன்
முத்திரை பதித்த முகம் தோன்றுகிறதே !

நோக்குமிடமெல்லாம்
சித்திரைப் பொன் மகளே உந்தன்
நேசக்கரம் நீட்டுகிறதே !

கேட்குமிடமெல்லாம்
சித்திரைப் பொன் மகளே உந்தன்
மனிதநேயம் ஒலிக்கிறதே!

பேசும் இடமெல்லாம்
சித்திரைப் பொன் மகளே உந்தன்
சீரும்சிறப்பும் பேசப்படுகிறதே!

வணங்கும் இடமெல்லாம்
சித்திரை பொன் மகளே உந்தன்
தெய்வ அருள் கிடைக்கிறதே!

சித்திரைப் பொன் மகளின்
நாளும் புன்னகை முகம் கண்டு
நாம் உள்ளம் மகிழ்ந்து
வணங்கி வரவேற்போம்!



**பூ. சுப்ரமணியன்,**
பள்ளிக்கரணை, சென்னை

# வேப்பம்பூவும் வெல்லமும்

**உமா ஸ்வாமிநாதன்**
பெங்களூரு



அந்த அழகிய கிராமத்து வீட்டில், அதிகாலையிலேயே வாசனை தூக்கியது.

சித்திரை புத்தாண்டு என்பது புதிய தொடக்கத்தையும், நம்பிக்கையையும் குறிக்கும் ஒரு அழகான திருவிழா.

மலர்விழி வழக்கம்போல அதிகாலையில் எழுந்து மாக்கோலம் போட்டுக் கொண்டிருந்தாள்.

அன்று சித்திரை முதல் நாள். நகரத்தில் வேலை செய்யும் அவள் மகன் கதிர், தன் மனைவியோடு அன்று ஊருக்கு வருவதாகச் சொல்லியிருந்தான்.

மலர்விழிக்கு ஒரு சின்ன வருத்தம் இருந்தது. கடந்த சில வருடங்களாகவே கதிர், 'இதெல்லாம் ஒரு சடங்கு, லீவு கிடைப்பதே கஷ்டம்' என்று சொல்லி புத்தாண்டுக்கு வருவதைத் தவிர்த்து வந்தான்.

ஆனால், இந்த முறை அவன் வருவதாகச் சொன்னது அவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது.

மதிய உணவிற்கு மலர்விழி 'அறுசுவை பச்சடி' தயார் செய்தாள். அதில் இனிப்புக்காக வெல்லம், புளிப்புக்காக மாங்காய், காரத்திற்காக மிளகாய், மற்றும் கசப்பிற்காக வேப்பம்பூ என அனைத்தையும் சேர்த்தாள்.

கதிர் வீட்டிற்கு வந்ததும், தன் அம்மாவின் கைமணத்தில் உருவான அந்தப் பச்சடியைச் சாப்பிட்டான்.

'ஏன்மா, இந்த வேப்பம்பூ கசப்பை மட்டும் கொஞ்சம் கம்மி பண்ணிருக்கலாமே?' என்று சிரித்துக் கொண்டே கேட்டான்.

மலர்விழி மென்மையாகப் புன்னகைத்துச் சொன்னாள், 'வாழ்க்கைன்னா இனிப்பு மட்டும் இல்லப்பா... கசப்பும்,

துவர்ப்பும் சேர்ந்ததுதான்.

இந்த வருஷம் உனக்கு எல்லா சூழ்நிலைகளையும் ஏத்துக்கிற மனப்பக்குவம் கிடைக்கணும்னுதான் இந்த அறுசுவை பச்சடி.'

நகரத்தில் நம் விடியல் பெரும் பாலும் அலாரத்தின் சத்தத்திலும், 'நோட்டிபிகேஷன்' களிலும் தொடங்குகிறது.

ஆனால் சித்திரை விடியல் 'கனி காணுதல்'.

மங்கலப் பொருட்கள், பழங்கள், தானியங்கள் என இயற்கையின் செழுமையை முதலில் பார்ப்பது. இது 'இன்று என்ன நடக்கும்?' என்ற பயத்தை நீக்கி, 'இயற்கை நமக்களிக்கத் தயாராக இருக்கிறது' என்ற நேர்மறை எண்ணத்தை விதைக்கிறது.

நகரத்தில் நாம் கசப்புகளைத் தவிர்க்க நினைக்கிறோம், அதனாலேயே ஒரு சிறு தோல்வி கூட நம்மை நிலைகுலையச் செய்கிறது. ஆனால் இப்பண்பாடு கசப்பையும் ஒரு சுவையாக ருசிக்கக் கற்றுக் கொடுக்கிறது.

முன்பெல்லாம் ஊர் மத்தியில் பஞ்சாங்கம் வாசிப்பார்கள். அது வெறும் ஜோதிடம் அல்ல; மழையையும், காற்றையும், வரப்போகும் காலத்தையும் கணிக்க பழகிய ஒரு அறிவியல்.

கான்க்ரீட் காடுகளுக்குள் மழையையும் வெயிலையும் நாம் 'தடையாகவே' பார்க்கிறோம்.

ஆனால் சித்திரை திருநாள், இயற்கையோடு இயைந்து வாழ்வதே நிம்மதி என்பதை நமக்கு நினைவூட்டுகிறது.

'நகரத்தில் நாம் வசதிகளைச் சேர்த்தோம், ஆனால் வசிப்பதற்கான அமைதியைத் தொலைத்தோம். சித்திரை என்பது வெறும் புத்தாண்டு அல்ல; அது ஒரு 'ரீசெட்' பட்டன். மீண்டும் நம் வேர்களுக்கே திரும்பிச் சென்று, இருக்கும் நிலையில் திருப்தி அடையக் கற்றுத்தரும் பாடம்.'

வாழ்க்கை என்பது ஓடிப் போய் சேர வேண்டிய இலக்கு அல்ல; ஒவ்வொரு நொடியையும் அதன் அனைத்துச் சுவைகளோடும் அனுபவிக்க வேண்டிய ஒரு கலை என்று!

கதிருக்கு அப்போதுதான் புரிந்தது. சித்திரை திருநாள் என்பது வெறும் கொண்டாட்டம் மட்டுமல்ல, வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வுகளைப் புன்னகையோடு வரவேற்கும் ஒரு பண்பாடு என்று.

தன் பிஸியான நகர வாழ்க்கையில் இந்த எளிய உண்மையை மறந்ததை நினைத்து அவன் நெகிழ்ந்தான்.

வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் கலந்தே வரும். இரண்டையும் சமமாகப் பாவித்து, புதிய நம்பிக்கையுடன் அடுத்த அடியை எடுத்து வைப்பதே உண்மையான புத்தாண்டுத் தொடக்கம்.



# குறுங்கவிதைகள்

நான் நினைத்த
கதைகளில்
எத்தனை பிழைகள்....
என்னிடம் தோற்றுத்தான்
பிறரிடம் வெல்ல
வேண்டியுள்ளது...

உன்னுடன் பேசும்
ஒவ்வொருவருக்கும்
உன் செவிகளைத்
திறந்து கொள்...
மனதை அல்ல...
மனிதம் மனிதனோடுதான்...
மனம் மனதைப் புரிந்த
மட்டுப்படுத்தப்பட்ட பாதையில்
உறவோடு மட்டுமே பயணிக்கும்...

பொருத்தமற்ற நேரத்தில்
செய்யப்படும் உபதேசம்
மௌனங்களைத் தீக்கிரைக்கி
மதியை மயக்கி விடுகிறது
சில பொழுதுகளில்...

அமைதியான எண்ணங்கள்
அழகானவை...
அங்கு கானகமாக இருந்தாலும்
குளிர்ந்த தென்றலும்
மிதமான பனித்துளிகளும்
அந்த ஒட்டுமொத்தத்
தேசத்தை ஆட்சி
செய்கின்றன...
யாரையும் புண்படுத்தாத
மெல்லிய மலர்மணம்
நுகர்வுகளை நகர்த்தாமல் நிற்கின்றன....

முன்னேற்றம் வளர்ச்சி
எதிலும் குறைவில்லை
திருப்தி..
நிவர்த்திக்க முடியாத
வறுமையில் இவ்வுலகம்
ஆன்மீகம்
விழுங்கும்
ஆன்மாவின் வறுமை
நீங்கவே இல்லை...

சில தொடர்களுக்கு
நிறுத்தம்
கொடுத்து ஒதுங்கி
நின்றாலும் இந்த உள்ளம்
நிறுத்தமின்றி பறந்து
கொள்ள கொஞ்சமேனும்
மறக்கவில்லை....



பொதுமைப் பட்ட
இடங்களில் சலனமின்றிய
பல மௌனங்கள் தான் எமக்கான
அடையாளங்களை
கொஞ்சம் கொஞ்சமாய்
சேர்த்துக் கொண்டிருக்கிறது
மண்ணுக்கடியில்
உணவு சேர்க்கும்
எறும்புகள் போல
மறையும் இந்த மௌனம்...

காதில் கேட்பதை மறைத்து
மௌனங்களுடன்
நடமாடும் மனிதம்
என்றும் புனிதம்தான்

முறுக்கேறிய கயிறைப் போல முந்தாநாள்
பேசிய வார்த்தைகளில் ஒன்று
திரிக்கப்பட்டு
நெரிக்கப் படுகிறது....

ஒருதுளிக் கவிச்சொட்டைச்
சிந்தாத இந்த
விரல்களுக்குள்
மௌனமாய்
அழுது புலம்புகிறது
எழுத்துகள்...

மாற்றங்கள் வேண்டும்
என்பதற்காக
மறந்து வாழ்வது
மாற்றங்களை
நடத்தையாக்கி
விடமாட்டாது...
என்பதுதான் உண்மை..

சேஹூ மொஹம்மது பெனாஸிரா,
முஸ்லிம் ஹல்மில்லாவ.

பட்டாம்பூச்சிகள் பறந்து
வண்ணம் மிளிர்கிறது
பூஞ்சோலை!

வெற்றுக் காகிதம்
இறைவனால் எழுதப்படும்
நாளைய பொழுது!

வளர்வதால்
தேய்கிறது
ஆயுட்காலம்!

கதாபாத்திரம் முற்றுப்பெற்று
கதை முடிந்தது
மரணம்

மலரின்மீது பனித்தூறல்
ஒற்றியெடுக்க ஓடிவந்தது
வண்ணத்துப்பூச்சி!

கல் எறிந்தவர்க்கும்
தன்அழகைக் காட்டி
ரசிக்கிறது குளம்!

காற்றின் கோபம்
மரங்கள்மௌனம்
கொதிக்கிறது உலகு!

வானம் எங்களின்
சொந்தம் என்கிறது
பறவைகளின் சிறகு!

தாயற்ற தொட்டிக்குழந்தை
தண்ணீர் புகட்டுகிறாள்
மாடித்தோட்ட மங்கை!

ஏழைவீட்டின்
பழைய கூரை உள்ளே
எத்தனை நட்சத்திரம்!

மனிதர்க்கு பறக்கும்
சிறகில்லையா?கேட்கிறது
கூண்டுக்கிளி

சோறு சமைக்கும்
அம்மா கொதிக்கிறாள்
அதிகாலைச் சமையல்

தீயில் கரிந்தும்
மண்ணில் புதைந்தும்
மோட்சமடைகிறது சாதி

குளம் நிரம்பி
கன்னத்தில் வழிகிறது
கண்ணீர்

தாகத்தில் ஓடிவந்தேன்
காணாமல் போனது
கானல் நீர்

சூரியனின் தாகம்
பூமிநீர் வற்றியது
வேனிற் காலம்

அ.அனீஸ்பாத்திமா
உத்தமபாளையம்.

# ஆகச் சிறந்த அறம்

அருகில் இருக்கும் போதெல்லாம் , பெற்றோரை,
அலட்சியம் செய்தன உன் கண்கள்!
உயிராய் அவர்கள் உன் எதிரில் உலாவிய போது ,
உன் உதடுகள் பேசின ஏளனச் சொற்கள்
அன்பாய் அவர்களிடம் சில வார்த்தைகள் பேச - உன்
அகந்தை தடுத்து நிறுத்தியது!
இன்றோ அவர்கள் கல்லறை சென்ற பிறகு - உன்
இதயம் உணர்கிறது வெறுமையை.
அவர்களின் கல்லறை முன்னே நீ சிந்தும் கண்ணீர் ,
அழகான கானல் நீராய் வற்றிப் போகிறது!
அவர்கள் இவ்வுலகில் உயிரோடு இருந்த போது ,
அவர்களை முதியோர் இல்லத்தில் சேர்ப்பதும்,
உயிர் பிரிந்த பின் அவர்களின் உயிரற்ற உடலுக்கு,
உயர்ந்த பட்டுத் துணி போர்த்தி அழுவதும்,
அறம் சார்ந்த செயல்கள் அல்ல!
அறிவு சார்ந்த செயல்களும் அல்ல.!
பத்து மாதம் உன்னை சுமந்தவள் அவள் -- தன்
பசி மறந்து உனக்கு ஊட்டியவள்;
வியர்வை சிந்தி வளர்த்தவள் அவள் - உன்னை
விண்ணைத் தொடச் செய்த ஏணி அவள்!
அவள் இருக்கும் வரை இன்முகம் காட்டி போற்றுவதே ,
உன் தலையாய உயர்ந்த கடமை.
அவர்களை இழந்த பிறகு நீ செய்யும் சடங்கை விட ,
அவர்கள் இருக்கும்போது நீ காட்டும் அன்பே ..!
இவ்வுலகில் உனக்கு 'ஆகச் சிறந்த அறம்! '
இதுவே உனக்கு ஆகச்சிறந்த பலம்.

**கவிஞர் இரா.கலைச்செல்வி,**
செங்கல்பட்டு மாவட்டம்



# ஞான சாகரம்

1
அறிவுடைச் சான்றோர் ஆக்கிடும் வரமாம்
அகன்ற இப்பார் செழித்திடும் உரமாம்
செறிவுடைச் சொல்லின் சித்திரப் பூங்காடு
சீர்மையின் பொருளில் பொழிதிரள் பாற்கடல்
அருஞ்செல்வம் ஏந்தி பொலிகின்ற பொற்றேர்
அழகுறச் சாற்றிய காகிதக் கற்றைகள்
திருநிறைக் கலசமாய் தேயா முழுநிலவாய்
தீரர்குழாம் உருவாக்கும் விந்தைசெய் சோதி

2
ஆசு களைந்து அறிவு விருத்தி
அவனியில் பிறக்கும் அமுதின் தோட்டம்
தேசம் சமைத்து திவ்வியம் படைக்கும்
திகட்டாத ஞானக் கருவூலம் அமைக்கும்
பேசும் காகிதம் புனையும் காதைகள்
புரவி மீதேறி பாய்ந்திடும் கனவுகள்
மாசறு சமூகம் மலர்த்திடத் துணையாம்
மதிவழி நுழையும் மாண்புறு கணையாம்

3
அணுவையும் பிளந்து ஆராயப் பணித்திடும்
அதீதமான வலிமை எம்மிலே விதைத்திடும்
பனுவலின் காகிதம் பெருஞ்சேதி செப்பிடும்
பாதையை நேராக்கிப் பண்பினை வளர்த்திடும்
கனிவான போதனையில் காலத்தை வென்றிடும்
கவினுறை பண்பில் கண்டங்கள் தாண்டிடும்
கனிகளின் தீஞ்சுவைக் கலைகளாய் வழிந்திடும்
கண்ணிகள் அன்றோ கனதியின் ஏடுகள்?

4
பட்டத்தின் குரு படிப்பறிவின் கரு
பாராளும் வித்தகம் பவித்திரமாய் ஓதிடும்
திட்டமாய்த் தேர்ந்து திறன்வழி நல்கிடும்
திசையாவும் மிகைத்து தெளிசாதனை புரிந்திடும்
மொட்டவிழ் செம்மலர் சுகந்தமாய் எழுந்திடும்
மகாவேள்வி ஒளியாகி மகானென உயர்த்திடும்
தொட்டெடுத்து உவப்புடனே தூயநூல் விரிப்பாய்
தாகந்தீர ஞானசாகரம் நயனங்களால் அருந்துவாய்

5
சிந்தையில் ஒளியேற்றி சீர்கல்வி தந்திடும்
சுயஒழுக்கம் சிரமேற்று சுபவழியைக் காட்டிடும்
மந்தையான மனிதரை மாமனிதராய் மாற்றிடும்
மதிநுட்பம் வளர்க்கின்ற கனியமுதாய் இனித்திடும்
விந்தைபல புரிகின்ற விதைகளின் தருவாகும்
விதிதனை மாற்றுகின்ற வீரியத்தின் எருவாகும்
மந்திரமாய் அழுக்ககற்றும் உன்னதப் படைப்பாகும்
மலர்த்தோப்பின் மகத்துவமே
மானிலத்தின் மதிநூல்கள்

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்,இலங்கை





# முதுமை

(தன்முனைச் சரம் -
அந்தாதியாக)

●

வாய்ப்பின் சேய்மை
அருகும் ஆசைகள்
முறுகும் முனைப்பு
முதுமையின் தடங்கல்

●

தடங்கல் மாற்ற
தவிக்கும் இதயம்
எதையும் செய்ய
எப்போதும் முனையும்

●

முனைப்பும் நினைப்பும்
இனிக்கும் நினைவுதான்
கனியும் காலம்
இனியும் கனவா

●

கனவில் துரத்தும்
இனிக்கும் நினைவு
இன்னும் இறுகுது
முதுமையின் முடிச்சு

●

முடிச்சை அவிழ்க்கத்
துடிக்கும் முதுமை
எடுக்கும் முடிவு
மடியா வாய்ப்பு



# உலக குரல்

(தன்முனைச் சரம் -
அந்தாதி)

●

உரக்க கேட்கும்
மௌனத்தின் கூவல்
கூர்ந்து கேட்க
ஈர்க்கும் குரல்

●

குரல் எழும்பா
குரலை உற்றுக் கேள்
உண்மை எழும்
ஏற்றுக் கொள்

●

ஏற்றுக் கொள்ளும்
உறுதி வேண்டும்
தயக்கம் கொள்ளும்
மயக்கம் வேண்டாம்

சசிகலா விஸ்வநாதன்

# சற்றே நீளமானது நினைவு

அதை அத்தனையும் இந்த பேனா மைக்குள்
பூட்டி விட முடியுமா தெரியவில்லை.
முயற்சிக்கிறேன்.
ஆலமரத்தடி அரசமரத்தடி விளையாட்டு
ஒன்றாய் உட்கார்ந்து சாப்பிட்ட சாப்பாடு.

என் நண்பன் கார்த்தி பாரதியானதும்!!
டேவிட் லகான் கோழிகளையும்
டப்பா முட்டைகளையும் தேடியதும்
டேனியலை தடிக்க செய்த பூனைகஞ்சானையும்

காலரா தடுப்பூசிக்காக பயந்து ஓடியதும்
பள்ளியில் அறிமுகப்படுத்திய மேகி,
பேம்பினோ வை குதுகலத்துடன்
வீட்டுக்கு எடுத்து சென்றதும்
ரெஜிதா, சோஃபியின் மின்னல் வேக ஓட்டமும்
ரிக் ஷா மாமாவின் வாஞ்சையும்

ஆண்டு விழாவில் மேடையை அலங்கரித்த
ஹாவா ஹாவா வும்
என்னுயிர் தோழி கலையின் நின்னுக்கோரியும்,
ஒஹோ மேகம் வந்ததும்
சீனியர் மகாலட்சுமியின் சைன் அறியேன்,
காஸ் அறியேன்..ட்ரிகோமென்ட்ரி
நானறியேனையும்
சீனியர் சந்தனபொட்டு சசி அண்ணாவையும்
பத்தாம் ஆண்டில் ஆசியர் தினத்தில்
முதன் முதலில் புடவை கட்டி பாடம் நடத்தியதும்
நண்பர்களிடம் வாங்கிய ஆட்டோகிராஃப்
அட்டைகளும்
மறக்க தான் இயலுமா?

என் மதிப்பிற்கும் வணக்கத்திற்குரிய
ஆசிரிய பெருமக்களை சற்று
வாஞ்சையோடு நினைத்து பார்க்கிறேன்.

கற்பகம் அம்மாவின் தேனிசையும்
சரோஜா, மனோரஞ்சிதம் அம்மாவின்
தமிழ் புலமையும்

உஷா அம்மாவின் 'க' உச்சரிப்பும்
வரலாறு முக்கியம்
ஆம் எங்கள் ஜெயராணி அம்மா எடுக்கும்
வரலாறு எப்போதும் உயர்வு

ஓமனா அம்மாவின் பார்டன்
நாககண்ணிகா அம்மாவின்
பாம்பு நீள பின்னல்
சக்ரபாணி ஐயா வின் பொருளாதாரம்
எங்கள் அன்பு அப்பா
நேருவின் வணிகவியல்
ராஜகுமாரி அம்மாவின்
நான் டீடெயில் கதைகள்.
இன்னும் விடுபட்டவை எத்தனையோ!!

ஆசிரியர்களுக்கு ரகசியமாய்
அடைமொழி கொடுத்து அழைத்து
புன்னகைத்திருக்கிறோம்
எந்த நினைவை எடுக்க
எதனை கோர்க்க

இன்னும் மனதிலும் புத்தியிலும்
மங்கலான ஒளிக்கீற்றில் தெரியும்
இவையனைத்தும்...

அன்று விஜயந்தா எனும் ஆலமரத்தின் கீழ்
நாங்கள் விதைகளானோம்
இதோ இன்று விருட்சமாக வளர்ந்து நிற்கிறோம்

இதற்கு நீர் வார்த்து, களை எடுத்து...
உரம் போட்டு வளர்த்தெடுத்த எம் பள்ளி
இன்னொரு தாய் மடி



# கவிதா டீச்சர் வேலைக்கு போறாங்க...

–இராஜகை நிலவன்
மும்பை

கவிதாவிற்கு முதலில் அதிர்ச்சியாகத்தானிருந்தது. அப்பா இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுவார் என்று கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை.

'மற்றவர்களைப் போல தினமும் புதிது புதிதாய் உடுத்திக்கொண்டு வேலைக்குப் போகவேண்டும். சம்பாதித்து தன் காலில் நிற்க வேண்டும்' என மனக் கோட்டைக் கட்டியிருந்த கவிதாவிற்கு அப்பா சொன்ன செய்தி பேரிடியாக இருந்தது..

'கவிதா, நீ இனி வேலைக்குப் போனாலும் நாங்கள் அதற்குப் பிறகும் உனக்கு வரதட்சணை கொடுத்துதான் கல்யாணம் கட்டிக்கொடுக்க வேண்டும். டீச்சர் வேலை வாங்குவதற்கு எழுபத்தையாயிரம் கொடுத்து இப்போது நீ வேலைக்குப் போனாலும் பின்னாலே இதைவிட அதிகமாக செலவழிக்க வேண்டிய பிரச்சினை வரும். அதைவிட இப்போதே கூட ஒரு லட்ச ரூபாய் போட்டு அத்தை மகன் ராஜேந்திரனுக்கு திருமணம் செய்து விட்டால் எங்கள் பிரச்சினை தீரும். ஒழுங்காக நாங்கள் சொல்வதைக் கேளம்மா' என்றார்.

'அப்பா நீங்கள் எப்படியும் எனக்கும் ராஜேந்திரன் அத்தானுக்கும் தானே திருமணம் செய்து வைக்கப் போகிறீர்கள். சின்ன வயதிலிருந்தே எனக்கு அவர் என்றும், அவருக்கு நான் என்றும் முடிவு பண்ணிய விஷயம் தானே. அவர்களிடமே கேட்டு இந்த விஷயத்தை முடிவு செய்யலாமே'.

'ராஜேந்திரனிடம் என்னம்மா கேட்க நினைக்கிறாய்?'.

'நான் டீச்சர் வேலைக்குப் போவதால் மாதச் சம்பளம் கிடைக்கும். ஆனால் வரதட்சணை தருவதாகச் சொன்ன பணத்திலே ரூபாய் எழுபத்தையாயிரம் வேலை கிடைப்பதற்காக கொடுக்க வேண்டியுள்ளது. அதை பிறகு குறைத்து தான் செய்வோம். சம்மதமா? என்று கேட்டுப்பார்க்கலாமே' என்றாள் கவிதா.

'ஓ.கே. அதுவும் சரிதான். இருந்தாலும் ராஜேந்திரனிடம் மட்டும் கேட்பதைவிட உன் மாமா, மாமியையும் அழைத்து முறையாக கேட்டுவிட்டு அவர்கள் சம்மதித்தால் கண்டிப்பாக பணம் கொடுத்து உனக்கு இந்த டீச்சர் வேலையை வாங்கித் தருகிறேன்' என்று அருணாச்சலம் சொல்லிக் கொண்டிருக்கும் போது உள்ளே வந்த ராஜேந்திரன் 'என்ன மாமா, கவிதாவிடம் என்ன வாக்குவாதம் நடந்து கொண்டிருக்கிறது?' என்றான்.

'வாங்க மாப்பிள்ளை' என்று வரவேற்றவர், 'கவிதா அந்த நாற்காலியை எடுத்துப் போடு' என்றார்.

ராஜேந்திரன் உட்கார்ந்ததும் 'மோர்

கொண்டு வா' என்றார் அருணாச்சலம்.

'வீணாக எதற்கு இதெல்லாம் மாமா, இப்போது வீட்டிலேயிருந்து கிளம்பும் போது தான் மோர் சாப்பிட்டுட்டு வந்தேன்'

'பரவாயில்லை மாப்பிள்ளை. மோர் தானே, வாங்கிச் சாப்பிடுங்கள்' என்றார். கவிதா கொடுத்த மோரை வாங்கிக் கொண்டு 'ஏதோ பேசிக் கொண்டிருந்த மாதிரி இருந்ததே, என்ன விஷயம் கவிதா' என்று கேட்டான்.

'அப்பாவிடம் கேளுங்கள்' என்று அவன் குடித்த கிளாஸை வாங்கிக் கொண்டாள் கவிதா.

'என்ன விஷயம் மாமா?'

'ஒன்றுமில்லை மாப்பிள்ளை, அவள் டீச்சர் வேலைக்குப் போகவேண்டும் என்று அடம்பிடிக்கிறாள்'.

'நல்லது தானே மாமா. இரண்டு பேரும் சம்பாதித்தால் நாளைக்கு நாங்கள் வசதியாக இருக்க முடியுமே'.

'அது சரிதான் மாப்பிள்ளை. ஏற்கனவே விவசாயம் சரியில்லை. இதிலே வேற இவளுக்கு வேலை எடுப்பதற்கு ரூபாய் எழுபத்தையாயிரம் கேட்கிறார்கள்.

நாளைக்கு உங்கள் திருமணத்திற்கு என்னாலே நான் சொன்ன பணத்தை கொடுக்க முடியாமல் போய் விடலாமே, அதனால்தான் யோசித்துக் கொண்டிருக்கிறோம்'.

'அதெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் கவிதா வேலைக்குப் போக முடியுமா?

நீங்கள் கொடுக்க வேண்டிய பணத்தை கொடுத்து வேலைக்கு அவளை அனுப்பிவையுங்கள். ஏற்கனவே பேசிய பணத்தில் வேண்டுமானால் இந்தப் பணம் எழுபத்தையாயிரம் குறைத்துக் கொண்டால் போச்சு' என்றான்.

'எதுவானாலும் உங்கள் அம்மா அப்பாவை ஒரு வார்த்தைக் கலந்து பேசிக் கொள்ளலாமே மாப்பிள்ளை'.

'அதெல்லாம் ஒன்றும் தேவையில்லை மாமா. நான் சொல்லிக் கொள்கிறேன். நீங்கள் முதலிலே அவளுக்கு வேலையை வாங்கிக் கொடுங்கள். என்ன டீச்சர் வரட்டுமா?' என்று கேலியாக கவிதாவைப் பார்த்துவிட்டுக் கிளம்பினான் ராஜேந்திரன்.

பணம் கொடுத்து கவிதாவிற்கு வேலை கிடைத்து விட மிகச் சந்தோஷமாக வேலைக்குப் போய்க் கொண்டிருந்தாள் கவிதா.

அன்று ராஜேந்திரனுடைய அப்பா ராமேஸ்வரனும், அம்மா தேவிகாவும் கவிதாவின் வீட்டிற்கு வந்திருந்தார்கள். அவர்களோடு ராஜேந்திரனும் வந்திருந்தான்.

அவர்களை வரவேற்ற அருணாச்சலம் 'வாங்க உட்காருங்க, என்ன விஷயம்?' என்றார்.

'எங்கேயோ அவசரமாகக் கிளம்பிக் கொண்டிருக்கிறீர்கள் போலியிருக்கு' என்றார் ராமேஸ்வரன்.

'ஆமாம். வாழைத் தோட்டத்திலே தண்ணீர் பாய்ந்து கொண்டிருக்கிறது. கொஞ்சம் எட்டிப் பார்த்துவிட்டு வரலாம் என்று கிளம்பினேன். நீங்கள் போட்டிருந்த புகையிலை செடியெல்லாம் விளையும். தருவாய்க்கு வந்து விட்டதா?'

என்று கேட்டார் அருணாச்சலம்.

‘ம்.. இந்த வருஷம் விவசாயம் கொஞ்சம் பரவாயில்லை‘.

‘என்ன திடுதிப்பென்று வீடு தேடி வந்திருக்கிறீர்கள். நம்ம மாப்பிள்ளை கிட்டே சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே‘ என்றார்.

‘அதற்கென்ன. இப்போதுதான் நாங்களே தேடி வந்து விட்டோமே‘.

‘சொல்லுங்க என்ன விசேஷம்?‘

‘எத்தனை நாளைக்குத்தான் ராஜேந்திரனை மாப்பிள்ளை என்று கூப்பிட்டுக் கொண்டிருப்பீர்கள். அவனை எப்போது தான் உங்கள் வீட்டு மாப்பிள்ளை யாக்கிக் கொள்ளப் போகிறீர்கள்?‘

‘நீங்கள் சொன்னால் உடனே திருமணத்தை வைத்துக் கொள்ள வேண்டியது தானே?‘

‘அதுவும் சரிதான். நாங்கள் ஏற்கனவே சொன்ன படி பணம் எப்போது கொடுக்கிறதா உத்தேசம்? நல்ல படியா ஒருநாள் குறித்து நிச்சயதாம்பூலம் வைத்துக் கொள்



ளலாம்‘ என்றார் ராமேஸ்வரன்.

‘அந்தப் பணத்திலே கவிதாவிற்கு டீச்சர் வேலை வாங்குவதற்காக ரூபாய் எழுபத்தையாயிரம் கொடுத்திருக்கிறோமே. நம்ம மாப்பிள்ளை உங்களிடம் சொல்லவில்லையா?‘ என்று கேட்டார் அருணாச்சலம்.

‘அவன் சின்னப் பையன். அவனிடம் என்ன கேட்க வேண்டியதிருக்கிறது. நாம் ஏற்கனவே பேசிய பணத்தை கொடுக்க வேண்டியதுதானே உங்கள் பொறுப்பு‘ என்றாள் தேவிகா.

கவிதா, ராஜேந்திரனைத் திரும்பிப் பார்க்க, அவன் அவளுடைய பார்வையைச் சந்திக்க விரும்பாமல் மேலே விட்டத்தைப் பார்க்க ஆரம்பித்தான்.

‘பாருங்க மச்சான். உங்கள் மகள் டீச்சர் வேலைக்குப் போவதற்கு நீங்கள் எவ்வளவு கொடுத்தீர்கள் என்பதை பற்றி எங்களுக்கு கவலையில்லை. உங்கள் மகளுக்கு நீங்கள் என்ன செய்ய விருப்பமோ அதைச் செய்திருக்கிறீர்கள். அதற்கும் நம் பிள்ளைகள். கல்யாணத்திற்கும் என்ன சம்பந்தம்? சும்மா எதற்கெல்லாமோ முடிச்சுப் போட்டுப் பேசாதீர்கள். கொடுக்க வேண்டிய பணத்தை எப்போது கொடுப்பீர்கள் என்று சொல்லுங்கள். நாள் நட்சத்திரம் பார்க்க வேண்டும்‘ என்றார் ராமேஸ்வரன்.

‘நீங்கள் அப்படி சொல்லக்கூடாது மச்சான். நாங்கள் உங்களிடம் கலந்து கொண்ட பிறகுதான் கவிதா டீச்சர் வேலைக்குப் போவதற்கு பணம் கொடுப்பதைப் பற்றி முடிவு செய்ய வேண்டுமென்று நினைத்து பேசிக் கொண்டிருக்கும் போது ராஜேந்திரன்தான் ’நான் அம்மா அப்பாவிடம் பேசிக் கொள்கிறேன்‘ என்றார். என்ன மாப்பிள்ளை நீங்க ஒண்ணும் சொல்லாமல் உட்கார்ந்திருக்கிறீர்கள்‘ என்றார் அருணாச்சலம்.

‘ஆமாப்பா. நான் அன்றைக்கே உங்ககிட்ட‘ என்று ராஜேந்திரன் பேச ஆரம்பிக்க, ‘நீ சும்மாயிருடா. உனக்கு என்ன தெரியும். உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று எங்களுக்குத் தெரியும். அண்ணே! கொடுக்க வேண்டிய பணத்தை எப்போது கொடுக்க முடியும் என்று சொல்லியனுப்புங்கள். அப்புறம் திருமணத்தைப் பற்றிப் பேசலாம்‘ என்று எழுந்த தேவிகா ‘வாங்க போகலாம்‘ என்று கணவன் ராமேஸ்வரனையும், மகன் ராஜேந்திரனையும் அழைத்துக் கொண்டு கிளம்பினாள்.

கவிதாவும் அருணாச்சலமும் என்ன சொல்வதென்று திகைத்துக்கொண்டு நின்றனர்.

மறுநாள் கவிதா பள்ளிக்கூடம் முடிந்து வீட்டிற்கு வரும்போது எதிரே வந்த ராஜேந்திரன், ‘நான் எங்க அப்பா அம்மா கிட்டே எவ்வளவு எடுத்துச் சொல்லியும்‘ என்று பேசி முடிப்பதற்குள் ‘மிஸ்டர். நீங்கள் யார். உங்களைப் பார்த்த மாதிரி இல்லையே‘ என்றாள் கவிதா.

‘சொன்னால் கேளு. என்னைப் புரிந்து கொள்‘ என்று பின்னால் வந்த ராஜேந்திரனிடம் ‘பாருங்க. அப்பா அம்மா முன்னாலே நின்று தைரியமா பேசத் தெரியாத தொடை நடுங்கி. உங்களுக்கெல்லாம் கல்யாணம் தேவையா? போய்யா. போய் உன் அம்மாவின் முந்தானையைப் பிடித்துக் கொண்டு சுற்று‘ என்று கத்தியவள் வேகமாக வீட்டை நோக்கி நடந்தாள்.

■



# அழகு

## பாவலர் கருமலைத்தமிழாழன்



சோலைக்குப் பூவழகு ; நீல வானை
சொக்கவைக்கும் நிலவழகு ; செம்மை பூசும்
காலைக்குக் கதிரழகு ; கிராமத் திற்குக்
கரும்பச்சை வயலழகு ; இல்லத் திற்கு
மாலையிட்ட நல்மனையாள் அழகு ; தூய்மை
மனங்கள்தாம் மாந்தர்க்கழகு ; ஓங்கு யர்ந்த
ஆலைகளே நாட்டழகு ; வளத்தைக் கூட்டும்
அருந்தொழில்கள் உழைப்பிற்கே அழகைச் சேர்க்கும் !

புல்லிற்குப் பனிமுத்தே அழகு ; தேனே
புறவழகுப் பூவிற்கு அழகு ; நிற்கும்
கல்மலையே பூமிக்கு அழகு ; அந்தக்
கல்மலைக்கு வெண்முகிலே அழகு ; பாட்டின்
பல்சுவைக்கோ உவமைகளே அழகு ; நேயம்
பதிந்தநெஞ்சே மாந்தர்க்கு அழகு ; நாட்டைப்
பல்வகையில் உயர்த்துகின்ற உழைப்பின் மூலம்
படைக்கின்ற தொழில்வளமே அழகாம் என்றும் !

மலையளவு பொன்னிருந்தும் உழைக்கா விட்டால்
மணலளவு பொன்கூடத் தங்கி டாது
அலையலையாய்த் தோல்விவந்து வீழ்த்தும் போதும்
அடுத்தடுத்து நாம்முயன்றால் தழுவும் வெற்றி
தலையான அறிவியலைப் பயன்ப டுத்தித்
தரமான தொழில்வளத்தைப் பெருக்கு விப்போம்
நிலையாக நாமுழைத்தால் தொழிலில் நாடும்
நிமிர்ந்துநிற்கும் ; அழகாகப் பொலியும் வாழ்வே !

# நதியின் வடிவில் எல்லாம்

**1.பெருமழை**

நதியின் வடிவில் எல்லாம்
இப்போது ஈரமில்லை
எங்களின் வாழ்க்கையையெல்லாம்
நிர்மூலமாக்கி இருப்பதால்!

**2. உழைப்பாளி**

பாலையின்
வறண்ட காற்றில்
சேலைகளின்
கனவுகளை மறந்தவன்
ஏனோ
அவளை மகாராணியாக்கவும்,
அவள் வாழ்வை
சோலையாக்கவும்
இன்னமும் வியர்வை கடலில்
குளித்து கொண்டிருக்கிறான்!

**3. மொழி**

உன் பார்வைகளின் பாஷைகளை
ஒன்று விடாமல்
எழுத வேண்டும்
வரலாற்றுக் குறிப்புகளில்!

**4. மறதி**

நீ மெய் மறந்து
புத்தகங்களை படிக்கிறாய்
புத்தகங்கள்
உன்னை படிப்பதை
ஏனோ மறந்து விட்டாய்!

**5. உண்மை**

எல்லாம் போன பின்பு
வாழ்க்கை பற்றிய பயம்
துடிக்கும் இதயத்தில்
இருப்பதே இல்லை!

**6. பாதுகாப்பு**

தொலைந்து போன காதலை
தொலையாத நினைவுகளுடன்
பாதுகாக்கிறேன்!

**7. கனவு வாழ்க்கை**

ஒவ்வொரு வருடமும்
கனவுகளோடு தான்
பிறக்கின்றன
ஏனோ
ஒவ்வொரு வருட முடிவும்
வலிகளோடு தான்
நிறைவடைகின்றன
வாழும் வாழ்க்கையை போல!

**8. அவள்**

சிரிப்பது போல
நடிக்கத் தான் முடிகிறது
ஏனோ
உங்களை போல
ஈறு தெரிய
உண்மையாய் சிரிக்கவெல்லாம்
தெரியவில்லை.
ஒருவேளை

என் வாழ்க்கையில்
அவள் இல்லாமல் இருந்திருந்தால்
இவையெல்லாம்
நடக்காமல் கூட இருந்திருக்கும்!

**9.இணைந்த கைகள்**

உன் கைப்பற்றுதலில்
துளிர் விடுகிறது
என் நம்பிக்கை!

**10. வீதி**

எந்தன் வீதியில்
நடந்து தானடி வந்தாய்
தேரடி வீதி
எப்படி
தேவதை வீதியானது!

**11. தேவதை**

வெள்ளை ஆடை தான்
உடுத்தி வந்தாய்
ஏனோ
கொள்ளை போனது
பாழாய் போன மனசு

**12. திருவிழா**

நீ ஒவ்வொரு முறையும்
நடந்து வரும் போதெல்லாம்
எந்தன் வீதியில்
தேர் திருவிழா தான்!

**13. அம்மா**

அவள் மடி தருவது போல
ஆறுதலை
வேறெங்கும் உணர்ந்ததில்லை
ஏனோ
அவள் அம்மாவாகி போனதால்
இதுவரை
கடவுளாக
பார்த்ததில்லை!

**14. தூயக்காதல்**

நீ நொறுங்கி நிற்கும் போது
மனதின் வலிகளுக்கு
ஆறுதலாய் தலை சாய
மடி தருவதும்
தூய காதலின் பெருவடிவம் தான்!

**15. கர்மா**

மணமகனாய்
வரதட்சணைக்கு
வக்காலத்து
வாங்கிய வாய்கள்......
வரதட்சணை பாவம் என
பிரசங்கம் செய்கிறது
"பெண் குழந்தைக்கு தந்தையான பின்பு'


கும்பகோணம் லி .நௌஷாத் கான்
அபுதாபி




# கற்பகத்தின் கல்யாணம்





14

அன்புச்செல்வி சுப்புராஜு
பட்டாபிராம், சென்னை - 600072

'ஏங் கற்பகத்தம்மா... வந்ததும் வராததுமா இம்புட்டு சத்தம் போடற, கொஞ்சம் தன்மையாத்தேன் பேசேன்' சமாதானப் படுத்திய பாய் வீட்டு அத்தையிடம் 'பொறவு என்ன பாயம்மா, நீங்களே கேளுங்க... நானே இவருக்கு முடியலனு ஆஸ்பத்திரி, வீடுனு அல்லாடிக் கிட்டு... மருந்து, மாத்திரை, டெஸ்டுனு அங்கேயும், வீட்டு செலவையும் சமாளிக்க முடியாத கண்ணுமுழி பிதுங்கிட்டு நிக்கு றேன். ஆத்தாமைக்கு ரெண்டு வாய் சோறு திங்க விடுறாங்களா... இந்த சின்னவ என்னத்தையோ ஒளறுறா, பெரியவ திரு திருன்னு முழிக்குறா. என்னன்னு புரியாத படபடன்னு வருது. நேரமே சரியில்லை. எல்லாம் ஒட்டுமொத்தமாத்தான் வரும் போல'பேசிக்கொண்டே அழத் தொடங்கிய அம்மாவை மெதுவாக அணைத்துக் கொண் டாள் கற்பகம்.

'அதெல்லாம் ஒன்னுமில்லமா, யாரோ ஒறவுக்காரவுக நம்ம சித்தப்பாவைக் கூப்பிட்டுக்கிட்டு வந்தாக....' என்று ஆரம் பித்து நடந்தவைகளை முழுதாக சொல்லி முடித்தாள். கூடவே தனக்கு இன்னும் ஐந்து வருசம் கழித்துதான் கல்யாணம் பண்ண வேண்டும் என்று கோரிக்கையும் வைத்தாள்.

கற்பகம் சொன்னதைக் கேட்ட அம்மா, ஆழ்ந்த சிந்தனையில் மூழ்க, தன்னை முறைத்துப் பார்த்த அக்காவிடம் நாக்கைத் துருத்தி அழகு காட்டினாள் தங்கை.

'அப்பாவோட நெலமை ரொம்பவே மோசம். இப்பவோ பொறவோனு கெடக்கு. டாக்டரும் நம்புற மாதிரி ஒன்னுஞ் சொல்ல மாட்டேங்குறாரு, பேசாம இப்ப வந்திருக்க சம்பந்தம் நல்லவுகளா இருந்தா உனக்கு கல்யாணத்தை முடிச்சிடலாம் பாப்பா. அதான் நல்லது' அம்மா சொன்ன நிமிசம் 'அதெல்லாம் முடியாது மா, ஒங்க பேச்சு தட்டுறேனு நெனைக்காதீக, நா இன்னுங் கொஞ்சம் படிக்கணும். தையல் ஸ்கூலை பெரிசா வளர்கும், தங்கச்சி, தம்பிக இன்னும் ஸ்கூல் முடிக்கல... அப்பாவுக்கு இப்படி இருக்குறப்போ எனக்கு கல்யாணமா... அதெல்லாம் முடியாது மா. நா எவ்வளவோ தன்மையா சொன்னாலும் அவுகதா அப்படி விடாத கேக்குறாகனா நீங்களுமா? இந்த பேச்ச இத்தோட விட்டுட்டு அடுத்து ஆக வேண்டியத பாருங்க' படபடவென பேசிய கற்பகத்திடம் ஏதோ சொல்ல வந்த அம்மா அமைதியா சாப்பிடத் தொடங்கினார்கள்.

'நீங்க என்னங்கடா தூங்காம வேடிக்கை பாக்குறீக, பெரியவனே காலைல ஆஸ்பத்திரி போகணும். சீக்கிரம் எழுந்திருக்கணும் போய்த் தூங்கு.

உன்னால ஆனதை சிறப்பா முடிச்சிட்ட வாயாடி. நீயும் போய்த் தூங்கு' கற்பகம் பேசப்பேச 'இந்தாரு வாயாடினே அக்கானு கூட பார்க்க மாட்டேன். எதாவது சொல்லிடுவேன்' சண்டை போடும் தொனியில் தங்கச்சி வேகமா எழுந்திருக்க 'இஙகே மட்டும் வாயாடு, காலைல அவரு வாயாடினு சொல்லும் போது ஈஈஈஈன்னு நில்லு'

'சரிங்கத்தா, நல்ல விசயம் கூடி வரும்போது எதுக்கு இவ்வளவு வாக்கு வாதம்... எது நடக்குதோ அது நல்லதுக்கு தானு சொல்வாங்க. நாங்க போயிட்டு வரோம். கதவ சாத்திட்டு ரெண்டு பேரும் தூங்குங்க' அக்கம்பக்கத்தினர் கலைந்து சென்றனர்.

அடுத்த நாள் காலையில் அப்பாவைப் பார்க்க மதுரைக்கு அம்மா, பெரிய தம்பியுடன் கிளம்பிக் கொண்டிருந்தாள் கற்பகம்.

இன்னும் வரும்






# சின்ன விதையின் பெரிய கனவு

ஒரு சிறிய கிராமத்தில், ஒரு பழைய மரத்தின் கீழ் ஒரு சிறிய விதை கிடந்தது. அந்த விதை மிகவும் சின்னது. அதைப் பார்த்த மற்ற விதைகள் எல்லாம் சிரித்தன.

'நீ என்ன ஆகப் போறே?' என்ற ஒரு விதை கேட்டது.

சின்ன விதை சிரித்துக்கொண்டு, 'நான் ஒரு பெரிய மரமா வளர போறேன்!' என்றது.

அதைக் கேட்ட மற்ற விதைகள் சிரித்தன. 'நீயா?, பெரிய மரமா?' என்று கேலி செய்தன.

ஒரு நாள் மழை பெய்தது. அந்தச் சின்ன விதை மண்ணுக்குள் சென்றது. இருட்டும், ஈரப்பதமும் இருந்தது. அது கொஞ்சம் பயந்தது. ஆனால் தன் கனவை நினைத்தது.

'நான் வளரனும்... நான் முயற்சி செய்யணும்' என்று அது தன்னம்பிக்கை கொண்டது.

சில நாட்களில் அது முளைத்தது. மெதுவாக சிறிய செடியாக ஆனது. காற்று பலமாக வீசியது. சூரியன் வெயில் கொடுத்தது. சில சமயம் மழை அதிகமாக பெய்தது.

ஆனால் அந்தச் செடி ஒவ்வொரு சவாலையும் கடந்து வளர்ந்தது.

ஆண்டுகள் கழித்து...

அதே இடத்தில் ஒரு பெரிய, அழகான மரம் நின்றது. பறவைகள் அதில் கூடு

கட்டி வாழ்ந்தன. மக்கள் அதன் நிழலில் ஓய்வெடுத்தனர்.

அதைப் பார்த்த மற்ற விதைகள் மௌனம் ஆகின.

அந்த மரம் மெதுவாக சொன்னது, சின்னதா இருந்தாலும்... கனவு பெரியதா இருந்தா... நிச்சயம் நிஜமாகும்!'

**கதையின் கருத்து:**

தன்னம்பிக்கை மற்றும் முயற்சி இருந்தால் எந்த கனவும் நிஜமாகும்.



**ச. ஹாதி வித்யா**
பி.இ., எம்.பி.ஏ., எம்.எஸ்சி.,
உடுமலை




மு. சுஜிதா ஸ்ரீ, ஐந்தாம் வகுப்பு
தியாக ராஜா தொடக்கப்பள்ளி
ஸ்ரீவில்லிபுத்தூர்









மோ.ஹா.கனிஷா, எட்டாம் வகுப்பு
நேஷனல் மாடல் மேல்நிலைப்பள்ளி,
கோட்டமங்கலம்
உடுமலைப்பேட்டை


## Water Cycle





ஆ. ரிஹான் அஹமது,
7 ஆம் வகுப்பு, ஸ்டேன்ஸ்
ஆங்கிலோ இந்தியன் பள்ளி,
கோயமுத்தூர்





வே.க. ரோஹின் கவீ




இந்த நூல் வாசகர்களுக்குச் சொல்லும் செய்தி ஒன்றுதான்: உலகம் எவ்வளவு பெரியதாக இருந்தாலும், அதில் எத்தனை பிளவுகள் இருந்தாலும், உன்னிடமிருக்கும் 'சிறு உளி' (எண்ணம்) மற்றும் ஒரு 'சிறு நூல்' (அன்பு) கொண்டு அதனை அழகாக்க முடியும் என்பதே...

.

## நூல் அறிமுகம்

நூல் :

## சிற்றுளியின் செதுக்கல்கள்

ஆசிரியர் :

**இளங்கவி சு. பிரவந்திகா**

வெளியீடு :

ஓவியா பதிப்பகம்

பக்கங்கள்: 128

விலை: ₹150

'சிற்றுளியின் செதுக்கல்கள்' என்பது ஒரு சிறு கருவி (சொல்) கொண்டு பிரம்மாண்டமான உணர்வுகளைச் செதுக்கும் ஒரு முயற்சி. அட்டைப்படத்தில் உள்ள அந்தச் சிறுமி, கவிஞரின் ஒரு குறியீடு.

'சிற்றுளியின் செதுக்கல்கள்' - இந்தத் தலைப்பே மிக நுட்பமானது.

**சிற்றுளி:**

ஒரு மிகப்பெரிய பாறையை உடைக்கப் பெருந்துளை தேவையில்லை, ஒரு சிறு உளி போதும். இங்கே 'சிற்றுளி' என்பது கவிஞரின் பேனாவையோ அல்லது மிகச் சிறிய ஆனால் ஆழமான எண்ணங்களையோ குறிக்கிறது.

**செதுக்கல்கள்:**

கவிதை என்பது வெறும் எழுத்துக்கள் அல்ல;அவைமனப்பலகையில்செதுக்கப்பட்ட தழும்புகள் அல்லது சிற்பங்கள். ஒரு சிற்பி எப்படித் தேவையில்லாத கற்களை நீக்கி ஒரு வடிவத்தைக் கொண்டுவருகிறாரோ, அதுபோல வாழ்க்கையின் அனுபவங்களைச் செதுக்கி இந்த நூலை உருவாக்கியிருக்கிறார் கவிஞர்.

இதோ இலக்கிய விமர்சகர் பொன். குமார் அவர்களின் கூற்றே அனைத்தையும் அழகாகச் சொல்கிறது பாருங்களேன்...

'கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு அவர்களின் பேத்தி என்பதை கவிஞர் சு. பிரவந்திகா நிருபித்துள்ளார். தன்முனைக் கவிதையின் அளவுகோலை உணர்ந்து,

சரியாக உள்வாங்கி எழுதியுள்ளார். கற்பனை யில் எழுதாமல் கண்ணில் கண்டதையே எழுதி கவனத்தை ஈர்த்துள்ளார். சிறுமி என்றாலும் சிந்தனையில் ஒரு முதிர்ச்சியைக் காணமுடிகிறது. பதினாறு வயது என்றாலும் பட்டம் பெற்ற பக்குவத்தை வெளிப்படுத்தியுள்ளார். புதுக்கவிதை போல, நவீனக் கவிதை போல, ஹைக்கூ கவிதை போல தன்முனைக் கவிதையும் தமிழில் செழித்தோங்கும் என்பதைத் தெரிவிக்கிறது கவிஞர். சு. பிரவந்திகாவின் சிற்றுளியின் செதுக்கல்கள்.'

----- **கவிஞர் பொன். குமார்**

இந்த நூலின் அட்டைப்படம் தலைப்பிற்கு இன்னும் வலுசேர்க்கிறது:

• ***சுவரில் பிளவு:*** அது சமூகத்தின் பிளவாகவோ, மனதின் காயமாகவோ அல்லது ஒரு தடையாகவோ இருக்கலாம்.

• ***சிறுமி தையலிடுதல்:*** ஒரு சிறுமி அந்தப் பிளவைத் தையல் போட்டு இணைக்க முயல்கிறாள். இது 'கலை' மற்றும் 'இலக்கியத்தின்' வேலையைக் காட்டுகிறது. உலகம் எதைப் பிளவு படுத்துகிறதோ, அதைக் கவிதை தன் அன்பால் இணைக்கிறது.

• ***அப்பாவித்தனத்தின் வலிமை:*** ஒரு பெரிய சுவரைத் தையல் இடுவது சாத்தியமற்றதாகத் தோன்றலாம். ஆனால், அந்த முயற்சியே ஒரு பெரும் புரட்சி. இதுவே 'சிற்றுளியின்' வலிமை.

'சுவற்றின் பிளவை
ஒரு சிறுமி தைக்கிறாள்...
சாத்தியமற்றது எனச் சிரிப்பவர்களுக்குத் தெரியாது,
கவிதை எனும் சிற்றுளி
கல்லையும் மெழுகாக்கும் என்று!'

தன்முனைக் கவிதையின் புதிய முகம்

'தன்முனைக் கவிதை' என்பது தமிழில் வேகமாக வளர்ந்து வரும் ஒரு நவீனக் கவிதை வடிவம். இது ஹைக்கூவைப் போலச் சுருக்கமாகவும், அதே சமயம் ஒரு தனிமனிதனின் அக உணர்வுகளையும் அவன் உலகைப் பார்க்கும் கோணத்தையும் 'முனைப்போடு' வெளிப்படுத்துவதாகும்.

பிரவந்திகாவின் கவிதைகளில் இந்த 'தன்முனைப்பு' துல்லியமாக உள்ளது. அவர் எதையும் கற்பனையாகக் கட்டியெழுப்பாமல், தன் கண்ணில் பட்ட யதார்த்தத்தைத் தன் மனதின் வழியே கடத்தித் தருகிறார். 'சுவற்றின் பிளவைத் தைக்கும் சிறுமி' போல, பிளவுபட்டுக் கிடக்கும் உலகைத் தன் கவிதை எனும் ஒற்றை முனையால் இணைக்க முயலும் இவரின் முயற்சி பாராட்டுக்குரியது..

மொழியில் உயர்வாம்
தமிழினைத் தொழுவோம்
வள்ளுவத்தைப் பயின்று
வளமாய் வாழ்வோம்

இந்த நான்கு வரிகள் 'தமிழ்' மற்றும் 'வள்ளுவம்' ஆகிய இரண்டையும் ஒரு மனிதனின் வாழ்வாதாரமாக (Life support) முன்னிறுத்துகின்றன. 'மொழியில் உயர்வாம் தமிழினைத் தொழுவோம்' - தமிழை வெறும் தொடர்பு மொழியாகப் பார்க்காமல், ஒரு பண்பாட்டு அடையாளமாக (Identity) உயர்த்திப் பிடிப்பதன் அவசியத்தை இது உணர்த்துகிறது. 'தொழுதல்' என்ற சொல் மொழியின் மீதான பக்தியையும் மரியாதையையும் காட்டுகிறது.

' சேட்டை செய்யாதே'
அம்மா என்னிடம் சொன்னார்
' சத்தம் போடாதே '
ஆச்சி அம்மாவிடம் சொன்னார்

தலைமுறை இடைவெளியையும், அதிகாரத்தின் சுழற்சியையும் மிக எளிமையான வரிகளில்... அம்மாவுக்கும் ஒரு அம்மா உண்டு என்பதை உணர்த்தும் அழகான கவிதை!

ஊர்ந்த பாம்பைப் பார்த்து
பயத்தில் கத்தினோம்
எங்களைப் பார்த்து
பாம்பு பயந்து ஓடியது
'நாம் எதைப் பார்த்துப் பயப்படு

கிறோமோ, அதுவும் நம்மைப் பார்த்துப் பயப்படுகிறது‘ என்ற ஆழமான உளவியல் உண்மையை இக்கவிதை நகைச்சுவை யோடும் நுட்பத்தோடும் பதிவு செய்கிறது. எதிராளியின் பலத்தை விட நம்முடைய பயமே அவர்களைப் பெரியவர்களாகக் காட்டுகிறது என்ற கருத்தையும் இதன் மூலம் உணரலாம்

முட்டி போட
முயற்சி செய்கிறான் தம்பி
முட்டி விடுவானோ
தலையணை வைக்கிறேன் நான்

இந்த வரிகளில் தென்படும் ’அபாயம்’ (தலையில் அடிபடுதல்) மற்றும் அதற் கான ’தீர்வு’ (தலையணை) ஆகிய இரண்டும் பாசம் என்ற ஒரே புள்ளியில் இணைகின்றன. குழந்தைப் பருவத்தின் ஒரு இனிய தருணத்தைக் கவிதையாக்கிய விதம் சிறப்பு..

தண்ணீர் சேமிப்பை
பாடமாகப் படித்தேன்
சிந்திக் கொண்டே போகிறது
தண்ணீர் லாரி

மிகவும் யதார்த்தமான வரிகள்! நாம் புத்தகத்தில் படிக்கும் பாடத்திற்கும், நிஜ வாழ்க்கையில் நடக்கும் முரணுக்கும் இடையிலான இடைவெளியை அழகாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

காண்பதிலும் கேட்பதிலும்
தானே உருவாகுகிறது
நான் எழுதும்
கதையும் கவிதையும்

இந்தக் கவிதை ஒரு படைப்பாளியின் ’நேர்மையை’ப் பறைசாற்றுகிறது. ‘நான் எதையும் செயற்கையாக உருவாக்க வில்லை, இந்த உலகமே எனக்குக் கவிதை யைத் தருகிறது‘ என்ற கலைஞனின் பணிவு இதில் வெளிப்படுகிறது.

மொழிபெயர்ப்பின் அரிய சேவை - முனைவர் புகழேந்தி அவர்களுக்கு பாராட்டு

மொழிபெயர்ப்பு இல்லையெனில் கவிதையின் மென்மையும் சொல்லாடலும், உள்ளார்ந்த சுவையும் ஒரே மொழியில் தங்கிவிடும்; அது உலகெங்கும் பரவி, வாசகர்களின் மனதில் அன்பும் சிந்தனை யும் எழுப்பும் அரிய வாய்ப்பை தவற விடும். இந்த நோக்கில், முனைவர் Pugazhendhi அவர்கள், இளம் கவி பிரவந்திகா அவர்களின் தன்முனைக் கவிதையின் உயிரையும் அழகையும் ஆங்கிலம், இந்தி, கன்னடம் மொழிகளில் வாழ்த்தி, வார்த்தைகளை உலகெங்கும் கொண்டு செல்லும் மென்மையான பால

## காதல் சிறப்புரைத்தல்

கருமணியின் பாவாய் நீ போதாய்
யாம் வீழும் திருநுதற்கு இல்லை இடம்
(குறள் : 123)

கவிதை ஆக்கம்
கவிஞர் வே.பூங்குழலி பெருமாள்
தமிழ் விரிவுரையாளர் புதுச்சேரி

கண்மணி காதலி இருக்க ஓர் இடம்
கண்ணில் சிறந்த உறுப்பில்லை என்றே
காதல் மிகுதியால் காதலன் கண்ணின்
பாவையை நோக்கிப் பகன்றது கேளீர் !
கண்ணின் கருவிழிப் பாவையே இனி நீ,
என்னை விட்டுப் போய்விடு போய்விடு !
என்னவள் தன்னை என்னுள் வைத்திட
கண்ணில் சிறந்த உறுப்பில்லை போய்விடு !
இதுவரை இருந்தாய் விழியொளி தந்தாய்!
திருமால் மார்பில் திருமகள் இருக்க
உருத்திரன் உடலில் உமையவள் பாதி
பிரம்மன் நாவில் சரஸ்வதி அதுபோல்
என்னவள் இருக்க என் கண் வேண்டும்
என்னில் என்னவள் இருப்பதற்கு ஓர் இடம்
கண்ணே அதனால் பாவையே போய்விடு
என் உயிர்க் காதலி இருந்திட இடம் கொடு

*மாக மாற்றியுள்ளார். அவரது மொழி பெயர்ப்புகள், கவிதையின் உணர்வையும் அமைப்பையும் இழையாமல் வெளிப் படுத்தி, வாசகர்களின் மனதில் வார்த்தை கள் மென்மையாக பதிந்த ஒளியாய் உயிரூட்டும் அரிய சாதனையாக விளங்கு கின்றன.*

**முடிவுரை:**

*மொழியில் உயர்ந்து, தமிழினைத் தொழுது, வள்ளுவத்தைப் பயின்று வளமாய் வாழத் துடிக்கும் ஒரு இளம் குரலின் தொடக்கமிது!*

*காண்பதிலும் கேட்பதிலும் இருந்தே தன் கதைகளும் கவிதைகளும் உருவாவ தாகக் கூறும் பிரவந்திகாவின் இந்த 'சிற்றுளி', வாசகர்களின் மனங்களில் அன்பைச் செதுக்கும் என்பதில் ஐயமில்லை*

## சென்ரியுக்கள்

*காவல் நிலையம்*
*புகார் எழுதும் பேனாவில்*
*பொய் மை*

*எரியும் கோபம்*
*கையாலாகா கைகளால்*
*கவிதை மட்டும்*

*விசாரணைக் குழு*
*மாறும் பெயர்கள்*
*மாறாத முடிவு*

*டிஜிட்டல் இந்தியா*
*அடர்ந்த காட்டுக்குள்ளும் எளிதாய்*
*பெண் விடுதலை*

*இருண்ட தேசம்*
*காகித வாக்குறுதிகளில்*
*கசங்கும் பெண் பாதுகாப்பு*

**ராஜ்⁶ ஆரோக்கியசாமி**

## கைக்குட்டை

விட்டுச்சென்றதை
எடுத்துப்பார்த்தேன்
உன்னுடையக்
கைக்குட்டையாயென்று.
எடுக்கும் முன்னே
உணர்ந்துக்கொண்டேன்
உன் வியர்வை நறுமணத்தை
உணர்ந்தவன் என்பதால்.

யாரோ, நானென்று
அலட்சியத்தால்
தொலைத்திருக்கலாம்.
கைக்குள் இருப்பது
சிறையென்று அவை
எண்ணியிருக்கலாம்.
இல்லை,
எண்ணியதோடு நில்லாமல்
தப்பிக்க குதித்ருக்கலாம்.
குதித்ததில் காயமடைந்து
சாலையோரத்தில்
கேட்பாரற்று
கிடைத்திருக்கலாம்.

இவையெல்லாம் நடந்திருக்கலாம்
நடக்காமலும் இருந்திருக்கலாம்.

யாருக்கு தெரியும்
அந்தக்
கைக்குட்டையைத் தவிர,

இப்பொழுதும்
அந்த கைக்குட்டையோடே
அங்குதான் இருக்கிறேன்.
பருவங்கள்
மாறி மாறி வருகின்றன
ஆனால்,
யாரும் வரவில்லை
எங்களைத்தேடி.

**- துங்கன்**




சிங்காநல்லூர் குளம் என்றழைக் கப்படும் சிங்காநல்லூர் ஏரி, கோயம்புத் தூரின் சிங்காநல்லூர் பகுதியில் அமைந் துள்ள பெரிய ஏரிகளுள் ஒன்று.

சுமார் 288 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த ஏரி, சோழர் ஆட்சிக்காலத்தில் அமைக்கப்பட்டது.

இந்த ஏரியைச் சுற்றி உள்ள பல வகையான பூக்கள் மற்றும் தாவரங்களால், இங்கு வசிக்கும் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் மத்தியில் புகழ்பெற்ற இடமாக விளங்குகிறது.

இதைச்சுற்றிலும் உள்ள புல்வெளிகளை இருப்பிடமாகக் கொண்டு வாழும் பறவைகளைப் பார்க்க வருபவர்களுக்கு இந்த ஏரி சொர்க்கமாக தெரிகிறது.

இந்த இடத்திற்கு கிட்டத்தட்ட நூறு வகையான பறவைகள் வழக்கமாக வருகின்றன. வசந்த காலத்தில் இங்கு பறவைகளைக் காண வரும் சுற்றுலாப் பயணிகளால் இந்த இடம் பரபரப்பாக காணப்படும்.

**சிறப்புகள் :**

கோவையின் இந்த நீர்நிலைகள் 120 வகையான பறவைகளின் இருப்பிடமாக உள்ளன. நாடோடிப் பறவைகள் மிகவும் கூடுதலாக ஆகஸ்ட் - அக்டோபர் மாதங்க ளில் வருகின்றன. கூழைக்கடா, நீர்க்காகம், பாம்புத்தாரா, நீலவண்ண தாழைக்கோழி, நாமக்கோழி முதலிய பறவைகளை இந்த ஏரிகளில் காணலாம்.

உலகெங்கிலும் இருந்து பறவைகளை ஆராய்ச்சி செய்யும் வல்லுனர்கள், இங்கு மட்டுமே காணக் கிடைக்கும் அரிய, அபூர்வ பறவைகளை காண வருகிறார்கள். எக்ரெட், ஹெரான், ஸ்டார்க், இபிஸ், ஸ்பூன் பில், கைட், ஹாரியர், டீல் முதலியன இங்கு வரும் பறவைகளுள் சிலவற்றின் வகையாகும்.

இங்கு குறிப்பாக 396 வகை தாவரங் கள், 120 வகையான பறவைகள், 62 வகையான பட்டாம்பூச்சிகள், 22 வகை யான பாலூட்டிகள் என பல்வேறு உயிரினங்கள் இந்த குளத்தை நம்பி உயிர் வாழ்வதாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

மிக முக்கியமாக 200 வகையான மூலிகைச் செடிகள், வெளிநாட்டுப் பறவை யினங்கள் ஆகியவற்றுக்கு சிங்காநல்லூர்

குளம் அடைக்கலம் கொடுக்கும் இடமாக உள்ளது.

பல்லுயிர் பெருக்கத்தின் முன்மாதிரியாக திகழும் சிங்காநல்லூர் குளம் தமிழகத்தின் முதல் நகர்ப்புற பல்லுயிர் பாதுகாப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நொய்யல் ஆறு இதன் நீராதாரமாக விளங்குகிறது.

கோவை - திருச்சி தேசிய நெடுஞ்சாலை குளத்தை ஒட்டிச் செல்கிறது. மேலும் போத்தனூர் - இருகூர் இருப்புப் பாதை குளத்தின் நடுவில் செல்கிறது.

ஆகாயத்தாமரைகள் அதிகம் காணப் படுகின்றன. மழைநீர் நிறைந்திருக்கும் நாட்களில் மீன் பிடித்தலும் நடைபெறுகிறது.

பறவைகள், விலங்குகள், ஊர்வன, நில நீர் வாழிகள், மீன்கள் எனப் பல உயிர்களின் ஆதாரமாக இந்த ஏரி அமைகின்றது.

**எப்படி செல்வது?**

கோயம்புத்தூரிலிருந்து 11 கி.மீ. தொலைவில் சிங்காநல்லூர் ஏரி அமைந்துள்ளது.

**எப்போது செல்வது?**

அனைத்து காலங்களிலும் செல்லலாம்.

**இதர சுற்றுலா தலங்கள் :**

தியானலிங்க ஆலயம்
மருதமலை முருகன் கோவில்
வன பத்திரகாளி அம்மன்
கோவை குற்றாலம்
புரூக்பீல்ட்ஸ் மால்

A s Govinda rajan

# செய்வது துணிந்து செய்

பாவகை: நேரிசை ஆசிரியப்பா

செய்வது தெளிந்து செம்மையாய் விரைந்து
எய்தும் வெற்றி எண்ணியே முனைந்து
தொய்யா ஆற்றல் தேடியே அடைந்து
செய்யும் வேலையை செறிவாய் செய்வோம்

எண்ணம் எல்லாம் ஏற்றம் கொண்டால்
திண்ணம் கொள்ளும் தீரம் கிட்டும்
வண்ணம் கொண்ட வாழ்வை எட்ட
பண்புடன் பணிகளும் படைத்திட விழைவோம்

நுண்ணிய அறிவை நோக்கி செல்வோம்
மண்ணிலே மனிதர் மாற்றம் கொள்வோம்
விண்ணோர் வாழ்த்தவே வினைகளும் புரிவோம்
கண்ணாய் காரியம் கருத்துடன் முனைவோம்

ஆக்கம் கொண்டே ஆற்றிடும் வினைகள்
தேக்கம் போக்கி திட்பம் காக்கும்
ஊக்கம் கொள்ளும் உயிர்கள்
தாக்கம் போக்கியே தடைகள் நீக்குமே

வளர்மதி முருகன்
புதுச்சேரி






தொடர் : 12

ரஸ்னா ரம்ஸான்
இலங்கை , அக்குறணை

# பிரிவின்றிய தூய அன்பின் நேசம்

ஐஸ்வர்யா வீட்டிலிருந்து அருணாவை ட்ரோப் பண்ணிவிட்டு அனைவரும் அவரவர் வீட்டுக்குச்செல்ல அருணா சற்று பயத்துடன் வீட்டுக்குள் நுழைந்தாள்.

அவள் அண்ணா ஹாலில் இருக்க அவள் சற்று பதட்டமாக உள்ளே சென்றாள்.

வழமையாக அவன் அவளுடன் கோபப் படாமல் இருந்ததில்லை. இன்று எதுவும் கேட்காமல் அமைதியாக இருந்தான் அருணாவோ வியப்புடன் அவனருகே போய்

‘சாரி ணா லேட் ஆகிடுச்சா சாப்டிங்களா‘

‘சாப்ட்டன்‘

‘காபி போட்டு தரவாணா‘

‘வேணாம் நீயே டயர்டா இருக்க போய் தூங்கு‘

அருணா தனதறைக்கு வந்தவள் நிம்மதியாக தூங்க தொடங்கினாள். அவன் அவளுடன் முதல் தடவை கோவப்படாது அமைதியாக இரு வார்த்தை பேசியதே

அவள் மகிழ்வுக்கு காரணம்.

ஆனிஷாவும் தூங்கி விட ஐஸ்வர்யா கட்டிலில் சாய்ந்திருக்க அவள் போன் ஒலித்தது திரையில் My love என காட்டியது.

கடந்தகாலத்தில்கசப்புகள்இருப்பினும் அவள் பெயரை மாற்றவில்லை.

ஐஸ்வர்யா கை நடுக்கத்துடன் போனை ஆன்ஸர் செய்து காதில் வைத்தாள். அவளின் இதயத் துடிப்பு அவளுக்கே கேட்கும் அளவு பலமாக இருந்தது. இரண்டு வருடங்களுக்குப் பிறகு அந்தப் பெயரிலிருந்து வரும் அழைப்பு அவளை நிலைகுலையச் செய்தது.

அஷ்வின் (கம்பீரமான, அதே சமயம் அழுத்தமான குரலில்) 'தூங்கிட்டியா ஐஸ்வர்யா? இல்ல... தூக்கம் வராம பழைய கணக்குகளைப் பார்த்துட்டு இருக்கியா?'

ஐஸ்வர்யா: (குரலைச் சீராக்கிக் கொண்டு) 'சொல்லுங்க சார்... இந்த நேரத்துல எதுக்கு போன் பண்ணிருக்கீங்க?'

அஷ்வின்: 'சார்-ஆ? ஹ்ம்ம்... நல்லாத் தான் நடிக்கிற. சரி, நேரடியா விஷயத்துக்கு வர்றேன். நாளைக்குக் காலைல 9 மணிக்கு நீ 'மெமரீஸ்' ஹோட்டல்ல இருக்கணும். இது நீ முன்னாடி பார்த்த சேர்வன்ட் வேலை மாதிரி கிடையாது. என்னோட பர்சனல் அசிஸ்டென்ட் செஃப் (Assistant Chef) வேலை. ஒரு நிமிஷம் லேட்டானாலும் உன்னோட அப்பாயிண்ட்மெண்ட் கேன்சல் ஆகிடும்.'

ஐஸ்வர்யா: 'இந்த வேலை எனக்கு தேவையில்லை'

அஷ்வின்: 'அப்டியா உன் தங்கச்சி ரொம்ப ஹேப்பியா இருக்கா சேர்வன்ட்டா வேல பார்த்த உனக்கு செஃப் வேல கெடக்கப்போகுதுனு நீ என்னடான்னா இப்டி சொல்ற

ஐஸ்வர்யா: 'சார், நான் ஏற்கனவே சொன்னதுதான்... எனக்கு அந்த வேலை வேணாம். நா ராகினிய சமாளிச்சுக்குவன் நான் இப்போ இருக்கிற இடத்துல நிம்மதியா...'

அஷ்வின்: (குறுக்கிட்டு) 'நிம்மதி பத்தி நீ பேசாத ஐஸ்வர்யா. உன்னோட நிபந்தனைகளை விட என்னோட ரூல்ஸ் ரொம்ப ஸ்ட்ரிக்ட். ஹோட்டல்ல வேலை பார்க்கும்போது நீ என்னோட வேலையாள் மட்டும்தான். அங்க பழைய ஞாபகங்களுக்கோ, கண்ணீருக்கோ இடமே இல்லை. அப்புறம் முக்கியமா... நான் எப்போ கூப்பிட்டாலும் நீ என்கூட வரணும். அது சமையல் விஷயமா இருந்தாலும் சரி, வேற எதுவா இருந்தாலும் சரி.'

ஐஸ்வர்யா: 'ஏன் என்னை இப்படி வற்புறுத்துறீங்க? நான் உங்க கண்ணுல படாம எங்கேயோ போயிடுறேனே.'

அஷ்வின்: (சிறிது மௌனத்திற்குப் பிறகு, மறைமுகமாக) 'ஏன்னா... சில முடிச்சுகள் அவிழ்க்கப்படாம அப்படியே கிடக்கு ஐஸ்வர்யா. கடந்த பாதையில தொலைஞ்சு போனது வெறும் காதல் மட்டும் இல்ல, என்னோட பல கேள்விகளும் தான். அந்தப் பயணத்தை நான் பாதியில நிறுத்தத் தயாரா இல்லை. நீ வர்றது சமைக்க மட்டுமில்ல... நான் தேடுற பதில்கள் உன் மௌனத்துக்குள்ள தான் ஒளிஞ்சிருக்குன்னு எனக்குத் தெரியும். ஆனா அது உனக்கு இப்போ புரியாது. நாளைக்குக் காலைல 9 மணி... ஞாபகம் இருக்கட்டும்.'

ஐஸ்வர்யா: நா வர்ரேன். ஆனா நீங்க

என்ன வேர்கர்ரா மட்டும் பார்க்கனும் எனட் நீங்க இன்டர்வியு வச்சு தான் என்ன அக்ஸப்ட் பண்ணணும் அப்போ தான் நான் வருவேன்.

அஷ்வின்: 'சரிங்க மேடம் குட்நைட்'

அவள் பதில் சொல்லாது அழைப்பை துண்டித்தாள். அழைப்பு துண்டிக்கப்பட்ட பின்னும் அந்த 'குட்நைட்' என்ற வார்த்தை அவள் காதுகளில் ரீங்காரமிட்டது. அதில் ஒரு ஏளனம் இருந்ததா? அல்லது பழைய அஷ்வினின் மென்மை இருந்ததா? என அவளால் கணிக்க முடியவில்லை. சிந்தனைகளை ஒருபுறம் வைத்தவள் சிறிது நேரத்தில் தூக்கத்தில் ஆழ்ந்தாள்.

அதிகாலை 5:30 மணி.

அலாரம் அடிக்கும் முன்பே அஷ்வினின் கண்கள் திறந்தன. அவனது அறை அந்தப் பெரிய பங்களாவைப் போலவே பிரம்மாண்டமாகவும், அதே சமயம் ஒருவிதமான வெறுமையுடனும் இருந்தது. எழுந்து ஜன்னல் திரையை விலக்கியவனுக்கு, அதிகாலைப் பனிமூட்டம் கலந்த காற்று முகத்தில் பட்டது. நேற்றிரவு ஐஸ்வர்யாவிடம் பேசிய அந்த உரையாடல் அவன் காதுகளில் இன்னும் ஒலித்துக் கொண்டிருந்தது. 'நா வர்ரேன்... ஆனா என்னை வேர்க்கரா மட்டும் தான் பார்க்கணும்' என்ற அவளது அந்தத் தெளிவான குரல் அவனுக்குள் ஒரு மெல்லிய புன்னகையை வரவழைத்தது. 'இப்பவும் உன் பிடிவாதம் குறையவே இல்ல ஐஸ்வர்யா,' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்.

ஜிம்மில் ஒரு மணிநேரக் கடுமையான உடற்பயிற்சிக்குப் பிறகு, ஆவி பறக்கும் ஒரு கப் காபியுடன் பால்கனியில் அமர்ந்தான். அவனது கவனம் முன்னால் இருந்த லேப்டாப்பில் இருந்தாலும், மனம் என்னவோ 9 மணி சந்திப்பையே சுற்றிக்கொண்டிருந்தது. இரண்டு வருடங்களாக அவன் தேடிய பதில்கள், அவள் மூலமாகக் கிடைக்கப் போகிறது என்ற எண்ணம் அவனை ஒருவித பதற்றத்திலும், அதே சமயம் ஒரு எதிர்பார்ப்பிலும் வைத்திருந்தது.

குளித்துவிட்டு வெளியே வந்தவன், தனது வார்ட்ரோபைத் திறந்தான். வழக்கமாக அணியும் 'பிசினஸ் சூட்'களுக்குப் பதில், இன்று சமையல் கூடத்திற்கு ஏற்றவாறு நேர்த்தியான கருப்பு நிறச் சட்டையைத் தேர்வு செய்தான். கண்ணாடியின் முன் நின்று முடியைச் சீர்படுத்திய போது, அவனது கண்கள் முன்பை விட அழுத்தமாகத் தெரிந்தன.

கீழே ஹால்க்கு வந்தவன் சமயலறையில் சமையலில் ஈடுபட்டிருக்கும் தன் அம்மாவை பார்த்தான்.

அவனது அம்மா அப்பா வெளியூர் சென்று நேற்றிறவு தான் வீடு வந்து சேர்ந்திருந்தனர்.

'வாடா அஷ்வின்! நேத்து நைட் நாங்க வரும்போது நீ தூங்கிட்ட போல. அதான் இன்னைக்கு உனக்குப் பிடிச்ச ராகி மால்ட்டும், இடியாப்பமும் செஞ்சுட்டு இருக்கேன்,' என்றார் வாஞ்சையுடன்.

அஷ்வின் டைனிங் டேபிளில் அமர்ந்தபடி, 'டேடி இன்னும் எந்திரிக்கலையா?' என்றான்.

'இல்லடா, டயர்டுல தூங்குறாரு. ஆமா, இன்னைக்கு என்ன விசேஷம்? வழக்கமா பிசினஸ் மீட்டிங் இருந்தா ஒருவிதமான டென்ஷன்ல இருப்ப... இன்னைக்கு

ஏதோ ஒரு தெளிவு தெரியுதே?' என அவன் முகத்தை உற்றுப் பார்த்தார்.

அஷ்வின்மெல்லியசிரிப்பைஇதழ்களில் ஒட்டி வைத்தபடி காபியை உறிஞ்சினான். 'இன்னைக்கு ஒரு இன்டர்வியூ இருக்கு மா. என் ஹோட்டலோட முக்கியமான ஒரு போஸ்டிங்க்கு ஆள் வர்றாங்க. ஆனா இது மத்தவங்களுக்குத் தான் இன்டர்வியூ... எனக்கு இது ஒரு க்ளாரிஃபிகேஷன்,' என்றான் அர்த்தத்துடன்.

காயத்ரிக்கு அவன் சொல்வது புரிய வில்லை என்றாலும், மகனின் மாற்றத்தை உணர்ந்தார். 'சரி, யாரா இருந்தாலும் திறமையானவங்களைச் சேர்த்துக்கோ. உன் மனசுக்குத் தெரியும் நீ என்ன பண்றன்னு.'

அஷ்வின் உணவைச் சாப்பிட்டு முடித்துவிட்டு எழுந்தான். 'கிளம்புறேன் மா. இன்னைக்கு கொஞ்சம் லேட் ஆகும்,' என்று சொல்லிவிட்டு, கார் சாவியை எடுத்துக்கொண்டு வெளியே வந்தான்.

அவனது கார் அந்தப் பெரிய பங்களா வின் வாசலைத் தாண்டிச் சாலையில் விரைந்தது. சாலையில் ஓடும் வாகனங்களை விட, அவனது எண்ணங்கள் அதிவேகமாக ஓடின. 'மெமரீஸ்' ஹோட்டலை நெருங்க நெருங்க, அவனுள் ஒருவித அதிகாரம் தலைதூக்கியது.

சரியாக 8:45 மணிக்கு ஹோட்டல் பார்க்கிங்கில் காரை நிறுத்திவிட்டு, இறங்கி உள்ளே சென்றான். அவனது ஒவ்வொரு அடியிலும் ஒரு கம்பீரம் இருந்தது. லிஃப்ட்டில் ஏறி, தனது பிரத்யேக எக்ஸிகியூட்டிவ் கிச்சன் இருக்கும் தளத் திற்குச் சென்றான். அங்கே அவனது பிஏ (PA) ஓடி வந்து, 'குட் மார்னிங் சார், எல்லாம் ரெடியா இருக்கு. 9 மணிக்கு கேண்டிடேட் வர்றதா சொல்லிருக்காங்க,' என்றான்.

அஷ்வின் தனது செஃப் கோட்டை மாட்டிக்கொண்டு, கைகளை மார்புக்குக் குறுக்கே கட்டியபடி ஜன்னல் வழியாகப் பாதையைப் பார்த்தான். அவன் கண்கள் ஐஸ்வர்யாவின் வருகைக்காகக் காத்திருந்தன.

ஹோட்டலின் பிரம்மாண்டமான கண்ணாடி கதவுகள் விலக, ஐஸ்வர்யா உள்ளே நுழைந்தாள். நேற்றைய இரவு அவளுக்கு ஒரு யுகமாக கழிந்திருந்தது. தூக்கமின்மையால் கண்கள் சற்று சிவந்திருந்தாலும், முகத்தில் ஒருவிதமான வைராக்கியம் அப்பியிருந்தது.

வரவேற்பறையில் இருந்த பெண்ணி டம் விபரம் சொல்லிவிட்டு, அஷ்வின் இருக்கும் தளத்திற்குச் சென்றாள். லிஃப்ட் கதவுகள் திறந்தபோது, ஒரு நீண்ட தாழ்வாரம் அவளை வரவேற்றது. அதன் முடிவில் இருந்த அந்த 'எக்ஸிகியூட்டிவ் கிச்சன்' கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றாள்.

அங்கே... ஜன்னல் ஓரம் திரும்பி நின்று கொண்டிருந்தான் அஷ்வின். வெள்ளை நிற செஃப் கோட் அவனது உயரத்திற்கும் கம்பீரத்திற்கும் அத்தனை பொருத்தமாக இருந்தது. அவள் உள்ளே வந்த அரவம் கேட்டதும், அஷ்வின் மெதுவாகத் திரும்பினான். அவனது கைகளில் இருந்த கடிகாரம் 9:00 என காட்டியது.

'கரெக்ட் டைம்... இம்ப்ரெசிவ்!' அஷ்வினின் குரலில் ஒருவித கிண்டலும் அதிகாரமும் கலந்திருந்தது.

ஐஸ்வர்யா அவனை நேருக்கு நேர் பார்த் தாள். பழைய காதலியாகவோ அல்லது

பயந்த சுபாவம் கொண்ட பெண்ணாகவோ அவள் அங்கே நிற்கவில்லை. 'சொன்ன நேரத்துக்கு வந்துட்டேன் சார். இன்டர்வியூ-வை ஆரம்பிக்கலாமா?' என்றாள் பிடிவாதமான குரலில்.

அஷ்வின் அவளை ஒருமுறை மேலிருந்து கீழ் வரை அளவெடுத்தான். 'நிச்சயமா... ஆனா இது சாதாரண இன்டர்வியூ இல்லை ஐஸ்வர்யா. ஒரு செஃப்க்கு இருக்க வேண்டிய முதல் தகுதியே பொறுமைதான். இங்க இருக்குற டேபிள்ல உனக்குத் தேவையான எல்லா பொருட்களும் இருக்கு. அடுத்த 30 நிமிஷத்துல ஒரு டிஷ் ரெடி பண்ணனும். அதுல உன்னோட திறமை தெரியணும்... அதே சமயம், என் முன்னாடி நீ எவ்வளவு நிதானமா வேலை பார்க்குறன்னு நான் பார்ப்பேன்.'

அவன் ஒரு ஓரமாக இருந்த நாற்காலியில் அமர்ந்து, அவளையே உற்றுப் பார்க்கத் தொடங்கினான். அவனது அந்தப் பார்வை ஒரு கேமராவைப் போல அவளது ஒவ்வொரு அசைவையும் படம் பிடித்தது.

ஐஸ்வர்யா கத்தியைக் கையில் எடுத்தாள். கைகள் லேசாக நடுங்கின. ஆனால், அடுத்த நொடியே அவள் கண்களை மூடி ஒரு நிமிடம் தன்னை நிலைப்படுத்திக் கொண்டாள். அவளுக்குத் தெரியும், இது வெறும் சமையல் அல்ல; அவளது வாழ்க்கைப் போராட்டத்தின் அடுத்த கட்டம்.

விறுவிறுப்பாக சமையல் ஆரம்பமானது. அஷ்வினின் பார்வையைத் தவிர்த்துவிட்டு, அவள் தனது வேலையில் மூழ்கினாள்.

(நேசம் தொடரும்...)

## அன்பு என்ன செய்யும்?

நான் எப்படி இருந்தாலும் என்னில் சிறிதும்
மாற்றம் காணாமல் என்னை அப்படியே
நேசிக்கும் உறவுகளைக் காணக்
கிடைப்பதெல்லாம்
ஓர் வரம்...

என்னில் மாற்றம் காண நினைக்கும்
உறவுகள் அருகிலிருந்து என்ன பயன்,
புரிந்துகொள் என்று நான் வாய்விட்டுக்
கேளாமலே என்னைப் புரிந்துகொள்ளும்
உறவென்பது எனக்குக் கிடைத்த பேரருள்
அல்லவா...?

உன்னிடத்தை யாரும் நிவர்த்தி
செய்ய முடியாதளவு என்னுள்
உட்பிரவேசித்துவிட்டாய் நீ; நீ என் மீது
வைத்திருக்கும் அன்பின் ஆர்ப்பரிப்பில்
ஊறித்திளைத்துவிட்டேன் நான்...

எது எப்படியேனும் உன்
பிரார்த்தனைகளில் என் நாமம்
உச்சரிக்கப்படுகின்றது என்றால்
இவ்வுலகில் உன் உள்ளத்தை
வென்றுவிட்ட அந்த ஒருத்தி
நானென்றுதானே அர்த்தம்...?

எதிர்பாராமல் கிடைக்கும் உறவிற்கும்,
எதிர்பாராமல் வாழ்வை இன்னுமின்னும்
அழகாக்கும் அன்பிற்கும் ஆயுள் அதிகம்,
உன் காதலைப் போல...

'அரமிகாக் கவி'
அதீனா அபூ உபைதா,
ஓட்டமாவடி




# தேவதைகள் தூங்குவதில்லை

சிறுகதைகளின் சிறு உலகம்:
இரஜகை நிலவன் எழுதிய
27 கதைகளின் பயணம்

## புத்தக விமர்சனம்

இலக்கிய வளர்ச்சியின் நீண்ட வரலாற்றில் 'சிறுகதைகள்' ஒரு சிறு குழநதை. அவற்றை எழுதுவதற்கு என்று 'முறைக் கையேடு' எனப் பட்ட விதி எதுவும் இல்லையென்றாலும், சிறந்த சிறுகதைகள் சில அடிப்படை அம்சங்களின் மேல் அமைந்திருக்கின்றன - கதாபாத்திரம், கதைக்களம், சூழல், மோதல், மற்றும் கரு. இவை அனைத்தும் பொதுவாக ஒரு தெளிவான கட்டமைப்பில் அமைக்கப் படுகின்றன: தொடக்கம் (Exposition), நடுப்பு (Rising Action, Climax), மற்றும் முடிவு (Falling Action, Resolution). இந்தச் சிறியச் சூழலில், கதாபாத்திரத்தின் முக்கிய மான உள்ளார்ந்த மாற்றத்தை வெளிப் படுத்தி, பொருள் நிறைந்த - பொதுவாக எதிர்பாராத - முடிவை உருவாக்க வேண்டும்.

இந்த 27 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பில், ரஜகை நிலவன் 'சாதிக்க வேண்டும்' என்று மனநிலை கொண்ட, ஆசை நிறைந்த, உணர்ச்சிகள் மிகந்த பல கதாபாத்திரங்களை உருவாக்குகிறார்; அவை வாசகர்களின் மனத்தில் நீண்ட காலம் பதியக் கூடியவை. சில கதைகள் மிகச் சிறியவை; நீளமான மோதல் அல்லது நிகழ்வுகளின் தொடரை உருவாக்க முடியாதபோதிலும், எழுத்தாளர் காட்டும் எழுத்து வண்ணம் வாசிப்பை ஈர்க்கும் வகையில் திகழ்கிறது. சில எழுத்தாளர்கள் கதாபாத்திர விவரிப்பிலும், சூழல் விளக்கங் களிலும் வாசகர்களை சோர்வடையச் செய்கிறார்கள்; ஆனால் நிலவன் எளிமை யான, தெளிவான, அணுகக்கூடிய மொழியைப் பயன்படுத்துவதால், கதாபாத் திரங்களுடன் பயணிப்பது இலகுவாகிறது.

இந்தக் கதைகள் பல்வேறு புவியியல் பின்னணிகளில் நிகழ்கின்றன - துபாய், ஷார்ஜா, உகாண்டா, மேலும் தமிழகத்தின் கிராம மற்றும் நகரப் பின்னணிகளிலும். ஒவ்வொரு கதையும் ஒரு தனித்த கரு மற்றும் அதற்குள் மறைந்துள்ள ஒரு முக்கியமான கருத்தை மையமாகக் கொண்டுள்ளன; இதில் வெளிப்புற மற்றும் உள்ளார்ந்த போராட்டங்களும் ஆழமாகப் பதிவாகின்றன.

சில கதாபாத்திரங்கள் - தன்னிறைவு - என்ற கருத்தை பிரதிநிதித்துவப்

படுத்துகின்றன; சில கதைகள் அபாயகர மான சூழ்நிலைகளிலிருந்து மனிதர்களை விடுவிக்கும் நட்பின் சக்தியை வெளிப் படுத்துகின்றன - குறிப்பாக கடத்தல் காரரின் பிடியிலிருந்து. இரண்டு கதைகள் விளையாட்டு வீரர்களைப் பற்றி பேசுகின் றன; இதில் உடற்கல்வி ஆசிரியர்களும் பயிற்சியாளர்களும் தங்கள் தடகள வீரர்கள் இந்தியாவிற்கு பெருமை சேர்க்கும் வகையில் எடுக்கும் தனிப்பட்ட, தியாகத்தின் அடிப்படையிலான ஆபத்தான முடிவுகள் அழகாக சித்தரிக்கப்படுகின்றன.

குடும்பத் தகராறுகள் பல கதைகளில் தோன்றுகின்றன. சில கதைகளில் மருமகள் காட்டும் அக்கறை யின்மையும் கரிசனையின்மையும் நுட்ப மாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

என் கல்லூரிக் காலத்தில் எனது ஆங்கில பேராசிரியர் முனைவர் அருளாந்தம் அவர் கள் - ‘இலக்கியம் வாசகரைத் செம்மைப் படுத்துவதற்காகத்தான்‘- என்று அடிக்கடி கூறுவார். நிலவன் இந்த எண்ணத்தை உள்ளார்ந்த முறையில் ஏற்றுக்கொண்டுள்ளார். சில இடங்களில் அவர் நுணுக்கமான கற்றுதலையும் வழங்குகிறார். **’கானல் நீர்’** கதையில் அரசியல்வாதிகளுக்கு கையூட்டு கொடுக்க வேண்டாம் என்ற எச்சரிக்கை உள்ளது. மற்றொரு கதையில், தனது முகாமையாளர் நிறுவனப் பணத்தை எடுத்துவிட்டு ஓடிப் போனபின், வாடிக்கையாளர்களுக்கு சேர வேண்டிய பணத்தைக் கொடுத்துவிட்டு மீண்டும்தன் நிதி நிறுவனத்தைத் தொடங்கத் தீர்மானிக்கும் நேர்மையானதொழிலதிபர் வருணிக்கப்படுகிறார். **‘உன்னைத் தானே’** கதையில், திருமணத்தை ஏற்கும் முன் தங்கள் கடந்தகாலத்தைப் பற்றி இளைஞன் - இளம்பெண் பேசுவதின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். **’அழுக்கு’** கதையில், ஒரு மனிதரின் கைகள் அழுக்காக்காமல் இலாபம் கிடைக்காது என்ற நேரான உண்மையை எழுத்தாளர் வெளிப்படுத்துகிறார்.

ஒரு உருக்கமான கதையில், ஒரு தொழில்முறை செவிலியர் தன்னை விட்டு கைவிட்டு விலகிச் சென்ற மனிதனைப் கனிவோடு கவனிக்கிறார்; இந்தக் கதையின் உணர்வுப் பிணைப்பு இத்தொகுப்பின் தலைப்பாகவும் அமைந்துள்ளது.

இந்தக் கதைகளில் சமய வித்தியாசங் களும் இயல்பாக பின்னணியில் பின்னப் பட்டுள்ளன. காதலருடன் ஓடிச் செல்லும் பெண்ணுக்கு உதவிக்கரம் நீட்டும் இமயமலை இந்து சந்நியாசி ஒருவரும்; தான் விரும்பிய பெண் -‘நான் இயேசுவுக்கே திருமணம் ஆனவள்‘- என்று கூறிய பின், குருத்துவ சேவைக்கு சென்ற கத்தோலிக்க பாதிரியாரும்; செல்வம் தேடி வெளிநாட்டில் வேலை செய்யும் இஸ்லாமிய ஆண், தன் மனைவியோடு வாழ இந்தியா திரும்புபவர்களும் இங்கே தோன்றுகின்றனர்.

## சிகப்புச் சாயம்



**உதட்டில்**
**சிகப்புச் சாயம்**
**பூசுவதற்கு காரணம்**
**தன்னுடைய வார்த்தைகள்**
**எப்பவும்**
**கடுமையானவையே**
**என்று எச்சரிக்கை**
**செய்வதற்குத் தான்.**

**கவிஞர் எம்.சோலை**
**அம்பத்தூர்.**

காதல் பல வடிவங்களில் இங்கே காணப்படுகிறது - ஒரு பணக்கார பெண் தன் ஏழை காதலன் பெரிய சாதனைகள் செய்வதற்காக தனது திருமணத்தைத் துறக்கிறாள்; இன்னொரு கதையில் ஏதோ 'அவள் மட்டுமே அறிந்த' காரணமாக, தனக்காக உயிரையையும் விடத் துணிந்த காதலனோடு கொண்டிருந்த உறவை துண்டு சீட்டு செய்தி மூலமாக முடிக்கிறாள்; மற்றொரு கதையில், தன் மூத்த மாமாவைத் திருமணம் செய்ய ஆசைப்படும் ஒரு அக்காள் மகளின் காதல் 'கைக்கிளை' காதலாகத் தோன்றுகிறது.

நிலவன் பல வலிமையான பெண் களையும் உருவாக்குகிறார் - தன் காதலரின் தந்தையின் எதிர்ப்பை வென்று விரும்பியவரைத் திருமணம் செய்கிறாள்; பெற்றோரிடம் குறைந்த வரதட்சணையைப் பேச முடியாத தனது மாமாவின் மகனை நிராகரிக்கும் இன்னொரு பெண்; மேலும், எந்தத் தீமையும் இல்லாத ஆணொருவரால் வாழ்க்கையின் சுவையை அனுபவிக்க முடியாது என்ற நம்பிக்கையில், தீய பழக்கங்கள் இல்லாத ஆண் வேண்டாம் என்று கூறும் மற்றொரு பெண்.

**'கோபமும் கற்று மற'** கதையில், 1960-களில்கடுமையானமுறையில்சிலதொழிலக உரிமையாளர், தொழிலாளிகளிடம் நடந்து கொள்ளுவது போன்ற ஒருப் பெண்ணைக் காண்கிறோம். பின்னர் அவள் ஒரு பெண் புத்தராகவே தன்னை மாற்றிக் கொள்வது அழகாக சித்தரிக்கப்படுகிறது. **'மாலை நேரத்து மயக்கம்'** மற்றும் **'மரணம் கூட என்னைத் தீண்டாது'** கதைகளின் முடிவுகளில் எனக்கு உடன்பாடு இல்லை. மூன்றாம் பாலினத்தவர் அவர் பாணியில் உடை உடுத்த உரிமையும், எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒருவர் சிகிச்சை செய்து காதலித்தவரை மணக்கவும் வழியுண்டு.

ஒரு நினைவில் நிற்கும் கதையாகத் திகழும், **'அசையும் காற்றில்'**, முன்பு தவறாக நடந்து கொண்டதற்காக ஒரு வீட்டு பணிப் பெண்ணிடம் மன்னிப்பு கேட்கும் முதியவர் வருகிறார். உடல் பலவீனம் காரணமாகவும் மகனால் புறக்கணிக்கப்படுவதாலும், கனிவுடன் அவரைக் கவனித்துக் கொள்வதும் அதே வீட்டு பணிப் பெண்ணே! வாழ்வின் விளிம்பில் இருக்கும் அவரின் நிலையை, காற்றில் எந்த வேளையும் பறந்து செல்லத் கூடிய வாடிய தேக்கு இலை ஒன்றிற்கு ஒப்பிட்டு எழுத்தாளர் காட்டும் உருவகம் மிகச் சிறப்பானது.

இந்தக் கதைகளில் சிலவை முதலில் செய்தித்தாள்களில் வெளியானதால், வாசகர்கள் பழைய மற்றும் சமகாலப் பின்னணிகளின் மாறுபாட்டைக் காண லாம்.

167 பக்கங்களைக் கொண்ட இந்தப் புத்தகத்தை நான் ஒரே அமர்வில் முடித்தேன் - நிலவனின் கதை சொல்லும் நடை எவ்வளவு ஈர்க்கக்கூடியது என்பதை இது காட்டுகிறது.

தமிழ் இலக்கியத்திற்கு கவிஞர் ரஜகை நிலவன், புதியவரல்ல; ஏற்கெனவே பல சிறுகதைகளையும் புதினங்களையும் எழுதியுள்ளார். இந்தச் சிறுகதைகள் தொகுப்பு அவரது படைப்புலகத்திற்கு மேலும் ஒரு பொருள் மிகுந்த சேர்க்கை. சமூக மாற்றத்தை இலக்கியத்தின் மூலம் உருவாக்க அவர் எடுத்திருக்கும் முயற்சிகள் வெற்றி பெற என் மனமார்ந்த வாழ்த்துகள்.

பிஷப் முனைவர்
மூ. இரவிக்குமார் ஸ்றீஃபன்
நிறுவனர் - உலகிற்கு திருக்குறள்

# தாராய் உனை!

ஆண்:-ராவுணவு என்ன? ரவையா?சப் பாத்தியா?
நோவுதுன்னு சொல்லியே நோன்பிருப்பா? - தேவுடா!
தோசைக்குச் சட்னியா? சூடுசெய்த சாம்பாரா?
ஓசைவாய் அன்பே! உரை! 1

பெண்:-மல்லிகைப்பூ இட்லி மணக்கும்தேங் காய்ச்சட்னி
நல்லபடி செய்துதர நான்முனைந்தேன்; - மல்லிகைப்பூ
வாங்கிவந்த மாமனுக்கு வந்தருந்த வாய்ப்பிருக்குத்
தேங்கியுண்டு செவ்விதழில் தேன்! 2

ஆண்:-வம்பைப்பூப் போல்கிள்ளும் வைபவமே, நீவார்க்கும்
தும்பைப்பூ இட்லி தொடுகையிலே; - கும்பிக்கும்
ஓவ்வாமை இல்லை; செரிமானச் சிக்கலில்லை;
செவ்வாழைத் தண்டே!வாய் சேர்! 3

பெண்:-தோளிலென்னைத் தூக்கினால் தோசையெங்கு வார்ப்பது?
தாளிலுன்னால் மின்சாரம் தாக்குது; - வாளிகொண்டு
மோகத்தை நீயிறைக்க, மொத்த உடல் நானிளைக்க,
தாகம்தீர்ந் தாலும் தவிப்பு! 4

ஆண்:-மணக்கின்ற பேச்சால் மனங்கவரு கின்ற
குணவதி!வா! சேர்ந்து குளிப்போம்; - உணவைக்
குடற்பசிக்குப் பின்னே கொடுக்கலாம்; முன்னே
உடற்பசிக்குத் தாராய் உனை! 5

பெண்:-வாய்ப்புக் கிடைத்தால் வகையாய்ச் சுவைக்கத்தான்
பாய்க்கழைக் கின்றாய் பரவசமாய்; - வாய்க்குணவு
போடுங்கள் என்றுநான் பொங்கி வடித்தளித்தால்
நூடுல்ஸ் இடையினிலே நுங்கு! 6

தமிழுடன்...

அகரம் அமுதன்




ஆக்கம்.

**குயில்.மு.இரசியா பேகம்**

தஞ்சை


# மின்னலைத் தேடி...

## 1

அதிகாலைப் பனிக் காற்று அவளை வருடிச் சென்றது. அது ஒரு மார்கழி மாத அதிகாலை. அவளோ இரண்டாமாண்டு மருத்துவம் பயிலும் மாணவி. வாழ்வது புதுவையில் ஒரு அடுக்குமாடி வீடு இரண்டாம் தளம். காலையில் கையில் இஞ்சி டீ அருந்திய வண்ணம் சன்னல் வழியே பார்த்துக் கொண்டிருந்தாள்...

பக்கத்து மனையில் கட்டடம் கட்டாத தால் மழைநீர் தேங்கி பாசிப் படர்ந்து மரகதப் போர்வை போர்த்தியது போலி ருந்தது.

திடீரென ஒரு வெள்ளை நூல் மின்னலைப் போல் மின்னிப் பறந்தது போலிருந்தது...

என்னவென்று பார்க்க ஒரு வெண் பறவை நீண்ட வாலுடன் அங்கிருந்த வேப்ப மரத்தில் அமர்ந்து அவளைப் பார்த்தது.

ஆகா இது ஆசிய பிலை காட்சர் (Asian fly catcher) என்னும் ஆசியப் பறவை. மிகவும் அழகு. ஆண் பறவை நீல நிறக் கழுத்தும் வெண்ணிற உடலுடன் சிறியப் பறவை.பெண் பறவை தூய வெண் நிறத்தில் அல்லது ஆரஞ்ச் கலராக உள்ளது.

புதுவை மிக அழகிய நகரம்.

வெயிட் டவுன் பிரான்ஸ் நாட்டு கட்டிடக் கலையில் இன்றும் பழமை மாறாது சொலிக்கிறது.

அழகிய பாறைப் பாங்கான கடல் கவர்கிறது.

பொடானிக்கல் கார்டன், ஆரோவில் etc

இன்று நமது கதாநாயகிக்கு மறக்க முடியாத நாளாக இது மாறப்போவது அவளுக்குத் தெரியாது.

தனது ஆக்டீவா வில் கிளம்பி காலேஜ் போனாள்.

வழக்கம் போல பீடியாட்ரிக் போஸ்டிங் என்று படு பிஸியாக போனது. நிற்க நேரமில்லை..

மாலை வீடு திரும்பும் போது அன்றைய தேவைக்கான பொருட்களை மோர் டிபார்ட் மென்டல் ஸ்டோரில் வாங்கிக் கொண்டு தனது பைக்கின் முன்னால் வைத்துவிட்டு ஆன் செய்த போது படு வேகமாக ஒரு தலைக் கவசம் அவள் முன்னால் உருண்டோடியது...

அதற்கு முன் ஏதோ கருப்பாக ஒன்று பறந்தோடியது..

பின்னர் சற்று தூரத்தில் ஒருவன் இரத்த வெள்ளத்தில்..

அது ஒரு விபத்து.

பைக்கில் வந்த அவன் அந்த தெரு முனை வந்ததும் வலது பக்கம் வந்த பஸ்ஸை





குயில்.மு.இரசியா பேகம்

கவனிக்கவில்லை போல, அடித்துவிட்டது.

தூரத்தில் பஸ் நிறுத்தப்பட்டிருந்தது அதனால் ஊகித்தாள்.

அங்கே கூட்டம் கூடியது.

யாரோ ஆம்புலன்ஸ்க்கு போன் செய் தார்கள்,

சிலர் உயிர் இருக்கிறது என்றார்கள்.

தம்பி! தம்பி! என்று சிலர் அழைத்தார் கள்.

அவளுக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை,


மருத்துவ கல்லூரி மாணவி என்றாலும் அவளுக்கு மனதிலுள்ள ஒருவகையான படபடப்பு அவளை நகரவிடவில்லை.

சற்று நேரத்தில் போலிசார் வந்தார்கள் ஆம்புலன்ஸில் அவனை ஏற்றினார்கள்.

'தம்பி 'என்று அழைத்ததால் சிறுவயது பையனாகத்தான் இருக்க வேண்டும்.

அதென்ன ஏதோ கருப்பாக பறந்து போனது என்று எண்ணிய வண்ணம், தனது பைக்கை தள்ளிக்கொண்டு நகர்ந்தாள்...

அது பாலாஜி நகர் தெரு இடதுபக்கம். முனையில் ஒரு பிளாட் கட்டபடாமல் ரெடிமேட் காம்பவுண்டு போடப்பட்டு





சில இடங்களில் சிதிலமாகி கருவேலங்கள் மண்டி இருந்தது.

குப்பைக் கூளங்கள் போடும் இடமாக பாவிக்கப்பட்டு இருந்தது.

அந்த கருவேல மரக்கிளையில் ஆடிய ஏதோ ஒன்று மின்னி சத்தமிட அவள் கவனத்தைக் கவர்ந்தது...

பைக்கை நிறுத்திவிட்டு குப்பை மேட்டில் ஏறி தட்டுத் தடுமாறி போய் பார்த்தாள்.

அது கருப்பு நிறத் தோல்பை, அது அவனுடையதாக இருக்க வேண்டும்,

உள்ளே கைபேசி சத்தமிட்டு அவள் கவனத்தைக் கவர்ந்தது..

அவள் பையை எடுத்தபின் அது அமைதியாக வீட்டுக்கு போய் பேசலாம்னு அவள் நகர்ந்தாள்...

பிரச்சனைகள் அவள் அழைக்காமலேயே அவளுடன் கைக்கோர்த்தது அவளுக்குத் தெரியாது பாவம்!!!

தொடரும்

# புதுக்கவிதைகள்

1. அசையும் சொத்தானாலும்
அசையா சொத்தானாலும்
நமது உடம்பு அசையும் வரை தான்
நமக்கு பயன்படும்

2. ஒவ்வொரு நோய்க்கும்
ஒரு மாத்திரை உண்டு என்பது
உண்மை இல்லை
ஆனால் ஒவ்வொரு மாத்திரைக்கும்
பின்னாடி ஒரு நோய் இருக்கும்
என்பதுதான் உண்மை

3. நீங்கள் பணத்தை
சம்பாதித்து விடுங்கள்
அது மனிதர்களை சம்பாதித்து விடும்

4. சொந்தக்காரன் சுண்ணாம்பு மாதிரி
அளவாய் இருக்கணும்
அளவுக்கு மீறினால் வாயும்
வெந்துரும் வாழ்க்கையும்
நொந்து விடும்

5. வீட்டுக்கு அழைத்து உணவு
கொடுத்தால் அதற்கு பெயர் விருந்து
கேட்ட பின் கொடுத்தால்
அதன் பெயர் பிச்சை
இருக்கும் இடம் சென்று
கொடுத்தால் அதன் பெயர் தர்மம்
யார் என்று தெரியாமல் கொடுத்தால்
அதன் பெயர் தானம்

6. பெண்கள் பாசம் தங்கம் போன்று
ஒரு நாள் கூடும் ஒரு நாள் குறையும்
ஆண்கள் பாசம் நிலையானது
இரும்பு போன்றது

**நடேஷ் கன்னா**
கல்லிடைக்குறிச்சி. 627416

# இணையேற்பு விழா வாழ்த்துகள்

## மணமகன் : செந்தில்குமார்

அன்புவளர் மார்பன்; அழகுவளர் பேரன்பன்;
இன்புவளர் வாழ்வின் இளம்பிறையோன்; - பண்பட்ட
செந்தில் குமார்இனிமேல்! சீர்கொள் மணவாழ்வில்
அந்தி நிலவாம் அறி.

## மணமகள் : பவித்ரா

அப்பிறையின் மேலே அழகு திலகமிட
இப்பிறவி பூண்ட இனியவளாம் - ஒப்பில்லா
பாசயிணை யாக பவித்ரா மணவாழ்வில்
நேசமுடன் வாழ்க! நெகிழ்ந்து.

## வாழ்த்துப்பா...

பூவனங்கள் எல்லாமும் புல்லத் தயாராகி
ஆவலுடன் கூந்தல் அடிசேரும் - தாவறுநற்
கட்டிலும் பாடும் கலந்து கலந்துநிதம்
தொட்டிலும் பாடும் தொடர்ந்து.

நேற்றுவரை ஆறுசுவை நித்தம் சுவைத்திருக்க
ஊற்றன்ன கூடும் ஒருசுவையாம் - ஈற்றுவரை
வாழாது வாழ வளர்கின்ற மோகம்தான்
ஏழாம் சுவையோ இனி?
.
வான்கலந்த மாமதியை வாவென் றழைத்துவந்து
தேன்கலந்து மேன்மேலுந் தேற்றிவிட - ஊன்கலக்கும்
இந்தநிலா ஒள்ளொளியே இன்பமென வாழ்ந்திடுவீர்
அந்தி நிலவொதுக்கி ஆம்.
.
அல்லிடையில் கண்விழித்த ஆளன் விழிகளினி
மெல்லிடையில் கண்விழித்து மேல்ரசிக்கும்! - சொல்லிடையில்
அவ்வப் பொழுதரும்பும் ஆசையெலாம் முத்தமிட்டுச்
செவ்வாய்ச் சிவக்கும் சிலிர்த்து.
.
இப்படியே உங்கள் இணைவாழ்க; வாழ்வெல்லாம்
ஒப்படியே அன்றி உயர்ந்திடுக - எப்பொழுதும்
பற்றிய கையோடும் பாசப் பிணைப்போடும்
தொற்றியே வாழ்க தொடர்ந்து.
.

தமிழ்நெஞ்சம் அமின்
பிரான்சு

18.04.2026

# தித்திக்கும் திங்களே செவ்வாய் மலர்வாயா

சித்திரமே முத்தாரமே
முழுமதியின் வடிவழகே

புன்னகைப் புரிந்திட
சிறுயிதழும் சிலிர்ப்பானதே

நறுமுகையே நாணலின்
அம்சமான ஏந்திழையே

வளைந்தாடும் சிற்றிடையில்
சிந்தையும் சிதறியதே

மாயக்காரியாய் மயக்கிய
பேரழகி நீதானே

வட்டநிலவான வஞ்சியே
வாலிபத்தை ஈர்த்தாயே



காதலில் விழுந்தேன்
கட்டழகியின் எழிலிலே

இதழோரச் சுழிப்பிலே
புதுக்கவிதை எழுதுகிறேன்

வர்ணனைக்கு அப்பாற்பட்ட
அழகு தேவதையே

தித்திக்கும் திங்களே
செவ்வாய் மலர்வாயா

தீஞ்சுவைப் பாவையே
தீண்டிச் செல்கிறாயே

உள்ளத்தில் உறவாகி
உணர்வினில் கலந்திட்டாயே

உயிரான ஓவியமே
வண்ணமயில் காவியமே

வெள்ளிச் சலங்கையின்
ஓசையில் உயிர்த்தேனே

எனைவிட்டு எந்நாளுமே
என்னவளே பிரியாதே

உன்னை நினைத்தே
உன்னுள் கரைகிறேனே

பெ.வெங்கட லட்சுமி காந்தன்.
விருதுநகர்

# வெண்பாப் போட்டி (பயணம்) 53

போட்டியின் காலம் ஏப்ரல் 01 முதல் 12 வரை 2026

பள்ளிகளில் அரசு பொதுத்தேர்வு வாழ்த்து

தோழி யொருத்தி தொலைதூரம் போய்வர
நாழிகை ஆகுதுன்னு நல்லவொரு தோழியாக
மூவுருளி வேண்டுமென்றாள் மூட்டுவலி உள்ளவள்தான்
தாவுகின்றாள் வேதனையில் தான்

குறிப்பு :
மாற்றுத்திறனாளி தோழிக்காக

எழுத்தாளர் நாகா

.

ஒன்றே குலமென்(று) ஒருவனே தேவனென்(று)
என்றும் ஒலித்திருக்கும் எந்தமிழை - தொன்றுதொட்டு
நல்பிணைப்பாய் தேர்ந்து நலம்செய் வதுடனே
எல்லார்க்கும் என்றிருப்பீர் ஏற்று.

பக்ருதீன் இப்னு ஹம்துன்

.

பெண்களை  நாம்கவர்ந்தால்  போதும் தமிழ்நாட்டில்
மண்ணோடு வென்றிடலாம் மக்களையும் - எண்ணியவர்
ஊறறிய முன்பணமும் முத்தாய்ப்பாய்க் கூப்பனும்
வாரிஇறைத் தார்க்கேதான் வாக்கு.

சுரேஷ் சீனிவாசன்

.

சுவரொட்டி கண்டாலும் சூடங்காண் பித்தே
இவரினி ஆளட்டும் என்று - கவரும்
எடுத்துக்காட் டாக இலவசக் கல்விக்(கு)
இடுவீர் முதல்கை யெழுத்து!

ஆனந்த் சுந்தரராமன்

ஓட்டலுக்குப் போய்அமர்ந்தால் உள்ளபணம் எல்லாமும்
கூட்டணியாய்ப் போகுது கூடியே - வாட்டும்
விலைவாசி வஞ்சகனை வீழ்த்த எனக்கே
நிலையான வாக்களிப் பீர் !

பாவலர் கோவதன், மலேசியா

.

பொட்டிட்டு பூமுடிச்சு போறப்போ ஊரெலாம்
வட்டமிட்டு வாழ்த்தி வழியனுப்ப - சட்டெனக்
கார்விபத்தில் பூவிழந்து பொட்டிழந்து கைம்பெண்ணாய்
ஓரிரவில் மாறியதே கோலம்.

சக்தி.க.மகராசி

.

ஒருநாள் சுகத்துக்காய் ஓட்டை யளித்து
வரும்நாளில் கொள்ளாதீர் வாட்டம் - இருள்நீக்கும்
நல்லார் ஒருவரை நாம்தேர்ந்து வாக்களித்தால்
இல்லாமை நீங்கும் இனி !

எம்.ஆர்.தனசேகரன், மலேசியா.

.

மக்களாட்சி மாண்பை மனிதமுடன் பேணுக
தக்கவாறு நல்லாட்சி தான்தருக - அக்கறையாய்
சிக்கனத்தைப் பேணிச் சிறப்பாக ஆண்டிடுக
எக்கணமும் மக்கள்நலம் எண்ணு (க).

பொ. முத்துராக்கு

மாற்றுத் திறனாளி மற்றும்நற் பெண்களுக்கு
ஏற்றதாம் திட்டங்கள் என்றுயர்வே - ஆற்ற
கடமை அழிக்கக் கையூட்டு முற்றாய்
மடமைத் தனமொழித்தல் மாண்பு.

.

பாவலர் கருமலைத்தமிழாழன், ஒசூர்



இலவசம் வேண்டாமே இல்லாமை செல்ல
வலசைப் பறவையாய் வாழும் உறவை
சிலரின் மதத்தால் சிதைப்பதும் நன்றோ
உலகின்தேர் தல்திருந்த ஊற்று

பாண்டிச்செல்வி கருப்பசாமி, கோவை

.

மனதை மயக்கும் மதுக்கடை மூடி
தினமும் மகளிரின் ஏற்றம் - கனக்கும்
இதயம் களிக்க இளையவர் என்றும்
உதயமது காண உதவு.

சோ. சுந்தரேசுவரி

.

ஆட்சியைக் கைப்பற்றும் ஆசையரே ஆக்கத்தின்
மாட்சிமை ஒன்றே மனங்கொள்வீர் - காட்சியைக்
காட்டா மறைத்தாலும் காலம் வெளிப்படுத்திம்
நீட்டாதீர் ஊழல் கரம்.

ப. முருகன் யோகீஸ்வரர்

.

வெற்றிதனைப் பெற்றபின் வேறுமுகங் காட்டாமல்
பற்றோடு நீங்கள் பணிசெய்தே - கற்பவரின்
கல்வியதை யென்றுமே காசுக்கே விற்காமல்
நல்வழி தேர்ந்திடின் நன்று .

இரா. சம்பந்தன், யேர்மனி

.

முத்தமிழைப் போற்றி முழங்கட்டும் ஆட்சியும்
எத்திசையும் ஆள்கதமிழ் எப்போதும் - முத்தெனவே
பண்பாட்டை எங்கும் பரவச் செய்திடுக
மண்ணாளும் மன்னா மகிழ்ந்து.

பாவலர்மணி வா.சண்முகம்

.

ஓட்டாலா நீர்ஜெயிந்தீர்? உங்களிடம் உள்ளபண
நோட்டாலே தான்ஜெயித்தீர் உண்மையிலே! - காட்டாதீர்
எங்களிடம் பந்தாக்கள்; பாட்சாக்கள்; இல்லையெனில்
இங்குவர மாட்டீர் இனி.

ஜாய் சத்தியா

.

வாங்கும் பொருளுக்கு வாக்கினை விற்றிடத்
தேங்கிய துன்பமது தீருமோ - ஓங்கிட
ஏங்கிய வாழ்வினை ஏழ்மைக்குத் தந்துயர்த்தித்
தாங்கிட வந்தால் தரம்

ஜனனி செல்வா

கோட்டையைக் கட்டிட கொத்தடிமை மீட்டிட×
நாட்டை வளமாக்கும் நல்லவரே - நாட்டமுள்ளோர்
வேட்கை தணிந்திட வெற்றிவாகை சூடிடவும்×
வேட்புமனு செய்வீர் விரைந்து×

கவிஞர் வீக பொன்னையா, புதுக்கோட்டை

.

சொன்னதைச் செய்யுங்க சூடு குறையாம
பொன்னாக மக்களும் போற்றுவாங்க - நன்மை
கிடைத்தால் நலம்தானே! கேளாமல் தாங்க!
அடைந்திடுவோம் நல்லாட்சி ஆம்.

ஓசூர் மணிமேகலை

.

ஆட்சிக்கு வந்தால் அனைத்துமே மாறுமென்று
ஓட்டுபோட்ட மக்களிடம் ஓதியதை - நாட்டமுடன்
நீங்களே வந்து நயமாகச் செய்திட்டால்
தாங்கிடுவர் என்றுமே தாழ்ந்து!

அ.வள்ளிபாபு, நெய்வேலி.



வல்லவர் நீங்களென வந்துவிட்டீர் நன்றுதான்
சொல்லிய வாக்குறுதி செய்யுங்கள் - நல்லவர்
சொன்னபடி நீங்கள் சொகுசு செய்தீர்கள்
என்றுநாங்கள் சொல்ல இயல்...

கு.கதிரேசன்

.

திருக்குறள் முற்றோதித் தேறும் இளைஞர்
மருத்துவம் ஐ. ஏ. எஸ் மற்றும் - விரும்பிய
கற்க இலவசக் கல்லூரி ஏற்படுத்தி
நற்பெயர் பெற்றிடுக நன்கு.

அ. சி. தியாகராசன்.

.

மக்களை வீண்செய் மதுவும்கள் கஞ்சாவும்
தக்காங்கே ஒழிக்கத் திறமை - முக்கியமாய்
ஆக்குகின்ற நண்பன் அருந்தவமாய்க் காப்பவர்க்கு
வாக்களித்து வென்றிட வே

கவிஞர் கவி நிலா மோகன், தஞ்சாவூர்.

.

ஓட்டையும் போடுவோம் ஓடியும் போவார்கள்
நாட்டையும் காத்திடும் நல்லவர்போல் - காட்டிடுவார்
மூட்டையும் கட்டிடுவார்  மூச்செல்லாம் வாக்குறுதி
நோட்டுகள் கைமாறும் நோக்கு .

சரஸ்வதி பாஸ்கரன்

.

நிலவுக்குப் பாதையிட்டு நித்தமும்  மக்கள்
செலவின்றிச் சென்றுவரும் சீராய் உலவும்ஸ்பேஸ்
விண்கலத்தைத் தந்து வியனாக்கும் !நல்லவர்க்கு
வண்ணமுடன் நானளிப்பேன் வாக்கு.

மாலதி திரு

.

நல்லவன் என்றுதான் நாமுமே தேர்வுசெய்யப்
பொல்லாத் திருடனாகிப் போகின்றான் - மெல்லவே
கொல்லுகின்ற நஞ்சாகிக் கொன்றே விடுகின்றான்
பல்லை இளித்தே பயல்.

- சி. செல்லமுத்து,  மேல்மங்கலம்.

.

சைடீஸ்  விலக்கி சரக்கடிக்கும் ஆண்களுக்கு
மைடியர் கேண்டிடேட்ம றக்காமல் - கைநிறைய
வாரமொரு கோட்டர் இலவசமாய் வந்துதந்தால்
ஊரெல்லாம் வெற்றியே உ.. மக்கு..!

வள்ளி முத்து

# வெண்பாப் போட்டி (பயணம்) 54

போட்டியின் கால அளவு  மே 01 முதல் 12 வரை 2026

இம்மாதப் போட்டி....

.

ஈற்றடி க்கு எழுதலாமா ?  இதோ ஈற்றடி....

.

## படிக்கும் பழக்கத்தைப் பற்று.

.

படிக்கும் பழக்கம் என்றதும் நூல்கள் மட்டுமே கண்முன் வந்துபோகும்...
சரி பரவாயில்லை  அதைத் தாண்டி வேறு எவற்றையெல்லாம் படிக்கலாம்????
சற்று வித்தியாசமான வெண்பாக்களை எதிர் பார்க்கிறோம்...

.

வழக்கம்போல் களம் முழுவதும் கவிஞர்களின் கற்பனைக்கு. மனதில் பட்டதை பட்டென்று போட்டு உடையுங்கள் வெண்டளையில். எல்லாம் கற்பனைக்கே... உங்கள் மனம் சொல்வதை சரியான இலக்கணத்தோடு பகிருங்கள் போதும்.

காலத்தை கவிஞர்கள் கையில் ஒப்படைக்கிறோம்....

தளர்வுகள் :- தனித்தமிழில் தான் பாடல் அமையவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. வாசித்தால் புரியும்படி இயல்பான வார்த்தைகளோ, அல்லது வட்டார வழக்குச் சொற்களோ பயன்படுத்தலாம். தளை தட்டாமல், புணர்ச்சி இல்லாமல், பிழையின்றி எழுதினாலே சிறப்பு.

என்றும் தமிழுடன்....
தமிழ்நெஞ்சம் ஆசிரியர்
மற்றும்
தமிழ்நெஞ்சம் ஆசிரியர் குழு .

**ஒருவர் ஒரு வெண்பா மட்டுமே எழுதவும்.**

## வாசகர்களுக்காக..

# வலிமைமிகு எண்ணங்கள்

( கட்டுரைத் தொகுப்பு )




**தொகுப்பாளர்கள்:**
**தமிழ்நெஞ்சம் அமின்**
**அன்புச்செல்வி சுப்புராஜ்**

**பக்கங்கள்: 480.** **விலை: 4X0**

**உங்களுக்காக: ரூ380/- மட்டுமே.**

அஞ்சல் செலவு: உங்களுக்காக நாங்கள்

**வேண்டுவோர் தொடர்பு கொள்க**

**Gpay: 8946082893**




# நிழல்கள்

நூலை இலவச தபாலில் பெற்றுக்கொள்ள 650.00 ரூபா பணத்தை கீழுள்ள ஏதாவது முறையில் வைப்பிலிட்டு பற்றுச் சிட்டையை 0768672030 என்ற இலக்கத்திற்கு பெயர், விலாசம், மாவட்டம், தொடர்பிலக்கம் என்ற ஒழுங்கு முறையில் அனுப்பி வைக்கவும்.

## Mutur JMI (Pvt) Ltd

Sampath Bank - Mutur
**Ac No - 120814031874**

BOC - Mutur
**Ac No - 72892830**

Peoples Bank - Mutur
**Ac No - 095200360053090**
**EZ Case Number**
**0771020030**

**இவ்விதழைப் படிக்க**

muththamizh.kalasam@gmail.com



# தமிழ்நெஞ்சம்

